பக்கங்கள்: இருபது + II = 22

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 01 ஞாயிற்றுக்கிழமை (18.10.2009) UTHAYAN-A Lively National Tamil Dailyதிர்: 326

## ஜி.எஸ்.பி. + வரிச்சலுகை கிடைக்குமா?

# சர்வதேச மனித உரிமை சாசனங்களை இலங்கை மீறியதாகக் கண்டறிவு

## ஐரோப்பிய ஒன்றிய விசாரணை அறிக்கை இன்று வெளிவரும்

பிரஸ்ஸெல்ஸ், ஒக்ரோபர் 18

**இலங்கை அரசாங்கம், மனித உரிமைகள் தொடர்பான 27 சர்வதேச சாசனங்களுக்கு மதிப் பளிக்காமல் அவற்றை மீறியுள்ளது.**

**இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக 'றொய்ற்றர்' செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.**

**விசாரணை அறிக்கை இன்று உத்தியோக பூர்வமாக வெளியிடப்படவுள்ளது.**

கடந்த சுமார் ஒருவருடகாலமாக இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு விசாரணைகளின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் அநேகமாக இலங்கைக்கு வழங்கப்பட்டுவரும் ஜி.எஸ்.பி. + வரிச்சலுகை நிறுத்தப்படும் நிலைமை உருவாகியுள்ளதாகவும் ஐரோப்பிய ஒன்றிய வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்ததாக 'றொய்ற்றர்' செய்தி மேலும் தெரிவித்தது.

''ஜி.எஸ்.பி + வரிச்சலுகையைப் பெறுவதற்கான விதிகளில் ஒன்றான அடிப்படை மனித உரிமைகளைப் பேணும் நிபந்தனையை இலங்கை அரசு நிறைவேற்றவில்லை என்பது மிகத் தெளிவாகி விட்டது'' என்று ஐரோப்பிய ஒன்றிய வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

தனக்கு வழங்கப்படும் ''ஜி.எஸ்.பி + வரியைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டுமெனில், இலங்கை (20 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதியான தீபாவளிக் கொண்டாட்டம் நேற்று

யாழ்ப்பாணம், ஒக், 18

குடாநாட்டில் தீபாவளிக் கொண்டாட்டங்கள் நேற்று அமைதியாக இடம்பெற்றன.

ஆலயங்களில் சமய வழிபாடுகளுடன் புத்தாடை அணிந்து அமைதியாக மக்கள் தீபாவளியைக் கொண்டாடினர்.

எனினும் சில இடங்களில் வெடி கொளுத்தியும் விசேட நிகழ்வுகளை நடத்தியும் மக்கள் தீபாவளியைக் கொண்டாடியதையும் அவதானிக்கமுடிந்தது.

இதேவேளை, புரட்டாதிச் சனி இறுதி நாளான நேற்று மக்கள் ஆலயங்களில் வழிபாடுகளில் பெரும் எண்ணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (அ-1)

## நல்லூர், யாழ்., கோப்பாய் பிரதேசங்களைச் சேர்ந்த 2,300 பேர் இன்று வவுனியாவிலிருந்து வருவர்

யாழ்ப்பாணம் ஒக், 18

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியா அகதி முகாம்களில் தங்கியுள்ளவர்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த மேலும் 2,300 பேர் இன்று யாழ்ப்பாணம் அழைத்து வரப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்தவர்களே இன்று அழைத்துவரப்படுவர்.

துரையப்பா விளையாட்டரங்கில் வைத்து இவர்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப் படவுள்ளனர். (20 ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகா – அரசு முறுகல் என்ற செய்தி வெளியான 'லங்கா' பத்திரிகையின் ஆசிரியர் சிறிமால்வத்த கைதாகி பொலிஸாரால் பின்னர் விடுவிப்பு

கொழும்பு, ஒக், 18

முன்னாள் இராணுவத் தளபதியும் முப்படைகளின் பிரதம அதிகாரியுமான சரத்பொன்சேகாவுக்கும் அரசுக்கும் இடையில் முரண்பாடு நிலவுவதாக செய்தி வெளியிட்ட ஜே.வி.பி. சார்பு பத்திரிகையான 'லங்கா' வின் ஆசிரியர் சந்திரமால் சிறிமால்வத்த நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

ஹோமகமவில் விளையாட்டுப் பயிற்சியில் நேற்று மாலை அவர் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளையில் அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

பத்திரிகை ஆசிரியர் சிறிமால்வத்தவை விசாரணை செய்த பின்னர் அவரை ஹோமகம பொலிஸார் நேற்றிரவு எட்டு மணியளவில் விடுவித்ததாகத் தகவல்கள் தெரிவித்தன.

முல்லைத்தீவில் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக செய்தி வெளியிட்டமை -

மற்றும் சரத்பொன்சேகா - அரசுத் தரப்புக்களுக்கு இடையில் முரண்பாடுகள் இடம்பெறுவதாக வெளி வரும் செய்திகள் குறித்து பொலிஸார் அவரிடம் விளக்கம் கோரினர் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## இலங்கை கப்பல் பயணிகள் உண்ணாவிரதத்தை நேற்றுக் கைவிட்டனர்

ஜகார்த்தா, ஒக்.18

அவுஸ்திரேலியாவுக்கு செல்லும் வழியில் கடந்த 11 ஆம் திகதி இந்தோனேஷியாவில் இடைநிறுத்தப்பட்ட கப்பலில் பயணம் செய்தவர்கள் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் மேற்கொண்ட உண்ணாவிரதப்போராட்டம் (20ஆம்பக்கம் பார்க்க)

## அகதிகளை மீளக் குடியமர்த்தும் பணி குடாநாட்டில் நவம்பர் மத்தியில் பூர்த்தியாகும் என்கிறார் வன்னித் தளபதி

கொழும்பு ஒக்.18

இடம் பெயர்ந்த மக்களை மீள் குடியமர்த்தும் பணி யாழ். குடாநாட்டில் நவம்பர் மாதம் 15 ஆம் திகதியளவில் பூர்த்தியடைந்துவிடும் என அரச தரப்பு அறிவித்துள்ளது.

வன்னிமாவட்ட படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் கமால் குணரத்தின இத் தகவலை வெளியிட்டார்.

இதுவரை 16 ஆயிரம் பேரை மீள்குடியமர்த்தியுள்ளோம். (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஈச்சிலம்பத்தை இடைத்தங்கல் முகாமிலிருந்து குடும்பத் தலைவர்கள் 15 பேர் நேற்று இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டனர்!

மட்டக்களப்பு, ஒக், 18

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டு திருகோணமலை, ஈச்சலம்பத்தை செண்பகம் மகாவித்தியாலயத்தில் உள்ள இடைத் தங்கல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தவர்களில் 15 ஆண்கள் இனந்தெரியாதவர்களால் நேற்றுக் கடத்திச்செல்லப்பட்டனர்.

சீருடை தரித்து வந்தவர்களே அவர்களைக் கடத்திச் (20 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா மருதங் குளத்தில் கொள்ளையன் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி; மற்றவர் கால் இழந்தார்

வவுனியா, ஒக், 18

வவுனியா எல்லப்பர் மருதங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் கொள்ளை நடவடிக்கையில் ஈடுபட்ட நபர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றொருவர் காலை இழந்தார்.

அந்தப் பகுதியில் உள்ள மூன்று வீடுகளில் ஒரு லட்சம் ரூபா பணம் மற்றும் 26 பவுண் (20 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையின் முதற் தர SINGER தொலைக்காட்சிகள்

தற்போது விசேட சலுகைகளுடன் யாழ் மக்களுக்காக

www.singersl.com

எந்த மாதிரியிலுமாலான உங்கள் பழைய தொலைக்காட்சிக்கு விலைக்கழிவுடன் புத்தம் புதிய தொலைக்காட்சி

விசேட விலைக்கழிவு

திருப்தி இன்றேல் பணத்தினை மீளப்பெறும் வாய்ப்பு

கிளைகள்: யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி

SINGER Plus

MORE BRANDS-MORE CHOICE

யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



யாழ்.பரியோவான் கல்லூரி பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் நேற்று முற்பகல் இறையியல் கல்விக்கான இரண்டாவது டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் பட்டமளிப்பு விழா இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கொழும்பு இறையியல் கல்லூரி அதிபர் ஜவோ பூபாலன் தலைமை உரையாற்றுவதை முதல் படத்திலும் -
பிரதம விருந்தினர் உரையினை கொழும்பு இறையியல் கல்லூரி ஸ்தாபகர் சபையின் உறுப்பினர் இரான் விக்கிரமரட்ண நிகழ்த்துவதை இராண்டாவது படத்திலும் -
இறையியல் கல்விக்கான டிப்ளோமாவை பூர்த்தி செய்த மாணவன் ஒருவருக்கு, பிரதம விருந்தினர் சான்றிதழ் வழங்குவதனை மூன்றாவது படத்திலும் -
நிகழ்வில் கலந்து கொண்டோரை நான்காவது படத்திலும் காணலாம்.
(படம் - உமா)

# இலங்கை அகதிகளின் எந்த தந்திரத்துக்கும் அசைந்து கொடுக்காதாம் ஆஸ்திரேலியா

## அரசியல் தஞ்சக் கோரிக்கை சரிவராது என்கிறார் அந்நாட்டுப் பிரதமர்

கொழும்பு,ஒக். 18

இந்தோனேஷியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டிருக்கும் இலங்கையர்களின் எந்தவொரு தந்திரோபாய நடவடிக்கைக்கும் ஆஸ்திரேலிய அரசு அசைந்து கொடுக்கவேமாட்டாது என்று ஆஸ்திரேலியப் பிரதமர் கெவின் ரூட் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்குப் படகு மூலம் சட்டவிரோதமாகச் செல்ல முயன்றவேளை, 260 இலங்கையர்கள் இந்தோனேஷியாவில் வைத்து இந்தோனேஷிய கடற்படையினரால் கடந்தவாரம் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தற்போது மேற்கு ஜாவா தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தமக்கு அரசியல் தஞ்சம் வழங்கவேண்டுமென ஆஸ்திரேலிய அரசையும், உலக நாடுகளையும் அவர்கள் கோரியுள்ளனர்.

''படகிலுள்ளவர்கள் வெளியே வர வேண்டும் உங்களுக்குத் தற்காலிகமாகத் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும் நீங்கள் முறைப்படி புகலிடம் கோரி விண்ணப்பிக்கலாம். அக்கோரிக்கை உரிய வழிமுறையில் பரிசீலிக்கப்படும்'' என்று அகதிகளிடம் இந்தோனேஷிய அதிகாரிகள் எடுத்துக்கூறி வருகின்றனர்.

ஆனால், இந்த அகதிகள் படகைவிட்டு இறங்காமல் தமது அரசியல் தஞ்சக் கோரிக்கையை வலியுறுத்தி சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் கடந்த வியாழக்கிழமை முதல் ஈடுபட்டு வருகின்றனர். எனத் தெரிவிக்கப்பட்டது. (சி)

## யாழ்.மாவட்ட அணி வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், ஒக். 18

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான மாகாண மட்டக் கிரிக்கெட் போட்டியில் யாழ். மாவட்ட தெரிவு அணி 30 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் யாழ்.மாவட்ட, மன்னார் மாவட்ட தெரிவு அணிகள் மோதின.

யாழ்.மாவட்ட அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் மாவட்ட அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங்களைப்பெற்றது. இதன் மூலம் யாழ். மாவட்ட அணி 30 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. (1-7-86)

## உளமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவனும், ஆறுகால்மடம், லோட்டஸ் வீதியில் வசிக்கும் அருந்தவநாதன் சகிலாராணி தம்பதியினரின் செல்வப் புதல்வனுமான

**அ.சங்கவன்**

2009 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 141 புள்ளிகளைப் பெற்று சித்தி எய்தியமையைப் பாராட்டுகின்றோம்.

புது றோட்,
ஆறுகால்மடம். (89996)

வாழ்த்துவோர்:
க.சுந்தரலிங்கம் குடும்பம் (ரங்கசிவம்).

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.மத்திய கல்லூரியில் கல்வி பயின்று 2009 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 149 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவி

**செல்வி செல்வக்குமார் தக்ஷாயினியை**

யாழ்ப்பாணத்திலுள்ள அம்மா சூரியகலா, அண்ணா குலதர்சன், பெரியப்பா, பெரியம்மா, சிறி அண்ணா, அம்மம்மா, சதிஸ் அண்ணா குடும்பம் (லண்டன்), கார்த்திகா அக்கா குடும்பம் (லண்டன்), சஞ்ஜீவன் அண்ணா (லண்டன்), சுகந்தன் அண்ணா குடும்பம் (ஜேர்மன்) ஆகியோர் பாராட்டி வாழ்த்துவதோடு எல்லாம் வல்ல விநாயகர் அருளால் எல்லாச் செல்வங்களும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

இல.7, 3ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை. (89989)

தகவல்:
பெரியப்பா குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2009 ஆம் ஆண்டு ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகள் பெற்ற சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன்

**செல்வன் சிவபரன் சிவகஜன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் வருங்காலங்களிலும் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகள் பெற ஆசி கூறுகின்றோம், அத்துடன் பரீட்சையில் சிறந்த பெறுபேறு கிடைப்பதற்கு ஊக்குவித்த ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

கச்சாய், வீதி,
சாவகச்சேரி. (சி/561468)

வாழ்த்துவோர்: ஆசைமாமா - ஆசைமாமி
(மீட்லண்ட், சாவகச்சேரி).

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

உதயசூரியன் நாகேஸ்வரி அவர்களின் செல்வப்புதல்வன் கேதீஸ் அவர்கள் இவ்வருடம் 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகளைப் பெற்று சித்திபெற்றமையை பாராட்டுவதோடு அவர் வெற்றி பெறுவதற்கு உறுதுணையாக இருந்த பெற்றோர், ஜோன் பொஸ்கோ வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், பாலகௌரி புஸ்பராசா அவர்களையும் நன்றி கூறிப்பாராட்டுகின்றோம்.

(89998)



த. நாகராசா
65. இராசாவின் தோட்டம்
யாழ்ப்பாணம்.

வாழ்த்துவோர்:
சித்தப்பா, சித்தி, மாமா, அத்தை, ...

## இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழி மிகக் குறைந்த விலையில் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

**A.S.S.பாம்,**

நியூ ட்டர் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில்.

## திருமண சேவை

### மணமகன் தேவை

Jaffna Roman catholic, 26 வயது B.Sc, Germany citizen அழகான பெண்ணிற்கு மணமகன் தேவை. இது ஒரு திருமண சேவை www.thaalee.com Profile No: 6677 T.p No : 2520619

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 36வயது அஸ்வினி நட்சத்திரம் ACCA - London university uk citizen மணமகனுக்கு மணமகள் தேவை. செவ்வாய்க்குற்றம் இல்லை. மூன்று சுற்றுக்கிரக பாவம் 13. இது ஒரு திருமண சேவை www.thaalee.com Profile No: 7015 T.p : 2523127

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 28 வயது அனுச நட்சத்திரம் B.Sc. Engineer, Australia citizen மணமகனுக்கு மணமகள் தேவை. 4 இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்றுக்கிரக பாவம் 37.இது ஒரு திருமண சேவை www.thaalee.com Profile No: 6939 T.p : 2520619

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 32 வயது ஆயிலிய நட்சத்திரம் B.Sc in computer Science, Canada citizen மண மகனுக்கு மணமகள் தேவை. 1 இல் செவ்வாய் உள்ளது. மூன்று சுற்றுக்கிரக பாவம் 34. இது ஒரு திருமணசேவை www.thaalee.com Profile No: 7079 T.p: 2520619

### திருமண சேவை

மணமக்களே www.thaalee.com என்கின்ற Web site இல் பல்லாயிரக்கணக்கான மணமக்களுடைய முழுமையான விவரங்கள், ஜாதகங்கள், புகைப்படங்கள் உள்ளன. நீங்களாகவே உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொண்டு எம்மை நாடினால் நாங்கள் ஆவன செய்வோம். உங்களுடைய விவரங்களையும் நீங்களாகவே பதிவு செய்து கொள்ள முடியும். மேலதிக விபரங்களுக்கு தொ.பே. 2523127, 2520619

## கண்ணீர் அஞ்சலி



சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் வித்துவ சபையின் மூத்த சிவாச்சாரியாரும் நயினை நாகபூஷணியம்மன் தேவஸ்தான சிவாச்சாரியாரும் குருகுல கலாசாலையின் வேதாகம ஆசிரியர் பிரம்ம ஸ்ரீ ப.ராஜகோபால சர்மாவின் அன்புத் தந்தையாரும் கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**சிவஸ்ரீ முத்துக்குருக்கள் பரமசாமி குருக்களின்**

மறைவுக்கு குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(90026)

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியமும்
குருகுல மாணவர்களும்.

## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா பூமாலைராசா



வீரமாணிக்கம் தேவன்துறை, மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் 'திருத்தணிகை', நவாலி றோட், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா பூமாலைராசா நேற்று(17.10.2009) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தானலட்சுமியின் அன்புக் கணவரும் நந்தகுமாரின் (சிறைச்சாலை உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்) அன்புத் தந்தையும் அபிராமியின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'திருத்தணிகை',
நவாலி றோட்,
ஆனைக்கோட்டை. (90028)

தகவல்:
பூ.நந்தகுமார் (மகன்).

### சரவணமுத்து பாஸ்கரன் (பாஸ்)



அல்லாரை வடக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது ஜேர்மனியில் வசித்தவருமாகிய சரவணமுத்து பாஸ்கரன் 13.10.2009 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சரவணமுத்து (ஓய்வுபெற்ற தபால் ஊழியர், கொடிகாமம்) - சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - லட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் கமலறோஜினியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும் சாருஜன் (ஜேர்மனி), நிறோஜன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மங்களேஸ்வரி (அமரர்), இரவீந்திரன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தயாநிதியின் மைத்துனரும் திருமதி கார்த்திகா - பிரமோகன் (கொழும்பு), டர்சிகா, கேசிகா, சரவணபவன், யனுஷா ஆகியோரின் சித்தப்பாவும் யதுசரனின் (கொழும்பு) பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(18.10.2009) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

111, பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம், தொ.பே.:0779134330 (90027)

தகவல்:
ச.இரவீந்திரன்
(சகோதரன் - ரவி)

### சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (கறுப்பையா)



பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (கறுப்பையா) நேற்று (17.10.2009) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கிறிஸ்ரீனம்மாவின் அன்புக் கணவரும், எட்மன் ஜோர்ஜ், யசிமா, ரவிதாஸ், கொலம்பஸ் (ஜேர்மனி), நிச்மன் (ஜேர்மனி), மேரிஜஸ்மின், மேரி கொண்சலா (ஆசிரியை, யா/பாஷையூர் சென். அன்ரனிஸ் மகளிர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வசந்தா, சில்வேஸ்ரர், உதயம், ராதிகா(ஜேர்மனி), ஜெனி (ஜேர்மனி), கொண்சாள்ஸ், தேவநாயகம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.10.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணிக்கு நல்லடக்கத்திற்காக இல.21, 1ஆம் குறுக்குத்தெரு, பாஷையூர் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இறுதிச்சடங்கு நடைபெற்று புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.21, 1ஆம் குறுக்குத்தெரு,
பாசையூர். (90024)

தகவல் :
அ.ரவிதாஸ் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத் தமிழ் இலக்கியப் பெருவிழாச் சர்ச்சைகளும், சலசலப்புகளும்!

கண்ணைக் கவரும் வகையிலும் தமிழரின் பண்பாட்டு விழுமியங்களையும் வெளிப்படுத்தும் வகையிலான பண்பாட்டுப் பேரணி!

யாழ்ப்பாண மன்னர் கால இலக்கியம், சமூகம்,



அரசியல் போன்ற பலதளங்களில் வெளிச்சம் பாய்ச்சுவது போல நடந்த ஆய்வரங்கு.

2008, 2009 ஆகிய இருவருடங்களுக்குமான ஆளுநர் விருதுகள், இலக்கிய நூல்களுக்கான விருதுகள் வழங்கல்.

புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியில் தமிழ்மொழி மூலத்தில் இம்முறை முதலிடம் பெற்ற ஶ்ரீ கர்சனுக்கு 1 லட்சம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கல்.

மிக நீண்ட காலத்தின் பின்னர் மிகப் பெரியளவில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கலை, இலக்கியம் சார்ந்த விழா.

இத்தகை பெருமைகளையும் ஒட்டு மொத்தமாக உள்வாங்கியபடி நிகழ்ந்திருக்கிறது வடமாகாணத் தமிழ் இலக்கியப் பெருவிழா. மூன்று நாள்களாக நடந்த இலக்கியப் பெருவிழாவில் நடந்தேறிய நிகழ்வுகளைக் கண்டுகளிக்கவெனப் பெருந்திரளான மக்கள் திரண்டதையும் இன்னொரு விசேடமாகக் கொள்ளலாம்.

மிகக் குறுகியகால ஏற்பாட்டுடன் வடமாகாணத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையில் நடந்தேறிய இலக்கிய விழாவின் வெற்றிக்காக உழைத்தவர்களின் வியர்வைத் துளிகள் விழாவின் ஒவ்வொரு நிகழ்வின் போதும் கண்முன்னே வந்து போகத் தவறவில்லை. எனினும் என்னதான் சிறப்புற நடந்து

## ஆய்வரங்கு குறித்து சிறுவரி தானும் இல்லை

முடிந்திருந்தாலும், இலக்கிய விழாவின் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை இது தொடர்பான எதிர்மறையான விமர்சனங்களும், முணுமுணுப்புகளும், சலசலப்புகளும் எழவே செய்கின்றன. இவற்றையெல்லாம் இலக்கிய விழா சிறப்புற நடந்ததைப் பொறுத்துக் கொள்ள முடியாதவர்களின் வயிற்றெரிச்சலால் வெளிப்படும் விமர்சனங்கள்தான் என ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கவும் முடியாதுள்ளது. அப்படி என்னதான் குறைகள் இலக்கியப் பெருவிழாவில் உள்ளன என்பதைக் கொஞ்சம் இங்கே நோக்குவது பொருத்தமாயிருக்கும்.

இலக்கியப் பெருவிழாவில் பங்கேற்பதற்கென பல இடங்களில் இருந்தும் பேராளர்கள் அழைத்து வரப்பட்டு இருந்தனர். அதிலும் வெளி மாவட்டங்களில் இருந்து தமிழ்மொழி மீதும், இலக்கியம் மீதும் கொண்ட உண்மையான நேசிப்புக் காரணமாக அலுப்பைத் தருகின்ற பயணச் சுமையையும் பொருட்படுத்தாது வந்திருந்த பேராளர்கள் உரிய முறையில் கவனிக்கப்படவில்லையென்றும், ஏற்பாட்டுக் குழுவினருக்கு 'அணைவான' ஒரு சிலர் மட்டுமே வசதியாகக் கவனிக்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டொன்று எழுந்துள்ளது.

விழாவுக்கெனப் பேராளர்களாகப் பங்கேற்க விரும்பியவர்கள் பஸ் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அதன்போது அவர்களின் தங்குமிடம், உணவு உள்ளிட்ட வசதிகள் ஏற்பாட்டாளர்களால் செய்து கொடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. அப்படியே தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்பட்டது. ஆயினும் அதில் பாரபட்சம் காட்டப்பட்டிருக்கிறது.

தனியாருக்குச் சொந்தமான - சகல வசதிகளும் கொண்ட - விடுதிகளில் ஒரு சிலர் தங்கவைக்கப்பட்டனர். ஏனையவர்கள் யாழ்.நகரில் உள்ள பிரபலமான பாடசாலையொன்றில் தங்கவைக்கப்பட்டனர். இதனால் நுளம்புத் தொல்லை, தண்ணீர் வசதியீனம் போன்றவற்றால் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ள பேராளர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கியதாகக் குறைகூறப்பட்டது.

இதைவிட ஒரு விழாவுக்கு இரண்டு அழைப்பிதழ்கள் அச்சடித்த வேடிக்கையும் இம்முறை இலக்கியப் பெருவிழாவில் நடந்திருக்கிறது. இலக்கியப் பெருவிழாவின் முதல்நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வதாக இருந்தது. ஆயினும் முதலில் விநியோகிக்கப்பட்ட அழைப்பிதழில் அமைச்சரின் பெயர் இடம்பெறவில்லை. இதனைக் காலம் தவறிய பின்னர் உணர்ந்த ஏற்பாட்டாளர்கள் பின்னர் அதே போன்று அழைப்பிதழை - அமைச்சரின் பெயரை



உள்ளடக்கி - அச்சிட்டு விநியோகித்தனர். எனினும் பெரும்பாலான ஊடகங்கள் முதலில் தமக்குக் கிடைத்த அழைப்பிதழை அடிப்படையாகக் கொண்டே முதல்நாள் நிகழ்வு பற்றிய செய்திகளைப் பிரசுரித்ததால், பொதுமக்கள் நிறையவே குழம்பிப் போனார்கள்.

அத்துடன் இவ்வாறு விநியோகிக்கப்பட்ட அழைப்பிதழில் நிகழ்வுகள் யாவும் பிற்பகல் 2.30 மணிக்கே ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த அழைப்பிதழில் காலையில் நடைபெறும் மிக முக்கியமான நிகழ்வான ஆய்வரங்கு பற்றி ஒரு சிறுவரிகூட இடம்பெறவில்லை. இதனால் இலக்கியப் பெருவிழா நடைபெற்று முடிவடைந்த பின்னரே ஆய்வரங்கு நடந்த விடயம் பலருக்குத் தெரியவந்திருக்கிறது. இன்னும் சிலருக்கு இன்னமும் தெரியாதிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. யாழ்ப்பாணத்து தமிழ்மன்னர் காலத்தை மீள்வாசிப்புச் செய்யும் வகையில் அமைந்த ஆய்வரங்கினை உரியமுறையில் விளம்பரப்படுத்தாமையால், மொழிமீதும், கலை, இலக்கியம் மீதும் ஆர்வங்கொண்ட பலர் இதனைத் தவறவிட்டுள்ளனர்.

ஆய்வரங்கின் போது [illegible] திரள் நிறைந்ததாகக் காட்டுவதற்குப் பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனர். உண்மையில் ஆய்வரங்குகள் மாணவர்களின் பாடப்பரப்புகளைத் தாண்டி விரிந்த வெளிகளை நோக்கி நகர்பவை. இதனால் ஏற்கனவே பாடத் திட்டத்தில் கூறப்பட்டிருக்கும் பல விடயங்கள் ஆய்வரங்குகளில் மறுத்துரைக்கப்படும் சாத்தியமே மிக அதிகம். இந்நிலையில் ஆய்வரங்கு நிகழ்வில் 'தலை எண்ணிக்கையைக் 'காட்டுவதற்காகக் கொண்டுவரப்பட்ட மாணவர்கள், 'பாடத்திட்டத்தில் கூறப்பட்ட விடயத்தையா அல்லது ஆய்வரங்கில் அது மறுக்கப்பட்டதையா புரீட்சைகளில் எழுதுவது?' என்ற குழப்பத்துக்குள் கண்டிப்பாகச் சிக்க நேரிடும். எனவே 'ஹவுஸ்புல்' என்ற நிலையைத் தோற்றுவிப்பதற்காக மாணவர்களைக் கொண்டு வந்து இருத்தி, சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்த கதையாக அவர்களை முழிக்கச் செய்யாமல் ஏற்பாட்டாளர்கள் தவிர்த்திருக்க வேண்டும் எனப் பரவலாகக் கூறப்படுகிறது.

ஆய்வரங்கில் - ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தவர்கள் அனைவரும் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். ஒருவர் கூட வெளியில் இருந்து தெரிவுசெய்யப் படவேயில்லை. இதனால் சில சமயங்களில் ஒரு முகப்பட்ட நோக்கினையே ஆய்வுக் கட்டுரைகள் சிலவற்றில் தென்பட்டதாகப் பேராளர்கள் சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

விருதுக்குரியவர்களுக்கு உரிய காலத்தில் முன்னறிவித்தல் கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. குறிப்பாக ஆளுநர் விருதுக்குரியவர்களுக்கு ''பிற்பகல் 4 மணிக்கு விருது வழங்கப்பட இருக்கிறது. நேரில் வந்து விருதைப் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று விருது வழங்கப்படும் தினத்தன்று - பிற்பகல் 2 மணிக்குத்தான் - அறிவிக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய மிகக் குறுகிய கால அவகாசத்திலேயே அவசர அவசரமாக ஆளுநர் விருதுக்குரியவர்கள் விழா மண்டபத்துக்குச் சென்றிருக்கிறார்கள். இவ்வேளையில் இதுதான் விருதுக்குரியவர்களுக்கு வழங்கப்பட்ட கௌரவமா? என்ற வினா எல்லோரிடையேயும் எழுவதும் தவிர்க்க இயலாததாகின்றது.

இதேவேளை வடமாகாணத்தைச் சேர்ந்த மூத்த தமிழறிஞர்கள் சிலரும், கலைஞர்கள் பலரும் அழைப்பிதழ் கூட அனுப்பப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றனர். இதற்குச் கலாசார உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு செல்வாக்குச் செலுத்தியுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. இந்நிலை ஒருவித ஓர வஞ்சனைத் தன்மையோடே இலக்கிய விழா நடத்தப்பட்டதோ என்ற தோற் றப்பாட்டை உண்டு பண்ணிவிடும் அபாயமும் உண்டு.

'சிங்காரக் கொண்டையாம் உள்ளே ஈரும் பேனுமாம்' என்கிற மாதிரி வெளித்தோற்றத்திற்குச் சிறப்புற இலக்கிய விழா நடந்து முடிந்திருந்தாலும் இத்தகைய



குறைகளையும் கொண்டிருகக்கவே செய்கிறது. இக்குறைகளை எதிர்காலத்தில் நிவர்த்திக்க உரியவர்கள் முயல வேண்டும் என்பதே பலரின் விருப்பமாகும். ***

- துருவியன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிருக்கான குறுகிய கால பயிற்சிகள்

**கலாலயா** பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

கடந்தமாதம் ஆரம்பமான புதிய வகுப்புகளில் செவ்வாய், புதன் பிரிவுகளுக்கு மட்டும் கேக் ஐசிங், கூந்தல் அலங்காரம், தையல், Fabric Painting, Saree Work பயிற்சிகளுக்கு குறிப்பிட்டளவு புதிய மாணவிகள் உடன் அனுமதிக்கப்பட உள்ளனர்.

மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாட்களில் பி.ப. 2.00 மணிவரை நேரில் அறிந்து கொள்ளலாம்.


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றும்
திருமதி பாக்கியறஜனி பத்மநாதன்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி சிவபாக்கியம் சிவராஜசிங்கம்
16.10.2009 அன்று இறைவனடி சேர்ந்தமையையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மயிலணி சைவ ம.வி.,
சுன்னாகம். (89999) பாடசாலைச் சமூகம்.


அனைவருக்கும் எம் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

உங்கள் இல்லங்களை அழகுபடுத்த கவரும் வர்ணங்களை அள்ளி வழங்குகின்றது

**asianpaints**

ஏஷியன் பெயின்ற்ஸ் அக்ரிலிக் எமல்சன்

*நீண்டகாலப் பாவனைக்கு ☞ மிருதுவான வேலைப்பாட்டிற்கு ☞ கூடுதலான பரப்பளவிற்கு பூசக்கூடியது ☞ பிரகாசமானது, பளபளப்புத் தன்மை கொண்டது ☞ கவர்ச்சி மற்றும் தெளிவுமிகு வர்ணங்களைக் கொண்டதும் பாரிய எண்ணிக்கையிலான நிறவரிசை பல்வேறு வர்ணங்களைக் கொண்டதும். இவையெல்லாம் உங்களது பணத்திற்கும் மேலான பெறுமதி பரிபூரண மன நிம்மதி. 7வருட உத்தரவாதம். துடன் வெயில், காற்று, மழையின் தாக்கத்திற்கு காக்கும் வகையில் உருவாக்கப்பட்டதுதான்.*

ஏஷியன் பெயின்ற்ஸ் வேதர்ரவ் அல்ரிமா
(Asian Paints Weathertuff Ultima)




*உங்கள் வர்ணப்பூச்சுத் தேவைகள் அனைத்திற்கும் உங்கள் பிரதேச ஏஷியன் பெயின்ற் விற்பனையாளர்களை நாடுங்கள்*

ஏஷியன் பெயின்ற்ஸ்
*வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்*




**யாழ்ப்பாண இரும்பகம்**

32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P: 222 7028



## ஆண் விற்பனையாளர் தேவை

எமது மருந்தகத்துக்கு அனுபவம் மிக்க மருந்து விற்பனையாளர் தேவை. காலை 10 மணிமுதல் இரவு 8 மணி வரை கடமையாற்றக்கூடியவராக இருக்க வேண்டும்.

தொடர்பு: இளவரசன் மருந்தகம்,
462 D, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 8083. (89998)


## செயலமர்வும் நடமாடும் சேவையும் பிற்போடப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஒக்.18

வடக்கின் வசந்தம் 180 நாள்கள் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணம், வேலணை, சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலகங்களில் எதிர்வரும் 20ஆம் திகதி முதல் நடைபெறவிருந்த பிரதேச செயலாளர், அலுவலக அலுவலர்களுக்கான அறிவுறுத்தும் செயலமர்வு, கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவையும் பிற்போடப்பட்டுள்ளன. இந்த நிகழ்வுகள் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப் பட்டுள்ளன என யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (204)

## உடுவில் திருட்டுச் சம்பவம் இளைஞர் ஒருவர் கைது

பட்டப்பகல் வேளை உடுவில் பகுதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் சம்பந்தமாக சந்தேகத்தின் பெயரில் பொலிஸாரினால் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உடுவில் கற்பகப் பிள்ளையார் கோயிலடியில் உள்ள வீடொன்றினுள் நுழைந்த திருடன் அங்கிருந்து சுமார் ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைத் திருடிச் சென்றுள்ளான். (1-86)

## கவிதை நூல்களுக்கான விருதுக்குத் தெரிவு

யாழ்.இலக்கிய வட்ட அனுசரணையுடன் கவிஞர் வே.ஐயாத்துரை ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட கவிதை நூலுக்கான விருதுக்கு பெண்ணியாவின் ''இது நதியின் நாள்'', துவாரகனின் ''மூச்சுக்காற்றால் நிறையும் வெளிகள்'' ஆகிய நூல்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (1)

## 16ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 14. 06. 1952
மறைவு 02. 10. 2009

திருமதி
## உருத்திரன் இரத்தினபூபதி

ஆலமரம் வீழ்ந்ததோ
காலன்கை சேர்ந்ததோ
கண்ணீர்க் கடல் மூழ்க
காலமது வந்ததோ
பாசம் மிகு தெய்வமே!
நேச மிழந்து வாடுவதோ
ஆசைமுகம் தேடி இனி
அன்புடையார் அலைவதுவோ!

*இன்று (18.10.2009) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

என்றும் உங்கள் நினைவுடன்:
கணவர்- உருத்திரன், மகன்- பிரதீபன்,
மருமகள்- தனுஷா.

பூபதி அகம்,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (9008)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் சிவஸ்ரீ முத்துக்குருக்கள் பரமசாமி குருக்கள்

(முன்னாள் பிரதமகுரு, கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயில், சிவாகம கலாநிதி, வேதாகம மாமணி, சிவாகம வஸஸ்பதி, பிரதிஷ்டா சிரோன்மணி, பிரதிஷ்டா கிரியா கலாபமணி, வேத சிவாகம பிரதிஷ்டா சரஸ்வதி, வேதமந்திர ஞானபானு , வேதாகம ஞான ஸாகரம், கிரியா கலாபமணி)

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயில் பிரதமகுரு
**சிவஸ்ரீ ப.சண்முகராஜக் குருக்கள்** அவர்களின் அன்புத்
தந்தை அமரர் **சிவஸ்ரீ வை.மு.பரமசாமி** குருக்கள்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீரஞ்சலியையும்
தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா கண்ணகைத் தாயின்
திருவடியைச் சென்று சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் தேவஸ்தான
பரிபாலன சபையினர்.

(சி/561472)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைச்சுடர்

## திரைவிமர்சனம்



அஜ்மல், அறிமுக நடிகை ரூபா, மௌலி போன்றோரின் நடிப்பில் நந்தினியின் இயக்கத்தில் வெளியாகியுள்ள திரைப்படம் 'திரு திரு துறு துறு'.

எல்லா விடயங்களிலும் அசட்டைத்தனமாக இருப்பவர் அஜ்மல். ஆனால் நாயகி ரூபாவோ அதற்கு நேர் எதிர். எதையும் கனகச்சிதமாகச் செய்து முடிப்பவர். அஜ்மலுக்கும் ரூபாவுக்குமிடையில் எப்போதும் ஏட்டிக்கு போட்டிதான். அவர்கள் பணிபுரியும் நிறுவனத்தில் உரிமையாளர் மௌலி அஜ்மலைத் தனது மகனாகவே எண்ணுகிறார். இந்நிலையில் அந்த நிறுவனத்தின் விளம்பரப்படம் ஒன்றிற்காக சிறு குழந்தையொன்று தேவைப்படுகின்றது. அதற்காக அலைந்து திரிந்து கொழு கொழு குழந்தையொன்றைக் கொண்டு வருகின்றார் அஜ்மல். ஆனால் அது ஒரு கடத்தப்பட்ட குழந்தை என்பது அஜ்மலுக்குத் தெரியாது. இந்நிலையில் அந்தக் குழந்தை பெற்றோரிடம் போய் சேர்ந்ததா? அஜ்மல் அதற்காக என்ன முயற்சியில் ஈடுபட்டார்? என்பதையெல்லாம் நகைச்சுவையோடு, ஜெட் வேகத்தில் சொல்லியிருக்கின்றது இத் திரைப்படம்.

புது முக நாயகி ரூபா நடிப்பைச் சரளமாக வெளிப்படுத்தியிருக்கிறார். தமிழில் நல்லதொரு எதிர்காலம் அவருக்கு உண்டு.

அதே போல வழமையாகவே நடிப்பில் பின்னியெடுக்கும் அஜ்மலும் தன்பங்கைக் குறையேதும் இன்றிச் செய்து முடித்துள்ளார். மணிசர்மாவின் இசையில் அமைந்துள்ள பாடல்கள் ஒவ்வொன்றுமே தாலாட்டுப்போல இனிமையாக வந்துள்ளது. சுதிரின் ஒளிப்பதிவும் படத்திற்கு பலமூட்டுகின்றது. நந்தினி தன்னுடைய முதல் படத்திலேயே அமர்க்களமான இயக்குநர் என்ற முத்திரையை ஆழமாகப் பதித்துள்ளார்.

மொத்தத்தில் 'திரு திரு துறு துறு' திரைப்படம் விறுவிறு கதையோடு பார்ப்போரை கவர்ந்திழுக்கின்றது. ★★★★★★★



## அடுத்து.....?

பாலா இயக்கிய 'நான் கடவுள்' திரைப்படம் பலத்த வரவேற்பை பெற்ற அதேவேளை கடுமையான விமர்சனங்களுக்கும் உள்ளாகியது. குறிப்பாக உடல் ஊனமுற்றவர்களை இழிவு படுத்தும் வகையில் இப்படத்தில் பல காட்சிகள் வருவதாகத் தெரிவித்து தமிழ்நாடு ஊனமுற்றோர் சங்கத்தினர் பாலாவுக்கு எதிராக வழக்கு ஒன்றினைத் தாக்கல் செய்தனர். இந்த நிலையில் அந்த வழக்கை ரத்து செய்யவேண்டும் என்று கோரி அண்மையில் பதில் வழக்கு ஒன்றை பாலா தாக்கல் செய்துள்ளார். 'நான் கடவுள் திரைப்படம் ஓடி முடிந்து விட்டது இதனால் அத்திரைப்படத்திற்கு தடைவிதிக்கக் கோரி ஊனமுற்றோர் சங்கம் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்' என்று பாலா தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது. எனினும் இது தொடர்பான தீர்ப்புகள் எவ்வாறு அமையும் என இது வரை தெரியவில்லை. அதன் பின்னரே அடுத்த கட்ட நகர்வு பற்றி பாலா ஆலோசிக்கப்படவுள்ளதாக கூறப்படுகின்றது. ★★★★★★

## சிக்கல்



வித்தியாசமான கதாபாத்திரங்களில் நடிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ள சூர்யா, பிரபல ஹிந்திப்பட இயக்குநர் ராம் கோபால் வர்மாவின் இயக்கத்தில் 'ரக்த சரித்ரா' என்ற தெலுங்குப்படத்தில் நடித்து வருகின்றார். இது ஆந்திராவில் ஒருகாலத்தில் பிரபல தாதாவாக இருந்த பரிட்டால ரவி என்பவரைப்பற்றிய உண்மைக்கதையை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்டு வருகின்றது. பரிட்டால ரவியாக விவேக் ஓபராயும், அவரின் வலதுகையாளாக சூர்யாவும் பாத்திரம் ஏற்றுள்ளனர். இப்படத்தின் படப்பிடிப்பு வெகுவேகமாக நடைபெற்று வரும் நிலையில் பரிட்டால ரவியின் மனைவியும் ஆதரவாளர்களும் தொடர்ந்து படப்பிடிப்பை மேற்கொள்ளக்கூடாது என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். சிக்கலில் சிக்கியுள்ள இத்திரைப்படத்திலிருந்து விலகிக் கொள்ளலாமா என சூர்யா யோசித்து வருகின்றார்.

*******************************

## அனுஷ்காவுக்குக் கோயில்



அருந்ததி என்ற படத்தின் மூலம் ஒரே நாளில் உச்சாணிக்கொப்புக்கு போனவர் நடிகை அனுஷ்கா. அந்தப்படத்திற்கு பின்னர் இவருடைய மவுசு அதிகரித்தது. கோடிக்கணக்கில் சம்பளம் பெறும் நடிகைகளில் ஒருவராக அனுஷ்காவும் மாறியுள்ளார். இந் நிலையில் அனுஷ்காவின் ரசிகர் சங்கத்தினர் அனுஷ்காவுக்கு கோயில் ஒன்றைக் கட்ட முடிவுசெய்துள்ளனர். ஆயினும் இது பற்றி தகவல் அறிந்த அனுஷ்கா அதெல்லாம் வேண்டாம். என்று அத் திட்டத்தை நிராகரித்து விட்டார். இதனால் கோவில் கட்ட துடியாய் துடித்த அனுஷ்காவின் பக்தர்கள் இப்போது ஏமாற்றத்தில் உள்ளனர்.

★★★★★★

## பறிபோகுமா விருது?



தன்னுடைய நகைச்சுவைகள் ஊடாகச் சமூக விழிப்புணர்வுக் கருத்துக்களைப் பரப்பியமைக்காக நடிகர் விவேக்குக்கு இந்திய மத்திய அரசு பத்ம பூஷணம் விருது வழங்கிக் கௌரவித்தது. ஆயினும் அண்மையில் நடிகர் சங்கத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத் தில் பத்திரிகையாளர்களை விவேக் வாங்கு வாங்கென்று வறுத்தெடுத்து விட்டார். இதனால் கடுப்பாகிப்போன பத்திரிகையாளர்கள் அவசர அவசரமாகஆலோசனை நடத்தியுள்ளார்கள். இதில் பத்மபூஷணம் விருதுக்கு அவமரியாதை ஏற்படுத் தும் விதத்தில் விவேக் நடந்து வருவதால் அவருடைய விருதை மத்திய அரசு மீளப்பெறவேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது. ஆயினும் இவர்களது கோரிக் கைக்கு மத்திய அரசு இணங்குமா என்பது கேள்விக் குறிதான் ★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் உப அதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திருமதி செல்வராஜேஸ்வரி பொன்னுசாமி அவர்களது அன்புத் தாய்

திருமதி சிவக்கொழுந்தம்மா பொன்னுசாமி அவர்கள்

16.10.2009 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயரடைவதுடன் அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி. [89997] ஆசிரியர்கள், மாணவர்கள்.

## அறிவிப்பாளராக உங்களுக்கு விருப்பமா?

யாழ்.மண்ணில் முதல்முறையாக
வாரணம்FM சர்வதேச இணைய வானொலி ஊடாக
தரமான அறிவிப்பாளராக அரியவாய்ப்பு!
தமிழில் சிறந்த உச்சரிப்பு, பேச்சாற்றல், இசைத்துறை, எழுதுதிறன், நடிப்பாற்றல், இதர கலைத்துறை ஆர்வலராயின்

### வாரணம்FM இன் ஒலிபரப்பாளர், இதழியல் டிப்ளோமா பயிற்சி பட்டறையில் இணைவதற்கு..

1. க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் தமிழ் திறமைச்சித்தி உட்பட உயர்தரம், பல்கலைக்கழக அனுமதிபெறத்தக்க பெறுபேறு. (இவ்வருடம் உயர்தர பரீட்சையில் தோற்றியவராயின் தமிழ் விசேட சித்தி பெறுபேறு)
2. கணினித்துறை, கலைத்துறையில் ஈடுபட்டமைக்கான சான்றிதழ்கள்.

இவற்றுடன் கூடிய சுயவிபரக்கோவையை 05.11.2009 க்கு முன் கீழ்வரும் தலைமை அலுவலக முகவரிக்கு அனுப்புங்கள்.

:: இப்பயிற்சி பட்டறையில் இணைவோருக்கு ::

* சர்வதேச புகழ்பூத்த மூத்த ஒலிபரப்பாளர்கள் சிரேஷ்ட ஊடகமுன்னோடிகளால் விரிவுரைகள்.
* ஊடகங்களில் உள்ளகப்பயிற்சி, நேரடி கலையகப்பயிற்சி.
* இலங்கையின் பிரபல வானொலிகளின் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு.
* பூர்த்திசெய்யும் தகுதியானோருக்கு பொருத்தமான வேலைவாய்ப்புக்கான முயற்சிகள் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்.

**இதழியல் டிப்ளோமா பயிற்சி நெறியை தபால் மூலம் கற்பதாயின் விண்ணப்பத்தின் இடது மேல் மூலையில் "தபால் மூல இதழியல்" என குறிப்பிடவும்.**

## வாரணம்FM

Managing Director, No.58, Joseph Dias Mawatha,
Modara, Colombo-15. T.P No: 2521281 E-mail: varanamfm@yahoo.com
www.varanamfm.com




ஜேர்மனியில் வசிக்கும்,
**அருள்ராஜ் - றேணுகா**
தம்பதியினரது செல்வப் புதல்வன் **சஞ்ஜய்** தனது இரண்டாவது பிறந்த நாளை இன்று (18.10.2009) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியமாமா, சித்தி, சின்னமாமா ஆகியோர் ஞான வைரவர் அருளால் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றனர்.

கனகசபை றோட்,
மானிப்பாய்.
தகவல்:
அம்மப்பா, அம்மம்மா. (89999)

## விற்பனைக்கு

52-XXXX இலக்கமுடைய இசுசு, ELF 150 ரக (Dual purpose) வான் விற்பனைக்குண்டு.
தொடர்பு:தொ.பே.0213214620/0771869015
(90002)

## தவறிவிட்டது

காளிகோயிலடி, பத்த மேனி, அச்சுவேலியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை செல்வினி என்பவரது தே.அ.அ (845804532V) கோப்பாய்க்கும் அச்சுவேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். (90003)

## வீடு வளவு விற்பனைக்கு

யாழ்.புத்தூர் சிவன் கோயிலுக்கும், சிறுப் பிட்டிக்கும் இடையில் 5 பரப்புக் காணியில் வளங்களுடன் உள்ள வீடு விற்பனைக்குண்டு. Colombo இலும் உறுதி முடிக்கலாம்.
கண்ணன்: T.P. 0112554813
(சி/561281)

## வான் விற்பனைக்கு

56, குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நல்ல நிலையில் உள்ள PO5 மிற்சுபிசி வான் 59xxxx உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0776067026
(89984)

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுய தெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.
கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.

## பரிசளிப்பு விழா

குருநகர், ஒக்.18

குருநகர் 'பிறெயின் பவர்' கல்வி நிறுவனத்தின் பரிசளிப்புவிழா நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் ஆசிரியர் சங்கத் தலைவர் என்.பி.கஜீதரன் தலைமையில் நடைபெற உள்ளது.

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியின் பகுதித் தலைவர் வண.பிதா ரி. யூட்தாஸ் அடிகளார் பிரதம விருந்தினராகவும், யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலய அதிபர் அ.ஞானப்பிரகாசம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்த நிறுவன மாணவிகளின் இசைநடனம், சிறப்புப் பட்டிமன்றம், சமூகநாடகம் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

(1-51)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி கணேசமூர்த்தி - ஜெயமலர் தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும், யா/ மயிலணி சைவ மகா வித்தியாலய மைந்தனுமாகிய

**செல்வன் க.பானுஜன்**

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 162 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்ததற்காக, அன்னைபோல் அரவணைத்து அறிவை அள்ளி வழங்கிய ஆசிரியைகளான திருமதி வா.சச்சிதானந்தம், திருமதி இ.நகுலேஸ்வரன் ஆகிய இருவரையும் வாழ்த்தி நன்றி கூறுவதுடன் நம் செல்வன் மேலும் பல துறைகளிலும் வளர வாழ்த்துகின்றோம்.

கப்பம் புலம்,
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
வாழ்த்துவோர்:
ஞானசேகரம் - கண்மணி தம்பதினர். (89990)

## ACCOUNTING COURSE BANKING ASSISTANT

Recognized Certificate 59 YEARS EXPERIENCE & SRI LANKA'S NO.1 GENUINE INSTITUTE

**REGISTRATION OF STUDENTS ON THE JOB TRAINING**



**REGISTERED UNDER THE TERTIARY AND VOCATIONAL EDUCATION PARLIAMENT ACT No. 20 of 1990**

Applications of registration for the following courses for Advanced Level Science/Arts/Commerce students who intend applying for accounting vacancies detailed below will be issued till the 28 November 2009 for all Sri Lankan citizens from Institute of Administrative Practical Accounting Training

### ACCOUNTING Vocational Training Courses

1. ACCOUNTS CLERK
2. AUDIT CLERK
3. BANK CLERK
4. GENERAL CLERK
5. BOOK – KEEPER
6. STORE – KEEPER
7. ACCOUNTS ASSISTANT
8. ACCOUNTS OFFICER
9. AUDIT ASSISTANT
10. AUDIT OFFICER
11. ACCOUNTS EXECUTIVE
12. AUDIT EXECUTIVE
13. ACCOUNTS TRAINEE
14. BANKING ASSISTANT
15. COMPUTERIZED ACCOUNTING

### BANKING Vocational Training Courses

BANKING ASSISTANT

### COMPUTER ACCOUNTING

Vocational Training Courses

16. COMPUTER ACCOUNTING PACKAGES
17. ACC PAC SIMPLY
18. QUICK BOOK
19. PEACHTREE
20. QUICKEN
21. M.Y.O.B.

### EDUCATIONAL QUALIFICATIONS

* Six passes in the G.C.E. Ordinary Level Examination required for Course Nos. 1,2,3,4,5,6,15,16,17,18,19,20 and 21
* Two passes in the G.C.E. Advanced Level or six passes with three Credits in the G.C.E. Ordinary Level Examination required for Course Nos. 7, 8, 9, 10, 11, 12 and 14
* Those who sat for the O/Level Exam this year can apply for Course No. 13

*Mediums of instruction – English/Sinhala/Tamil*

### TRAINING CENTRES

* Colombo 7 • Negombo • Kurunegala • Bambalapitiya
* Nugegoda • Kandy • Gampaha • Galle
* Kalutara • Wellawatte • Trincomalee • Jaffna

**Extremely limited number of seats available**

Last date of issue of applications: *28th November 2009*

To obtain applications and complete details, please send a stamped 9 X 4 envelope to the address given below.

**Applications are issued only by post.**

**Instutute of Administrative Practical Accounting Training**
74, 37th Lane. Wellawatta, Colombo 6.
Tel : 0777561336, 0773732665
Email : nalavaithilingam@hotmail.com

## From Samudra Book Publications

For Early child hood Development Education (Pre School Students)

* **New Millennium Reader 1** - (S.F.R.A. Cader)
  A reader with three letter words written with phonics sounds
* **New Millennium English Workbook** - Grade 1
  (S.F.R.A. Cader) Activity Based Guide for Learning English
* **Pre Writing Skills Practice,** ஆரம்ப மொழி எழுத்துப்பயிற்சி
  Writing Skills development for Tamil Sinhala & English Language
  (Development Eye - Hand co-ordination)
* **Alphabet Writing Practice (Capital Letters)**
  **Alphabet Writing Practice (Simple Letters)**
  **Alphabet Writing Practice (Capital & Simple Letters)**
* **Ape Akuru Huruwa 1** (9 Rule format)
  Practice of Sinhala Letters Based on the New Curriculum of Sri Lanka
* **Easy Draw - 1**
  Graded colouring assignments suitable for steadying the finger - musales of the child in a play way manner and Attractive, multi - coloured and big sized speciman pictures.

**Available at : Annai Book Shop Jaffna, Poobalasingham Book Shop Jaffna Colombo & Book Lab Jaffna, All Samudra Book shop Outlets & Other Leading Book Shops Island Wide. Contact : 0718140079, 0722136791**

தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு நிர்வாகத்தின் கீழ்,

## இலண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் கணனிப் பயிற்சி நிலையம்

சேவை நோக்குடன் குறைந்த கட்டணத்தில் இலண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய அனுசரணையுடன் இயங்கிவருகின்றமை குறிப்பிடதக்கது. இச்சேவையினை பெற்று பயன்பெற விரும்பும் மாணவர்கள் கீழ்கண்ட நிலையங்களை அணுகவும்.




யாழ்ப்பாணம் : 140,நாவலர் வீதி | கல்முனை : C.E.B வீதி, நற்பிட்டிமுனை
114,டச்சு வீதி | திருகோணமலை : 43/4, நித்தியபுரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதப் போராட்டங்களும் அவற்றுக்கு எதிரான அரச ஏற்பாடுகளும் மனித உரிமை மீறல்களாகின!

யுத்தத்தின் பின்னரான பின்புலம் மற்றும் மனித உரிமைகள் என்ற இருவித காரணிகளை மையமாகக் கொண்டு இலங்கையின் தற்கால அரசியல் தலைவிதியை ஆழமாக நோக்கும் விதத்தில் அமைகிறது இக் கட்டுரை.



சுனந்த தேசப்பிரிய எழுதிய இக் கட்டுரை கடந்த 04 ஆம் திகதிய "ராவய" பத்திரிகையில் பிரசுரமாகியது. அதன் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது.

**தமிழில்: சரா**

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான விவகாரம் மீளவும் கடந்த வாரம் முழுவதிலும் விமர்சனங்கள் என்ற வகையில் முன்னெழுந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. விடுதலைப் புலிகள் அமைப்பைப் போர்ரீதியில் தோற்கடித்ததன் பின்னர் அரசுக்கு மிகப் பெரும் சவாலாகியிருந்த எதிரி இல்லையென்றாகிவிட்டுள்ளதால், அதன் பின்னர் புதியதொரு எதிரியைத் தேடித் திரிந்த அரசு, தற்போது மனித உரிமைகள் மற்றும் மனித உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்களைத் தனது புதிய எதிரியாக்கிக் கொள்ள எண்ணமிட்டுச் செயற்படுகிறதா என்றதொரு வினா சில எழுத்தாளர்களால் கிளப்பப்பட்டிருந்தது. இது இவ்வாறிருக்க, கலாநிதி பாக்கிய ஜோதி - சரவணமுத்து, ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு வழங்கியிருந்த தனது கருத்து வெளிப்பாட்டில் ஆழமானதொரு உண்மையை வெளிப்படுத்தியிருந்தார்.

அதாவது, மனித உரிமை மீறல்களை அரசியல் நியாயாதிக்கத்திலிருந்து தற்காலிகமாக நீக்கிவைத்து விட்டுச் செயற்பட முடிந்தாலும்கூட அவற்றை மண்ணுக்குள் புதைத்து நிரந்தரமாகவே மூடிமறைத்துவிட இயலாது என்பதே அவரது கருத்து வெளிப்பாடாகும்.

இதனிடையே, தென்பகுதியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கைக்கு வழங்கப்படும் ஜீ.எஸ்.பீ.பிளஸ் வரிச் சலுகையை நீடிக்கச் செய்து கொள்வதற்காக நாட்டையோ, இராணுவத்தையோ தாரை வார்த்துக் கொடுக்க இயலாதெனக் கருத்து வெளியிட்டிருந்தார். மேற்படி ஜீ.எஸ்.பீ.பிளஸ் வரிச் சலுகை வழங்கப்படும் விடயத்துடன் பின்னிப் பிணைந்துள்ள மிக அத்தியாவசியமான முன் நிபந்தனையொன்றான மனித உரிமைகள் வரைபு இலங்கையில் இல்லவேயில்லையென்பதாக ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழு முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மேற்படி, மனித உரிமைகள் வரைபு குறித்த விடயம் மற்றும் ஜீ.எஸ்.பீ.வரிச்சலுகையைப் பெறுவதற்காக நாட்டைத் தாரைவார்த்துக் கொடுக்க இயலாதென்ற ஜனாதிபதியின் கருத்து வெளிப்பாடு ஆகிய இரண்டு விடயங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, பரிந்துரைக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் வரைபை செயலுருவில் கடைப்பிடிப்பது நாட்டைத் தாரைவார்த்துக் கொடுக்குமொரு செயலாகுமென்றே இலங்கையரசு கருதுவதாகத் தெரிகிறது. அது ஆரோக்கியமானதொரு அறிகுறி அல்ல.

அத்தோடு சனல் '4' வீடியோ நாடா விவகாரம் சம்பந்தமாக ஆரம்பத்திலிருந்தே இலங்கை அரசால் கொண்டு செல்லப்பட்ட நிலைப்பாட்டிலிருந்தும் கூட, யுத்தம் இடம்பெற்ற காலகட்டத்தில் நிகழ்ந்துள்ள எந்தவொரு எல்லை மீறல் குறித்தோ அல்லது உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பான எக்கோணத்திலான பரிசீலனையொன்றுக்கோ இலங்கையரசு தயாரில்லை என்பதும் புலப்படுகிறது. அந்த வீடியோ ஒளி நாடா ஒளிபரப்பபட்ட முதற் சந்தர்ப்பத்திலேயே அது தொடர்பான எந்தவொரு பரிசீலனைக்கும் இடமளிக்காது, பிரித்தானியாவிலுள்ள இலங்கைத் தூதுவர் குறிப்பிட்ட ஒளி நாடா போலியானதெனத் தெரிவித்திருந்தார். இருந்தபோதிலும், நீதிநியாயமற்ற படுகொலைகள் தொடர்பான ஐ.நா.அமைப்பின் விசேட பிரதிநிதியான 'ஸ்ரீவ் அல்ஸ்ரன்' இற்றைக்கு மூன்று வாரங்களுக்கு முன்னர் மேற்படி வீடியோ நாடா சம்பந்தமான சுயாதீனமான பரிசீலனை அறிக்கையொன்றின் சான்றுகளின்றி அதன் போலித்தன்மை அல்லது உண்மைத் தன்மை தொடர்பாகத் தீர்மானமொன்றை மேற்கொள்ள இயலாதெனத் தெரிவித்திருந்தார்.

இத் தர்க்கவாதத்தில் யதார்த்தமான அர்த்தம் பொதிந்திருப்பது மேற்படி வீடியோ நாடா போலியானதா இல்லையா என்பதில் அல்ல. கடந்த மூன்று தசாப்த காலம் முழுவதிலும் நிகழ்ந்துள்ள நீதி நியாயமற்ற மனிதப் படுகொலைகளை ஏற்றுக்கொள்வதற்கு நாம் தயாரா? இல்லையா? என்பதிலேயே அது தங்கியுள்ளது. அதாவது சமுதாயமொன்று என்ற ரீதியில் இந்த அனர்த்தத்திற்கான பொறுப்பை நாம் ஏற்றுக் கொள்ளத் தயாரா இல்லையா என்பதிலேயே அது தங்கியுள்ளது என்பதாகும். இப் பொறுப்பு பெறுமனே ஆயுதப்படையினரை மட்டும் சார்ந்ததொன்றல்ல.

கடந்த மூன்று தசாப்த காலம் முழுவதிலும் மட்டும் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதற்குக் காலாக அமைந்தவை பலதரப்பட்ட ஆயுதப் போராட்டங்கள் மற்றும் அவற்றை அடக்கிவிடுவதற்கு அரசினால் முன்னெடுக்கப்பட்ட அரசியல், சட்டரீதியான மற்றும் போர் ரீதியிலான செயற்பாடுகளுமேயாகும். மேற்படி செயற்பாடுகள் காரணமாக, நீதி நியாயமற்ற விதத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்டனரென்பது சகலரும் அறிந்ததொன்றே. 1998 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில் பயங்கரம் மிக்க மனிதப் படுகொலைகள் இடம்பெற்றதில்லை எனத் தென்பகுதி சிங்கள மக்கள் முன் கூறத்தக்க எவராவது இருக்கக்கூடுமா? என்றால் எவரொருவராலும் இவ்விதம் கூற இயலாது என்பதே அதற்கான பதிலாக அமையும். அப் படுகொலைகளுக்கு அரசு மற்றும் அரசின் ஒத்துழைப்பு கிட்டியிருந்த பலதரப்பட்ட ஆயுதக் குழுக்கள் போன்றே அவற்றுடன் இணைந்து நின்று செயற்பட்டுள்ள நாட்டுப்பற்றாளர் மக்கள் அமைப்பும்கூடப் பலதரப்பட்ட மட்டங்களில் பொறுப்புக் கூற வேண்டி நேர்ந்திருந்தது. தென்பகுதி மக்கள் மேற்படி மனிதப்படுகொலைகளைக் கண்கூடாகக் கண்டு பட்டனுபவித்துள்ளமை போன்றே, வட புலத்தின் மக்களும்கூட, 1981 இல் இருந்தே அனைத்துத் தரப்புகளாலும் விசேடமாக விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் அரச படைகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட கபடத்தனமான மனிதப் படுகொலைகளைக் கண்கூடாகக் கண்டு பட்டனுபவித்துள்ளனர். எனவே சனல் '4' வீடியோ ஒளி நாடா தொடர்பான தர்க்கவாதத்தைவிட நாம் கவனத்தில் கொள்ள வேண்டியிருப்பது இந்த யதார்த்தத்தையே ஆகும்.

இந்த நாடு, சுதந்திரமான, மனுக்குல கௌரவத்தைப் பேணிக்காக்கும் நல்லொழுக்க சீலங்கள் மிக்க நாடொன்றாக முன்னோக்கிப் பயணிக்க வேண்டுமானால்,

இந்தப் படுகொலைக் காலாசாரத்தின் யதார்த்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. எமது சமுதாயத்தின் மனிதாபிமான அணுகல்களென்ற உயர்வான மரபுகள் போற்றத்தக்க பண்புகள், இந்த இரத்தம் சிந்தப்பட்ட வரலாற்றின் மூலம் மிகக் கடுமையாகப் பலவீனப்படுத்தப்பட்டு, மூழ்கடிக்கப்பட்டுள்ளது. நீதி, நியாயமற்ற படுகொலைகள் மூலமாகவும், நீதி நியாயமற்ற அரசியல் செயற்பாடுகள் மூலமாகவும் கூட இலங்கையரசு இந்நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளைத் தொடர்ச்சியாகவே சிதைவுறச் செய்துள்ளதென்பதை இலங்கை மக்களுக்குப் புதிதாகப் புரிய வைக்க வேண்டிய அவசியமில்லை. அடக்குமுறைச் சட்டதிட்டங்கள் மற்றும் அடக்குமுறை அரசியல் கலாசாரம் என்பன இன்றைய இலங்கையின் நிரந்தரமானதொரு அம்சமாகிவிட்டுள்ளதென்றே கொள்ளப்படத் தக்கதாகும்.

இவ்வித பயங்கரங்கள்மிக்க பிரச்சினைகளுக்கு உள்ளாகிய அனைத்து நாடுகளும் தமது சமுதாயத்தைச் சீர்படுத்தி, ஆரோக்கியமானதொன்றாக்கிக் கொள்வதற்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்டது பழி வாங்கும் நடைமுறையை அல்ல.

மாறாக நல்லாட்சி நுகர்வின், ஆற்றுப்படுத்தலின் மற்றும் சத்தியத்தைத் தேடிப்பெறும் வழிமுறைகள் மூலமே அவை தமது அத்தகைய நோக்கத்தை வென்றெடுத்தன. தவறுகளை ஏற்றுக் கொள்வதன் மூலம் அவை மீளவும் இடம்பெறாதிருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மார்க்கத்தை அவை கடைக்கொண்டன. ஆனால், இலங்கையோ இன்னமும் அத்திசை நோக்கிப் பயணிக்க முயல்வதாகத் தென்படவில்லை. அது தொடர்பாக ஆயுதமேந்திய அமைப்புக்களின் வன்முறைப் பயங்கரவாதச் செயற்பாடுகள் போன்றே அரசும்கூட விமர்சனத்துக்கு உள்ளாக்கப்படவேண்டியுள்ளது. என்ன இடம்பெற்றன என்பது குறித்த பகிரங்கமான திறந்த கருத்துப் பரிமாறல்கள் முகிழ வேண்டியுள்ளது. அத்தகைய விதத்தில்லல்லாது, அவசியப்படும் மறுசீரமைப்புக்களைஏற்படுத்திவிட இயலாது.

அரசு மற்றும் அதன் அடக்குமுறை அம்சங்கள் விமர்சனங்களுக்கு உள்ளாவது நாட்டையும் நாட்டு மக்களையும் தாரைவார்த்துக் கொடுப்பதற்கு - காட்டிக் கொடுப்பதற்கு ஒப்பானது என அர்த்தம் கற்பிப்பதன் மூலம் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட விமர்சனங்களை அலட்சியப்படுத்தி விடுவதற்கு இந் நாட்டு அரசு எத்தனிக்கிறது.

## நிர்வாகத்துக்கு எதிரான விமர்சனங்கள் நாட்டைக் காட்டிக் கொடுப்பதாகச் சோடிக்கப்படும் காலம் இது

மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட அணுகல்கள் கருத்துவெளிப்பாடுகளெண்பவை நாட்டின் பாதுகாப்புப் படைகளுக்கு எதிராகப் போர்க் குற்றச்சாட்டுக்களை முன்வைக்குமொரு எத்தனமேயென்ற சாரப்பட கருத்து வெளிப்படுத்தி, அதைப் பாதுகாப்புக்கேடயமொன்றாக்கிக் கொள்ளும் செயற்பாடு, அதேபோன்ற மேலுமொரு தவறான அர்த்தப்படுத்தலாகும். கடந்த ஜூன் மாதத்தில் இணக்கம் காணப்பட்ட - யுத்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களைத் தேடிக் கண்டறிவதற்கான ஜனாதிபதி மற்றும் ஐ.நா.பொதுச் செயலாளர் இடையிலான இணக்கப்பாடு மேற்குறிப்பிட்ட அர்த்தப்படுத்தல் தவறானதொன்று என்பதற்கானதொரு உதாரணமாகும். மேற்படி இணக்கப்பாடானது, போர்க்குற்ற எல்லைக்கு அப்பாற்படும் விதத்தில் நடைமுறைக்கு வரக்கூடியதொரு கட்டமைப்பேயாகும்.

உண்மையில் அணுகிப் பார்க்கும் போது, நாடு, நாட்டின் குடிமகன் மற்றும் அரசு என்ற இவற்றுக்கிடையில் தெளிவாகத் தெரியும் வித்தியாசமுள்ளது. இவை அனைத்தும் ஒன்றல்ல. அரசொன்றின் நடைமுறைப் போக்கு நாட்டுக்கு மற்றும் நாட்டின் குடிமகனுக்கு விரோதமாகப் பயணிக்கக்கூடும். இதற்கு மிகத் தெளிவான உதாரணமாகப் பர்மா எனப்பட்ட மியன்மார் நாட்டைக் குறிப்பிட்டுக் காட்ட முடியும். மியன்மார் அரச நிர்வாகம் சர்வாதிகார இராணுவ வலைப் பின்னலொன்றின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

இந்தச் சர்வாதிகார இராணுவமய நிர்வாகம் அந்த நாட்டை நாசப்படுத்திக் குடிமக்களின் உரிமைகளை ஏறிமிதித்து வருகிறது. நாடு தனிமைப்படுத்தப்பட்டும், நாட்டு மக்கள் சமுதாய அரசியல் மற்றும் பொருளாதாரச் சிரமங்களுக்குள் தள்ளப்பட்டும் அவலமுற நேர்ந்துள்ளது. பர்மாவின் இராணுவ வலைப்பின்னல் மற்றும் இராணுவ நிர்வாகம் தொடர்பான தீவிரமானதொரு விமர்சனம் தலையெடுப்பதன் மூலமும் மற்றும் அந் நிர்வாகத்தைத் தோற்கடித்து விடுவதன் மூலமாகவல்லாது பர்மா நாட்டினது மற்றும் அந்நாட்டின் குடிமக்களது சுதந்திரத்தையும் கௌரவத்தையும் மீளக் கட்டியெழுப்ப இயலாது. சர்வாதிகாரப் பயணமார்க்கத்தில் பயணிக்கும் பர்மிய ஆட்சியாளர்களுக்கு ஜனநாயகவாதத்தை நோக்கிப் பயணிக்க இயலாதிருப்பதற்கு, அவ்வாறு செயற்படுவார்களேயானால் அது அவர்களது நிர்வாகத்தின் முடிவாக அமைந்து விடுமென்பதே காரணமாகிறது.

அதன் காரணமாகவே பர்மிய சமுதாயம் மற்றும் அரசியல் நிர்வாகத்தைக் கடும் அடக்குமுறை வழியில் நடைமுறைப் படுத்திச் செல்வதைத் தவிர எந்தவொரு ஜனநாயகவாத மறுசீரமைப்புச் செயற்பாட்டையும் இந்த மிருகத்தனமான ஆட்சியாளர்களால் மேற்கொள்ள இயலாதுள்ளது.

இன்றைய அளவில், இலங்கை அரசானது நெருங்கிவந்துள்ளதோ அல்லது நெருங்கிவந்து கொண்டிருப்பதோ, தீர்க்கமானதொரு திருப்புமுனைக்காகும். அதாவது, ஒன்றில் சகவாழ்வின் மற்றும் ஜனநாயக வாதத்தின் மார்க்கமாகும். அல்லது யுத்த காலத்தில் கடைக்கொண்டு சென்ற முறைபிறழ்ந்த நடைமுறைப் போக்கினூடான அடக்குமுறை மார்க்கமாகும். இன்று யுத்தம் முடிவுக்கு வந்து நான்கு மாதகாலம் கடந்துள்ளது. தொடர்ச்சியாகவே அடக்குமுறை நிர்வாகம் ஒன்றை நடத்திச் செல்லும் அரசொன்றுக்கு ஜனநாயகவாதம் தொடர்பான கதவைத் திறந்து விடுவதென்பது சிரமம்மிக்கதென்பதற்கு, அவ் எத்தனம், அரசின் முடிவுகாலத்தின் முதற்படியாக அமைவதே காரணமாகிறது. இதற்கான உதாரணங்கள் நிறையவே உள்ளன. சிலி நாட்டின் தலைவர் 'பினோச்சே'யை இதற்கான ஓர் உதாரணமாகக் குறிப்பிட இயலும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் இன்னமும் அது அவ்விதத்திலான சர்வாதிகாரத்தை நோக்கி பயணித்திருக்கவில்லை. ஆனாலும், அடக்குமுறை அரசியலிலிருந்து விலகிச் செல்லும் திசையொன்றைக் காட்டி நிற்பதாகவும் இல்லை.

நாட்டில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு அவர்கள் நிர்மூலமாக்கப்பட்டதன் பின்னரான இன்றைய புறச்சூழலின், மனித உரிமைகள் தொடர்பான போராட்டங்களையோ, போர்க்குற்றச்சாட்டுக்களையோ அல்லது அரசுக்கு எதிரான உள்நாட்டு மற்றும் சர்வதேசச் சதிகளையோ பூச்சாண்டியாகக் காட்டிக் கொண்டு தொடர்ச்சியாகவே அடக்குமுறைப் பாதையில் பயணிப்பதற்கு இன்றைய அரசு எண்ணுமானால், நீண்ட கால ரீதியில் அதனூடாக நற்பலன் எதுவும் கிட்டாது என்பதை அரசு இப்போதே புரிந்துகொள்வது பெறுமதிமிக்கதாகும். இக் கருத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நிர்வாகத்தால் காத்திரமாகச் சிந்தித்துப் பார்க்கப்பட வேண்டியுள்ளதொரு அரசியல் விடயமாகும். ★★★★★★★★★★★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## எதிர்பார்ப்பு...

வலிகளின் துளிகளால்
நிரம்பிப் போன
என்னுள்ளம்
உயிரொன்று இருப்பதையே
மறந்துவிட்டதைப் போல
மாற்றங்கள்
மறுதலித்திட....
ஏமாற்றங்கள்
ஏப்பம் கொள்ள....
நகர்ந்தபடி வாழ்வு...
சுதந்திர இறக்கைகள்
இருந்தும் என்ன பயன்...
அடைபட்ட குருவியின்
நிலையாய்... நம் நிலை
தொடர....
முடிவின்றித் தொடர்ந்து
போகும் எம்
இன்னல்களுக்கு இனியும்
கிடைக்குமா....?
ஒரு முடிவு....

**மகே.மேனன்,**
*கொற்றாவத்தை.*

## பனித்துளி

இலையின் நுனியில்
இரவில் அழுத
இலையின் கண்ணீர்

இலை தலை குளிக்க
இறைவன் மண்ணிற்கு
அனுப்பி வைத்த
இரவுத் துளிகள்.

காலைக் கதிரவன்
கண்ணிமைக்காமல்
இரசிக்கும்
கன்னித் துளிகள்.

செடிகள் ஒதுக்கும்
வியர்வைத் துளிகள்.
எல்லாத் துளியும்
இறைவன் படைப்பில்
பனித்துளியே.

**எஸ்.ஜெனனி,**
*நவாலி.*










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காமம் கொல் இவள் கண் பசந்ததுவே

நிலத்து வாழ்க்கையைக் காட்சிப்படுத்திக் காட்டும் சிறப்பான சமூகப் பண்பாட்டுப் பணியை இலக்கியம் சிறப்பாகச் செய்கின்றது. செய்யுள் வடிவத்தில் காட்சிகளைச் சொற்சித்திரங்களாகத் தீட்டி வைத்துள்ளது. அவற்றைப் படிக்கின்ற போது எமது மனத்திரையில் நாமும் சில கோலங்களைப் போட்டு மகிழ்கின்றோம். 'நற்றிணை' என்னும் தொகுப்பிலக்கியப் பாடலொன்று பல நெய்தல் நிலக்காட்சிகளை மனக்கண்ணுக்கு விருந்தாகத் தந்துள்ளது.

கடற்கரைப் பிரதேசத்தில் நடக்கும் மக்கள் வாழ்வியலோடு அங்கு வதியும் பிற உயிரினங்களின் வாழ்வியலையும் 'அம்மூவனார்' என்னும் சங்கப்புலவர் எடுத்துக்காட்டியுள்ளார். இயற்கையோடு இணைந்து வாழும் மரபு ஒன்று பண்டைக்காலத்தில் இருந்ததைப் பாடலில் கூறுகிறார். தோழி தலைவனுக்குக் கூறுவதாகப் பாடல் அமைந்துள்ளது.

**"பொங்கு திரை வார்மணல் அடைகரைப்**
**புன் கால் நாவல் பொதிப்புற இருங்கனி**
**கிளை செத்து மொய்த்த தும்பி பழம் செத்துப்**
**பல்கால் அலவன் கொண்ட கோட்டு அசாந்து**
**கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்**
**இரை தேர் நாரை எய்தி விடுக்கும்**
**துறை கெழு மாந்தை அன்ன இவள் நலம்**
**பண்டும் இற்றே கண்டிசின் தெய்ய**
**உழையின் போகாது அளிப்பினும் சிறிய**
**நெகிழ்ந்த கவின்நலம் கொல்லோ மகிழ்ந்தோர்**
**கட் கழி செருக்கத்து அன்ன**
**காமம் கொல் இவள் கண்பசந்ததுவே"**

**(நற்றிணை:35)**

கடற்கரையைப் பற்றிச் சொல்லும் போது அவர் பயன்படுத்தியுள்ள சொற்கள் கவனத்திற்குரியவை.

பொங்கு திரை, வார்மணல், அடைகரை. இத்தொடர்கள் மாலை நேரத்துக் கடற்கரைக் காட்சியை மனக்கண்ணில் வரைய உதவும். உயர்ந்த திரைகள் எழுந்து வந்து திரும்பிச் செல்லும் போது மணலை வாரிச் செல்லும். இந்தக் கடற்கரையில் ஒரு நாவல் மரம் நிற்கிறது. மெல்லிய கொம்பர்களுடைய நாவலின் நன்றாகப் பழுத்து உதிர்ந்த நாவற்பழத்தை வண்டினம் காண்கிறது. அப்பழத்தைத் தம்முடைய இனமெனக் கருதி மொய்க்கிறது. அந்த வேளையிலே அங்கு வந்த பல கால்களையுடைய நண்டுகள் அவ்வண்டுகளை விலக்கி விட்டு தாம் அதைக் கொள்ள முயலும் போது யாழ் ஓசை போல வண்டுகள் ஒலி எழுப்பிப் பூசலிடுகின்றன. அப்போது இரைதேடித்திரியும் நாரை அவ்விடத்திற்கு வருகின்றது. நாரையைக் கண்டு நண்டுகள் ஓடிச் சென்று பதுங்குகின்றன. இத்தகைய கடல்வளம் மிக்க மாந்தை என்னும் துறைமுக நகர் போன்றவள் தலைவி எனத் தோழி தலைவனிடம் சொல்கிறாள். தலைவியின் நலத்தைத் தலைவன் களவுக்காலத்தே அனுபவித்துச் சென்றவன். இப்போது தலைவியை மணமுடித்து வாழ்கிறான். அவர்களைக் காணச் சென்ற தோழிக்கு அவர்களுடைய பழைய களவுக்காலம் நினைவுக்கு வருகின்றது. "முன்பும் தலைவியின் கோலம் இவ்வாறிருந்ததை நீ கண்டிருப்பாய். களவுக் காலத்திலும் இவளை விட்டுப் பிரியாது மகிழ்வுறச் செய்தாலும் சிலவேளை அவளை அணைக்கின்ற கைகள் நெகிழ்ந்தால் அவள் கண்கள் நிறம் மாறி விடுமல்லவா? அந்த அழகு இப்போது புனையப்பட்ட அழகாகிவிட்டதோ? கள்ளுண்டு களிப்போருக்கு அது கிடையாதபோது ஏற்படும் ஒருவகை மாறுபாடு போல இவளுடைய கண் காமத்தால் அழகு பெற்றதோ?" கூறுவாயாக.

**இலக்கியக் காட்சி 11**

தலைவன் தலைவியைப் பிரியாமல் கற்பு வாழ்க்கை வாழ்வதைத் தலைவியின் கோலமே உணர்த்தி நிற்கின்றதெனத் தோழி கூறுவது தலைவன் மீது அவள் கொண்ட நம்பிக்கை பொய்க்கவில்லையென்பதைக் காட்டுகிறது. காமவாழ்க்கையால் தலைவியின் கண்பசந்ததுவே எனத்தோழி கூறுவது தலைவியின் முன்னைய தோற்றத்திற்கும் இப்போதைய தோற்றத்திற்கும் உள்ள ஒரு வேறுபாட்டைச் சுட்டிக் காட்டுவதாக உள்ளது.

இலக்கிய நயம் காணும் நிலையில் உள்ளுறை உவமம் என்ற அணி இப்பாடலில் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. கடற்கரையின் இயற்கைக் காட்சியில் தலைவி நாவல் கனியாகவும் தும்பி தோழியாகவும் அலவன் தன்மேல் தவறிழைக்கும் சுற்றத்தவராகவும் தலைவன் இரைதேர் நாரையாகவும் கொள்ளப்பட்டுத் தலைவிக்காக அவள் தாய்க்கு நான் அஞ்சினேன். அப்போது நீ காப்பாற்றினாய் எனத் தலைவனுக்குக் கூறியதாகவும் பொருள்கொள்ளப்படும்.

காதல் வாழ்வில் ஏற்படக்கூடிய சிக்கலை இயற்கைக்காட்சி ஒன்றை வைத்துப் புலவர் விளக்கியுள்ளார். தலைவியின் துன்பம் தலைவனால் தீரவேண்டும். முன்னைய களவுக்காமத்திற்கும் இப்போதைய திருமணம் முடித்த கற்புக் காமத்திற்கும் உள்ளவேறுபாட்டைத் தோழி சுட்டிக்காட்டுவது தோழியின் கூர்த்த அறிவைக் காட்டுகின்றது. சங்கப் பாடல்களில் பேசப்படும் தோழி மிக்க மதிநுட்பமுடையவளாகக் காணப்படுகிறாள். இப்பாடல் மூன்று பாத்திரங்கள் கொண்ட ஒரு காட்சி நாடகமாக அமைந்துள்ளது.

தோழியின் சொல்லாற்றலும் உவமையைக் கையாளுந்திறன், உளவியல் அறிவு என்பன இப்பாடலில் தெளிவாக இனங்காணப்படுகின்றன. நன்றாகப் பழுத்த நாவற்கனியின் நிறத்தை 'இருங்கனி' என்று குறிப்பிடுகிறாள். 'காமங்கொல்' என்ற தொடர் தலைவனிடமே நேரே காமத்தைப் பற்றிப் பேசும் உரிமை தோழிக்கிருந்துள்ளதை உணர்த்துகிறது. தான் காணும் இயற்கைக் காட்சிகளைத் தன் நோக்கத்திற்குப் பயன்படுத்தும் கூர்மதி உடையவளாக இருக்கின்றாள். விடயத்தை நேராகக் கூறாமல் குறிப்பாகக் கூறும் நயத்தக்க நாகரிகத்தைத் தோழி சிறப்பாகக் கையாள்கிறாள். நட்பு, வாழ்வியலில் ஆற்றும் பங்களிப்பு இலக்கியப் பாடல்களில் பெரிதும் பேசப்படுவதற்கு முக்கிய காரணம் புலவர்களின் தொலைநோக்கான சிந்தனையே.

இலக்கியம் வாழ்க்கையைப் பண்படுத்தும் என்பதே புலவர்களது இலக்காகும்.



*********

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

---



**1960 துகளின் இறுதிப் பகுதியில் ஈழத்துத் தமிழ்ப் புனைகதைத் துறையில் தம்மை இணைத்துக் கொண்டவர் எஸ்.எல்.எம்.ஹனீபா. மட்டக்களப்பு மாவட்டத்து ஓட்டமாவடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இவர். கால் நடை அபிவிருத்திப் போதனாசிரியராகத் தொழில் புரிந்தவர்.**

**இவரது சிறுகதைகள் இளம்பிறை, சுதந்திரன், சுடர், வீரகேசரி, சிந்தாமணி போன்ற பத்திரிகைகளிலும், பூரணி, கணையாழி போன்ற சஞ்சிகைகளிலும் வெளியாகியுள்ளன.**

**'மக்கத்துச் சால்வை', 'மாத்துவேட்டி' என்பன இவரது சிறு கதைத் தொகுதிகளாகும்.**

**இவரது 'மக்கத்துச் சால்வை' சிறுகதை கல்வித் திணைக்கள பாடநூலிலும் இடம்பெற்றுள்ளது.**

**தற்போது சேவையில் இருந்து ஓய்வுபெற்று சொந்த ஊரில் வாழ்ந்து வருகிறார்.**

**'மக்கத்துச் சால்வை' சிறுகதைத் தொகுதியில் இடம் பெற்றுள்ள இவரது 'திசைகள்' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.**

# திசைகள்

**மூத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 120**

மதங்கொண்ட யானைகள் திரண்டெழுந்து செல்வதைப்போல மாந்தராறு தனது முழு உக்ரத்தையும் வெளிப்படுத்தி ஓடிக்கொண்டிருந்தது.

ஆங்காங்கே எழும் சுழிகளில் கண்களை நிலைகுத்தி நின்ற மாணிக்கம் ஏதோ நினைவுக்கு வந்தவனாக வெற்றிலைக் குட்டானைத் தலையில் கட்டிக் கொண்டு ஆற்றில் இறங்கினான்.

உடலின் பலத்தையெல்லாம் கைகளுக்கனுப்பி, அவன் ஆற்று நீரைப் பின்னுக்குத் தள்ளி நீந்தத்தொடங்கிய கணநேரத்திற்கெல்லாம் திடீரெனத் தோன்றிய பெருஞ் சுழியொன்று அவனைத் திக்குமுக்காடச் செய்தது.

''முருகா!'' பெருமூச்சுடன் வெளிவந்த அந்த வார்த்தையின் உந்துதல் அவனுக்குப் புதிய தெம்பையும் பலத்தையும் கொடுத்திருக்கவேண்டும். நான்கு கை எறிதலில் அவன் ஆற்றின் மறுகரையை எட்டினான்.

விலா எலும்புகள் உப்பிப் புடைக்க அவனுக்கு மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கியது. அந்த மணற்பரப்பில் அவன் 'சடா'ரென விழுந்தான்.

இடுப்பில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து நீரைப் பிழிந்துவிட்டு, முகம், தலை என்று ஒரு தடவை துடைத்துவிட்டான்.

தலையில் பவித்திரப்படுத்தியிருந்த வெற்றிலைக்குட்டான் கைக்கு மாறியது.

வெற்றிலையோடு புகையிலையும் சுண்ணாம்பும் நனைந்து 'பிசுபிசு'த்துப்போயின. அருவருப்பை ஊட்டினாலும் குத்து மதிப்பில் அள்ளிக் குதப்பிக்கொண்டான்.

அவ்விடத்தை விட்டு எழும்பும்போது மீண்டும் ஒருமுறை தான் கட்டியிருந்த துண்டை முறுக்கிவிட்டு தோளில் போர்த்திக் கொண்டான். பெருமழையில் வீதியெல்லாம் நாய் கடித்துப் போட்ட தோல்வாரைப் போல...

போதாததற்கு வண்டில் பட்டம் வேறு வீதியை வெட்டி வெட்டித் தின்றுகிடந்தது.

கருங்கல்லும் கிறவல் உடைச்சல்களும் அவன் கால்களைக் குத்தின.

'பெருமானே! எப்பதான் ஊட்ட போறயோ?''

எண்ணும்போதே அவன் மனவானில் மனைவியும் அவன் குஞ்சு குருமான்களும் ஒருமுறை நினைவுச் சொடுக்கில் மின்னினார்கள்.

மூக்கர் கல் சந்தியில் ஏறி - அவன் கால்கள் இறக்கத்தில் மிதக்கும்போது - கிழக்கே செல்லும் சாமான் கோச்சியின் சப்தம் அவன் காதுகளைக் கடித்தது.

கால்களை எட்டிப்போடத் தொடங்கினான்.

இருள் அரக்கியின் கரிய போர்வையின் அரவணைப்பிற்குள் வயல்வெளி கிடந்தது.

''பேய்! யார்ராலெ?''

இருட்டில் வந்த உருவத்தோடு முட்டிக்கொண்டே முணுமுணுத்துக் கொள்கிறான்.

''ஆ! நம்மெட முஸ்தாக்காவா? இந்தெ நேரத்திலே எங்கடாக்கா?'' அளவுகடந்த களைப்பின் தொய்வு அவன் கேள்வியில் இழுபட்டது.

''மாணிக்கன்! நான் மயிலெவட்டவானுக்கெபோறென். பகல் இஞ்செ அத்துல்ஹமீதிடெ கடையிலெ குடையை அயத்து வெச்சிட்டென். அதிரிக்கெ ஆத்திலெ தண்ணி எப்பிடிப் பம்பலோ?''

''அதென்னத்தெ பேசிறாய். இந்தெ மழை மனிசனெ அழிக்க வந்தாப்லெ இலுவா இரிக்கி, ஆறு தமாராப் போவுது. நான் நம்பெல்லெ இந்தெ நாளயிலெ வானம் வெளிக்கு வெண்டும். அதுவென மூணுமாசமாப் பேயுதெ, சனியன் புடிச்செவானம். இத்தெக் கிழம உச்சிவடக்கல் அவுலியாடெ பேராலெ கந்தூரி குடுப்போம் என்றிரிக்கெம்.''

அவர்களின் கதைக்கு முற்றுப்புள்ளி வைப்பதைப் போல வானத்தின் ஒரு மூலையிலே 'பளீர்' என்ற மின்னல் கம்பிகளின் சுடர் மாணிக்கத்தின் கண்களை மூடி மூடித் திறக்கச் செய்தன. தொடர்ந்து அந்த மூலையே இடிந்து விழுவதைப்போன்ற பேரிரைச்சலுடன்....

(12 ஆம் பக்கம் பார்க்க...)

---


## மீட்சி வருமா?

*என்*
*அழகிய குடிசை;*
*தாலாட்டுப் பாடும்*
*முற்றத்து வேப்பமரம்,*
*பசுமையாய் இதம் தரும்*
*வயற் பரப்பு,*
*சங்கீதம் இசைக்கும்*
*நீரோடை,*
*நொச்சி மரத்தில்*
*கிச்சு மூட்டும்*
*கிளிகளின் கீச்சிடல்,*
*கருணை மழை பொழியும்*
*கந்தன் ஆலயம்,*
*கால்பந்து விளையாடி*
*காயம் தந்த மைதானம்,*
*உயர இருந்து பாய்ந்து மூழ்கி*
*நீந்திக் கும்மாளமிட்ட*
*குளம்,*
*பசி தீர்த்த*
*தென்னந்தோப்பு*
*பலா மர நிழலில்*
*பாடம் சொல்லித் தந்த*
*பள்ளிக்கூடம்*
*நிலா வெளிச்சத்தில் கூடியிருந்து*
*கூழ் குடித்து மகிழ்ந்த*
*உறவுகள்*
*கள்ளங் கபடமில்லா*
*கனிவான ஊர் மனிதர்கள்*
*........*
*இவையல்லவா*
*என் சொர்க்கம்!*
*மீட்சி கிடைக்குமா*
*இந் நரகத்திலிருந்து.....*

சீலா.ஜீபாலன், அல்வாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றல் மெருகேறுவதற்குத் தேவை கடின உழைப்பு



பாடுபடாமல் பலனில்லை. விதைக்காமல் அறுவடை செய்ய முடியாது. உழைக்காமல் உயர்வு இல்லை. மற்றவர்களின் வளர்ச்சி மட்டும் நம்முடைய கண்களை உறுத்திப் பயன் இல்லை. ஒவ்வொரு மனிதனின் வளர்ச்சிக்குப் பின்னாலும் உழைப்பு என்கின்ற பெரிய போராட்டம் இருக்கவே செய்கிறது. உழைப்பையும் அதன் பலனையும் ஒரு மனிதரிடம் ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது அதனுடைய மிகப் பெரிய ஆற்றல் அவரை ஒரு மேதை என ஒப்புக்கொள்ள வைக்கிறது.

எடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடிக்க வேண்டும் என்கிற வெறியும், வேகமும் தோன்றிவிட்டால், அதற்காக உழைப்பது ஒரு இன்பமாகிவிடும். அதனால் இலட்சியவாதிகள் உழைக்க உழைக்க அவர்களது ஆற்றல் மெருகேறிச் செல்கிறது.

**''தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும்''** என்பது வள்ளுவர் வாக்கு. தெய்வத்தால் ஆகாதது எதுவுமில்லை. இதனைத் தனது முதலதிகாரத்திலேயே தெளிவுபடுத்திய வள்ளுவர், தெய்வத்தால் ஆகாதெனினும் எனக்கூறிடக் காரண மென்ன? இயற்கையின் சூழலால் கஷ்டங்கள் நேரிடினும், முயன்ற காரியங்களில் சிக்கல்கள் விளைந்தாலும் முயற்சிக்கும் உழைப்புக்கும் பயன்கிட்டாமல் போகாது என்பதை வலியுறுத்தவே வள்ளுவர் அவ்வாறு கூறி வைத்தார். தெய்வச் செயல் என ஒன்றிருந்தாலும், மனித முயற்சியும் அவனது முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகிக்கிறது என்பது அவரது வாதம்.

உழைக்காது, கடவுளின் மீது பாரத்தைப் போட்டுச் செயலற்றிருப்பதை வள்ளுவர் ஏற்றுக் கொள்ளவில்லை. கடவுள்நம்பிக்கை, பக்தி, பிரார்த்தனை என்பவை மனிதனது மனோபலத்தை வளர்க்கத் தேவையானவையே. இவற்றை முயற்சிக்குத் துணையாகக் கொள்ளவேண்டுமேயொழிய, முயற்சிக்குப் பதிலாக இவையே போதும் என எண்ணுதல் தவறாகும்.

விதி நல்லவர்களுக்குத் தோழன்; புத்திசாலிகளுக்கு வழிகாட்டி; முட்டாள்களுக்கு அதிகாரி; தீயவர்களுக்கு விரோதி என்பது முதுமொழியொன்றாகும். எனவே நிகழ்ந்தவைகளை இரை மீட்டு வருந்துவதை விட நடக்க வேண்டியவற்றில் நம்பிக்கை வைத்து உறுதியோடு செயற்பட முயல்வது விவேகமானதொன்று.

# பஞ்சாமிர்தம்







# கண்ணதாசனின் தத்துவ முத்துக்கள்

அழகில்லாத உருவங்களை ஒதுக்காதீர்கள். அவற்றுக்குள் 'ஆத்மா' ஒளிந்து கொண்டிருக்கிறது. அழகான உருவங்களுக்காக ஏங்காதீர்கள்; அங்கு ஆணவமே உயர்ந்து நிற்கும். வறுமையைக் கேலி செய்யாதீர். அங்கு வாழ்க்கைத் தாகம் உங்களை எதிர்பார்த்து நிற்கிறது. பணக்காரன் வீட்டுப்படியில் அவமரியாதையை நீங்கள் சந்திக்க வேண்டியிருக்கும். மேதைகளை அளவுக்கு அதிகமாகப் புகழ்ந்தால் தலைக்கனத்தால் மேதைத்தனம் குன்றிவிடக்கூடும். எனவே குரூபத்தை அழகான பார்வையால் நோக்கவும், வறுமையை கொடைத்தன உள்ளத்தோடு சந்திக்கவும் கற்றுக் கொள்ளல் வேண்டும்.

உன்னால் தேர்ந்தெடுக்கப்பட்டவன் அயோக்கியன் என்றால் தேர்ந்தெடுத்த நீ முட்டாள் என்று தான் அர்த்தம்.

பாலிலிருந்து தயிரையும், தயிரிலிருந்து வெண்ணெயையும் வெண்ணெயிலிருந்து நெய்யையும் கண்டெடுப்பவன் வியாபாரி. நெய்யை வெண்ணெய் ஆக்கி, வெண்ணெயைத் தயிராக்கி, தயிரைப் பாலாக்குபவன் அரசியல் வாதி. அந்தப்பாலைக் கறந்த மடியினுள்ளேயே அனுப்பும் திறமை பெற்றவனே தலைவன் என்றாகிறான்.

# மங்கையர்க்கு மங்கலம் தரும் குங்குமம்





மஞ்சள், படிகாரம், சுண்ணாம்பு- இவற்றைக் கலந்து குங்குமம் தயார் செய்யப்படுகின்றது. இவை மூன்றுமே கிருமிநாசினிப் பொருள்கள் ஆகும். மனித உடலில் தெய்வ சக்தி வாய்ந்த நெற்றிக்கண் - அதாவது, இரண்டு புருவங்களுக்கு நடுவிலுள்ள பகுதியில் குங்குமத்தை இட்டுக்கொண்டால் அமைதி கிடைக்கும். வசியப்படுத்துதல் உட்பட எந்தச் சக்தியையும் முறியடிக்கும் சக்தி குங்குமத்துக்கு உண்டு. உடலிலிருந்து மூளைக்குச் செல்லும் நரம்புகள் எடுத்துச் செல்லும் உஷ்ணத்தைக் கட்டுப்படுத்துவது நெற்றிப் பகுதியே ஆகும். இந்தப் பகுதியில் குங்குமத்தை வைப்பதால் உஷ்ணம் குறையும்.

குங்குமத்தின் மீது சூரிய ஒளி படுவதால், அதிலுள்ள மூலிகை சக்திகளுடன் விற்றமின் 'டி' சக்தி மிக்க அல்ட்ரோஸும் உடலுக்குள் சென்று நன்மை உண்டாக்கிறது. இந்தச் சக்தி பெண்களுக்கு மிகவும் நல்லது. இதனால் தான் நம் வீட்டுப் பெண்கள் குங்குமம் இட்டுக்கொள்வதைக் கட்டாயமாக வைத்திருக்கிறார்கள்!

# கொடையால் கிட்டும் புகழுக்கு அழிவே கிடையாது

ஏலேல சிங்கர், ஒரு வணிகர். நேர்மையான வழியில் வாணிபம் செய்து பொருள் ஈட்டி மிகுந்த ஒழுக்கத்துடன் தர்மங்கள் செய்து வாழ்ந்தார் அவர். ஒரு சமயம், அவர் இருந்த நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. அப்போது வணிக நோக்கம் இன்றி எல்லோருக்கும் உணவுப் பொருள்களைக் கொடுத்து மகிழ்ச்சியுடன் உதவி செய்தார். பஞ்சம் நீங்கியதும் எல்லோரும் அவரிடமே பொருள்களை வாங்க அவருக்கு மேலும் மேலும் செல்வம் திரண்டது.

அதில் பெரும் பகுதியை எடுத்துப் பொன்னாக மாற்றி உருக்கிப் பொற் கல்லாகச் செய்தார். அதன் மேல், ''இது ஏலேல சிங்கனது'' என்று எழுதி, அதனைக் கடலில் எறிந்தார். (இவ்வாறு செய்யும் படி அவரது குருவே கட்டளையிட்டார் என்பர்).

எறிந்த அந்த பொற்பாளம் ஒரு மீனால் விழுங்கப்பட்டது. நாள்கள் பல கழிந்த பின், அந்த மீன், மீனவன் ஒருவனின் வலையில் அகப்பட்டது. மீனின் வயிற்றில் அழுக்குப் படிந்து ஒளி மழுங்கி இருந்த அந்தப் பொன்னைக் கண்டான், மீனவன்.

அதன் மதிப்பு அவனுக்குத் தெரியாது. எடுத்துச் சென்று துறைமுகத் தலைவராகிய ஏலேல சிங்கரிடமே சேர்த்தான். அவரும் அதனை தாம் எறிந்த பொற்கல்லே என உணராது. கடற்கல் என்று நினைத்து, தம் வீட்டுப் பின்புறத்தில் கால் தேய்த்துக் கழுவுவதற்கு வசதியாகப் போடச் செய்தார். நாள்கள் தேயத்தேய, அக்கல்லின் மேலிருந்த அழுக்கும் தேய்ந்து பளிச்சிட ஆரம்பித்தது. ஒரு நாள், ஏலேல சிங்கர் அதை உற்றுப் பார்த்தார்.

அதில் தம் பெயரைக் கண்டார். பெரு மகிழ்வு கொண்டார். அதனை வியந்தெடுத்துப் போற்றினார். தான் விட்டெறிந்தாலும் தம் கொடைத் தன்மையால், தமது பொருள் தம்மையே வந்தடைவதை உணர்ந்தார். மேலும் மேலும் தான தர்மம் செய்து புகழோடு வாழ்ந்தார்.



# கூட்டுக் குடும்பத்துக்கு நல்லுதாரணமான எறும்புகள்



எறும்புகள் எண்ணிக்கையில் அதிகமானவை. எந்த இடத்திலும் வசிக்கும் தன்மை கொண்டவை. இனிப்புப் பொருள்களை உண்டு நட்டம் ஏற்படுத்துபவை. இதனால் மனித சமுதாயத்தில் எறும்புகள் முக்கியத்துவத்தை இழந்துள்ளன.

விலங்கியல் விஞ்ஞானிகளது கருத்துப்படி உலகில் 30 ஆயிரம் வகையான எறும்புகள் உள்ளன. எறும்புகள் இல்லாத இடமே உலகில் இல்லை எனக் கூறலாம். எறும்பினங்களின் கூட்டு வாழ்க்கை வியப்புத்தருமொன்றாகும்.

எறும்புகள் பூச்சி இனத்தைச் சேர்ந்தவை. எறும்பின் உடல், உருண்டையானதும் உறுதி வாய்ந்ததுமான தலை, தலையை அடுத்துள்ள மார்பு [Thorax] அதையடுத்து வயிற்றுப் பாகம் [Abdomen] என மூன்று பாகங்களைச் கொண்டது. மார்பும் வயிற்றுப் பாகமும் மெல்லிய உருளையான உடற்பாகத்தால் இணைக்கப்பட்டுள்ளன. இதனை இடுப்பு [Waist] என அழைக்கிறோம். எறும்புகளுக்கு மூன்று சோடிக் கால்கள் உள்ளன. இவை உடலின் மார்புப் பகுதியில் இணைந்துள்ளன. எறும்புகளுக்கு இறக்கைகள் கிடையாது.

சில சமயங்களில் இறக்கை முளைத்த எறும்புகளைக் காண முடிந்தாலும் அவை நீடித்திருப்பதில்லை. குறுகிய காலத்தில் உதிர்ந்துவிடும். தலைப்பாகத்தில் முன்புறமாகக் கீழ் நோக்கிய வாயும், வாய் உறுப்புக்களும் அமைந்துள்ளன. தலையின் மேற்பாகத்தில் முன்னோக்கிய ஒரு சோடி 'உணர்வு இழைகளும் [Antannae] கண்களும் உள்ளன. தொடும் உணர்ச்சியைக் கிரகிக்கும் தன்மை இந்த உணர்வு இழையங்களுக்கு உண்டு.

எறும்புகள் பெரும்பாலும் பூமியின் கீழ் வளை தோண்டி அதில் வசிக்கின்றன. சில வகை எறும்பினங்கள் மரப்பொந்துகளிலும், கற்களின் அடியிலும், இன்னும் சில மர இலைகளைக் கொண்டு தாமே கட்டிய கூட்டிலும் வசிக்கின்றன. எறும்புகள் கூட்டம் கூட்டமாக சேர்ந்து தனித்தனிக் குடும்பமாக வாழ்கின்றன. எறும்புகள் ராணி இனம், ராசா இனம், வேலையாள் இனம், போர்வீரர் இனம் என நால்வகை இனங்களைக் கொண்டவை. இந்த இனங்களிடையே உடலமைப்பில் சிற்சில மாறுபாடுகள் உள்ளன. ஒவ்வொரு இனமும் ஒவ்வொரு தொழிலை மேற்கொண்டு கடமை தவறாது சுறுசுறுப்புடன் உழைப்பன.

முட்டையிட்டு இன விருத்தி செய்யும் பொறுப்பு ராணி எறும்பினுடையது. வேறு எந்த வேலையும் இவை கள் செய்வதில்லை. வேலையாள் இன எறும்புகள் ஏனைய சகல இன எறும்புகளுக்குமான உணவை சுறுசுறுப்பாகச் சேகரித்து வழங்குவதுடன் கூடு கட்டுதல் பழுது பார்த்தல் போன்ற வேலைகளையும் செய்கின்றன. போர்வீரர் இன எறும்புகள் எதிரிகளிடமிருந்து இனத்தைப் பாதுகாக்கும் பணியைச் சுறுசுறுப்புடன் மேற்கொள்கின்றன.

எறும்புகளுக்கும் பார்வை பெரிய அளவில் துணை புரிவதில்லை. ஆனால் மோப்ப சக்தி எறும்புகளுக்கு நிறையவே உண்டு. தமது வளையை விட்டு வெளிக்கிளம்பிச் செல்லும் போது அவை ஊர்வதால் பாதையில் தேய்வு ஏற்படுவதால் வந்த வழியே அவை திரும்புவது அவற்றுக்குச் சாத்தியமாகிறது.

எறும்புகள் தங்கள் உடலையும், சூழலையும் அடிக்கடி தூய்மை செய்து கொள்கின்றன. எறும்புகள் ஒரு நாளைக்குச் சராசரி மூன்று மணிநேரம் ஓய்வெடுத்துக் கொள்கின்றன. தமது கூட்டத்தின் உறுப்பினர்கள் எவராவது [illegible] எறும்புக்குப் பிரேத ஊர்வலம் நடத்தி கடைசியில் தனியான ஒரு இடத்தில் புதைக்கின்றன என்பது ஆச்சரியம் தரும் உண்மை. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசைகள்........

[09 ஆம் பக்கத் தொடர்ச்சி....]

அந்த இடியோசையில் முஸ்தவாக்கா சொன்னவைகள் அவனுக்கு விளங்கவில்லை போலும். அவன் கால்கள் மீண்டும் வேகமாக நடைபோடத் தொடங்கின.

நீர் கொழுத்த புகாரிக்குள் தன்னை ஒப்புக்கொடுத்த சந்திரன் சோகை பிடித்த பெண்ணைப்போலெ....

எங்கிருந்தோ கூவிய சாமக் கோழியைத் தொடர்ந்து இன்னும் சில கூவல்கள்...

'வீட்டை போகெ விடிஞ்சிடும்' மனத்தில் எண்ணிக்கொண்டே போடியாரின் கேற்றில் நின்றவண்ணம் குரல் விட்டான்.

''ஆரெது? மாணிக்கமா?'' அந்த மாரிகாலத் தூக்கக் கலக்கத்திலும் அவரின் செவிகள் அவன் குரலைக்கொண்டே அடையாளம் காட்டின.

சாவிக் கொல்லையைத் தலைமாட்டிற்குள்ளிருந்து எடுத்தவர் போட்டிக்கோ கதவைத் திறக்கிறார். அவரின் கையில் இருந்த 'டோர்ச்' அவன் கால்களில் ஒளியைத் துப்புகிறது.

''என்னெ மாணிக்கன் ஆத்திலெ தண்ணி எப்பெடி? சூட்டடியிலே தண்ணி ஏறிரிக்கா?'' போடியார் எதார்த்தமான விசயத்தில் இறங்கினார்.

மாணிக்கம் மங்கலான நிழலில் அவர் முகத்தைப் பேந்திப் பேந்திப் பார்த்தான். 'சூடு'அடிக்கவேண்டும் என்ற ஆவல் முகத்தை ஆட்கொண்டிருப்பதான உணர்வு அவன் உள்ளத்தைத் தொட்டது.

அந்தக் கணத்திலிருந்து அவனுள் புரியாத வேதனையும் வேக்காடும் முளைகொண்டது.

விதை விதைத்தவன் அவன்தானே!

''களத்தடியிலெ முழங்கால் தண்ணி. நாமெ இந்தெ நாளையிலெ சூடடிச்சாப்லெதான்,'' வெறுப்பு விரக்தியின் உருவில்.

''மெய்தான் துவக்கெங்கே?''

மாணிக்கத்தின் செவிகளை நாகம் தீண்டியதைப் போலே, அடி நாக்கு மேல் முரசுடன் ஒட்டிக்கொண்டது. அவன் பேசமுடியாமல் திணறிக்கொண்டே -

''புரையிலெ எடுத்துவைச்சாப்லெ''

''பளீர்! பளீர்!''

போடியாரின் கை அவன் கன்னங்களில் அறைந்து ஓய்கின்றது.

''பறநாயெ உனக்கு மண்டையில களிமண்ணாடா? வளிசெக்கூதிரெ மகன்!'' அந்த வார்த்தைகள் போடியாரின் மனைவியையும் தூக்கக் கிறக்கத்திலிருந்து எழுப்பியது.

திறந்திருந்த கதவினூடாக அவள் கணவனையும் மாணிக்கத்தையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு அடுப்பங்கரையை நோக்கினாள். அந்தவேளையில் அவர் மாணிக்கத்தை அப்படிச் சினந்தது ஏனோ அவளுக்குப் பிடிக்கவில்லை.

மாணிக்கம் மூக்கன் போடியாரின் முல்லைக்காரன் என்று மட்டும் சொல்லமுடியாது. போடியாரின் அந்தரங்கத்துக்கு உவப்பான சகல காரியங்களிலும் அவன் பங்கும் உண்டு. அவன் போடியாரிடம் 'முல்லைக்கார'னாக வந்த நாள்களில் ஓடி ஆடித் திரிந்த அவரின் ஒரே செல்வப் புதல்வன் இன்னும் சிலநாள்களில் தந்தையாகப் போகிறான். இடையில் இருபத்திரண்டு வருடங்கள்! அவனைப் பொறுத்த வரையில் இருபத்திரண்டு நாள்கள்தான்!

போடியாருக்கு அவன்மீது சினம் வெடிக்கும்போதெல்லாம் அவரின் கையிலிருக்கும் எந்தெ ஆயுதமானாலும் அவனுடலைப் பதம் பார்க்கத் தவறாது.

உலுமுத்தம் வரிச்சி, வேலைக் காரன் கம்பு, மண்வெட்டிப்பிடி என்று அவனுடலை அள்ளிக் கொஞ்சம், அந்தக் காயங்கள் மாறுவதற்கு முன்னரே அவன் அந்தச் சம்பவங்களை மறந்துபோய் விடுவான்.

எவ்வளவு பெரிய்ய மனம் அவனுக்கு? ஆனால் அவன் எப்படி உழைத்தாலும் திருப்தி காணாதவொரு சுபாவம் போடியாருக்கு. போடியாரின் மனம் மாணிக்கத்தையும் துவக்கையும் நினைத்து நினைத்துப் புகை கக்கியதினால் - முகம் சிவப்பேறி - சினம் வெடிக்கும் தருணத்தைக் குறி பார்த்துக் கொண்டிருந்தது.

குடையை எடுத்துக்கிட்டுச் சந்தெப்பக்கம் பேவெம், ராவெல்லாம் பெஞ்செ மழையிலெ, சூடெல்லாம் அடிச்சிட்டுப் போனாலும் போயிரிக்கிம்''.

குடையின் போர்வைக்குள் உடம்பை ஒப்புக்கொடுத்தவராக நடை பயில்கிறார் மூக்கன் போடியார். அவர் வீதியில் இறங்கியதுமே அவரைத் தேடிய்வராக அவரின் வலது கையான அவக்கன் போடியாரின் தரிசனமும் சிந்தித்தது.

''போடியார் புளியடித்துறைப் பக்கம் ஒரு நடபோவெம். வெள்ளம் எப்படிண்டு பார்பெமெ.'' மூக்கன் போடியாரின் நாசித்துவாரங்கள் புடைத்துச் சரிந்தது.

''போய்ப் பார்த்து என்னதான் செய்யப்போறம். வானத்தை மறைச்சி பந்தலாபோடப்போறம்.''

அவக்கன் போடியாரின் சாரன் முழங்காலைக் கவ்விக்கொள்ள - தோளில் கிடந்த துவாய் தலையைச் சுற்றிக் கொள்கிறது.

நுங்கும் நுரையுமாகப் பொங்கி வழிந்துசெல்லும் ஆற்றின்மீது மிதந்துசெல்லும் உப்பட்டிகளைக் கண்டதும்

''சேய்! என்னெ மசிரு மழையிது. ஒவ்வொரு உப்பட்டியிலெயும் நாலு மரைக்கா நெல்லிலுவா போவுது. இந்தெ மாரிக்கு மரைக்கால் பதினைஞ்சிக்கு விக்கலாமெ!'' இதயம் மறுகி ஆலாய்ப் பறந்தது.

அன்றெல்லாம் அப்பிரதேசம் கார்மேகத்தின் அணைப்புக்குள்ளாகி... இரவோடு இருளாக...

வாடியில் தவைந்துவிட்ட கணவன்மார்களையும் பிள்ளைகளையும் எண்ணிக் கலங்கி அக்கிராமத்தின் சந்து, பொந்துகளி ளெல்லாம் சிணுங்கல்களும் கூடவே கண்ணீர் மணிகளும் தெறிக்கத் தொடங்கின.

மோட்டு வளையில் துணிகளில் சில்லறைக் காசுகளும் பச்சை அரிசியும் காணிக்கையாகத் தொங்கத்தொடங்கின.

இரண்டு நாள்கள் அடைமழையில் கரைந்தன.

மூன்றாம் நாள் ஒரு என்ஜின் வள்ளம் அந்தக் கிராமத்தின் சில மனித மூட்டைகளைச் சுமந்தவண்ணம் வயல் வெளியை நோக்கி நீரைக் கிழித்துக்கொண்டு செல்கிறது.

அங்கே சோகத்தின் நிழலாய் மூக்கன் போடியார்.

இரண்டு நாள்களாக எதையோ பறிகொடுத்த பதறலில் - வெள்ளத்தில் கரையேறிய கயல்போல் துடிதுடித்தது.

மாணிக்கம் எங்கெ போனான்? ஆண்டவன்தான் அவனக்காக்கணும்' இவரைப்போலவே அந்த வள்ளத்தில் பயணம் செல்லும் போடிமார்கள் இறைவனைப் பக்திபூர்வமான தேடலில் தரிசனம் காணு முயற்சியில் இறங்குகிறார்கள். ஓடிக்கொண்டிருந்த அந்த வள்ளத்தை - எங்கிருந்தோ தோன்றிய பெருஞ்சுழியொன்று அந்தப் பென்னம்பெரிய மருத மரத்தில் அடராக்கி நிறுத்தியது.

ஒரு முறை வள்ளம் ஆடி நின்றது;

அந்த மரத்தின்மேலே கைக்கு எட்டும் உயரத்தில் ஒரு காட்சி - அவர்களின் கண்களைப் பறித்து இழுத்துப் பயம் காட்டியது.

அங்கே மருதமரத்தின் கிளைகளில் சிக்கி - மாணிக்கத்தின் உடல் தலை கீழாகத் தொங்கிக்கொண்டிருந்தது.

உடலில் ஆங்காங்கே வெள்ளைப் புண்கள். கண்கள் இருந்த இடம் வெறும் மூழியாக - மீன்கள் கொத்தித் தின்றிருக்கவேண்டும்.

அதற்குமேலே! அந்த மரத்தின் நடுப்பகுதியில் துவாயினால் சுற்றிக் கட்டப்பட்ட - அந்த இரட்டைக்கண் குழல் துவக்கு அவர்களை நோக்கிக் குறிபார்ப்பதுபோலக் காட்சி தந்தது.✱

---

## சொற்சிலம்பம் - போட்டி இல: 83

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | 9 | | |
| | ■ | 10 | 11 | | | ■ | |
| ■ | 12 | | | | ■ | 13 | |
| 14 | | ■ | | ■ | 15 | | ■ |
| 16 | | 17 | ■ | 18 | | | 19 |
| | ■ | 20 | 21 | | ■ | 22 | |
| 23 | | | | ■ | 24 | | |

அனுப்புபவர் பெயர்:...........................

விலாசம்:...........................

...........................

கையொப்பம்:...........................

### மேலிருந்து கீழ்

1. கால்.
2. சேலை.
3. தூக்கிச் செல்லுதல்.
4. உலகம்.
5. என்று.
6. சுவாசத் தொகுதியில் அழற்சி ஏற்பட்டால் இது வரும். இதைச் சுகுணப் பிழையாக வும் கருதுவர்.
9. தங்களது.
11. துக்கம்.
12. கௌரவித்து வழங்கும் பரிசில்.
13. துன்பம்.
14. ஒரு பறை வகை, இதை அடிப்பதன் மூலம் செய்தி பரப்புவது பழங்காலத்து முறை.
15. முகத்தில் வரும் - இளமையைக்காட்ட.
17. கழிவு அகற்றும் உறுப்பு.
18. நெல்லில் அரிசியைப் பிரிக்க எஞ்சுவது.
19. வெடித்துச் சேதத்தை ஏற்படுத்துவது பரு மனையும் குறிக்கும்.
21. சாபம் கொடு.

### இடமிருந்து வலம்

1. பந்தோபஸ்து.
5. யாது.
7. குறைவு/ (சூடு குறைதல்).
8. முகம்.
10. எரிதல்.
12. இந்துக்கள் இதன் இலையை பூஜைக் குப் பயன்படுத்துவர்.
13. வீடு/ மனை.
14. மரம்.
15. தூங்கு.
16. உடம்பின் பின்புறம் உள்ளது.
18. வலுவான உலோகம்.
20. பத்தாம் திதி.
22. விழி.
23. காதுக்குள் சேரும் கழிவை இவ்வாறு கூறுவர்.
24. மரத்தின் பாகம்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்ட சாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 83**
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 28.10.2009 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 83 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 01.11.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படு வதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 81 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) முகாமைத்துவம். (6) கனல். (7) வலி. (9)மல். (10) கர்ப்பம். (11) திருப்பு. (12) துரும்பு. (13)அணி. (14) பருப்பு. (15) தாலி. (16)சம்பாதி. (18) சுத்திகரி. (19) பாறை.

**மேலிருந்து கீழ்**

(1) முகமன். (2) கானல். (3) மைல். (4) துவர்ப்பு. (5) வலிப்பு. (8) அம்மணி. (10) கரும்பு (11) திருப்பதி. (12) துரு. (13) அலிபாபா. (14) பஞ்சு. (15) தாம். (16) சரி. (17) திறை.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 81 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விபரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
கி.உதயராணி,
புலோத்தம்பை,
புலோலி தென்மேற்கு, புலோலி.

**2 ஆம் பரிசு**
சி.கஜாகரன்,
உபதபாற் கந்தோர் ஒழுங்கை,
தாவடி தெற்கு, தாவடி.

**3 ஆம் பரிசு**
சி.அனித்தா, தரம் - 8,
இந்து மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) தம்பையா போகராசா,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

(2) செல்வி ராதிகா பரஞ்சோதி,
வேலணை மேற்கு,
வேலணை - 06.

(3) ந.செல்வராணி,
பண்டித்தாழ்வு,காரைநகர்.

(4) பா.உபேந்திரா,
முகாமைத்துவ பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.

(5) செந்தில்குமாரன் சுஜீவா,
இல.38, ஆனைக்கோட்டை வீதி,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? -36

01. இந்தவருடத்துக்கான 'இருபது-20" கிரிக்கெட் போட்டியின் சிறந்த வீரர் என்ற ஐ.சி.சி.விருதைப் பெற்ற வீரர் யார்?
02. வடமராட்சிப் பகுதியில் வற்றாத நன்னீர்க்கிணறுஎங்குஅமைந்துள்ளது?
03. கொம்பிலே கண்ணுடைய உயிரினம் எது?
04. 'கத்தரித் தோட்டத்து மத்தியிலே....' என்ற புகழ்பெற்ற சிறுவர் பாடலை எழுதியவர் யார்?
05. ஐ.நா.சபையின் அணுசக்தி அவதானிப்பு முகவர் நிறுவனத் தலைவரின் பெயர் என்ன?

### விடை தெரியுமா?

தெரிந்தால் 28.10.2009 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடை தெரியுமா? -34 சரியான விடைகள்

01) ஜம்போ - யானை.
02) 1926 ஆம் ஆண்டு.
03) 1996 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 28.
04) 1983 ஆம் ஆண்டு.
05) 'தறோப்'

### பரிசுபெறுவோர்

01. ஜெ.துவாரகா,
தரம் - 3C,
யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
02. சி.அகன்யா,
தரம் - 8E,
யா/ இந்து மகளிர் கல்லூரி.




# தெனாலிராமனின் வீரச் செயல்



ஒரு சமயம் அரசசபையில் அரசன் முன்னிலையில், அண்மையில் நிகழ்ந்த போரில் தாங்கள் செய்த வீரதீரச் செயல்களைப் பெருமையாகக் கூறிக் கொண்டிருந்தனர் சில வீரர்கள். பொறுமையோடு அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த தெனாலிராமன் எழுந்து, "நீங்கள் செய்ததாகக் கூறும் செயல்கள் எல்லாம் நான் செய்த ஒரு செயலுக்கு இணையாகுமா?" என்றான்.

"நீ செய்த வீரச் செயல் என்ன?" என்று கேட்டார் அரசர்.

"போர்க்களத்தில், எதிரியின் சேனாதிபதியின் முன்னே துணிந்து சென்று அவனுடைய ஒரு காலை வெட்டி வீழ்த்தி விட்டேன்" என்று கூறினான் தெனாலிராமன். அனைவரும் "ஏன் அவன் தலையை வெட்டாமல் காலை வெட்டினீர்" எனக் கேட்டனர். அதற்கு "அவனுடைய தலையை எனக்கு முன்னரே யாரோ வெட்டிவிட்டனர். அதனால் நான் காலை வெட்டினேன்" என்றான் தெனாலிராமன். இதைக் கேட்ட சபையோர் விழுந்து விழுந்து சிரித்தனர்.

த.அட்சரன், தரம் 7 E, யா/ புனித பத்திரிசியார் கல்லூரி.




குகையின் வாயிலில் விழுந்து பிரகாசித்துக் கொண்டிருந்த நிலவொளி திடீரென மறைக்கப்பட்டது.
என்னவென்று பார்த்தால் ஷேர்கான்-வேங்கைப் புலியார் தனது தலையையும் தோள்களையும் குகையின் வாய்க்குள் நுழைத்து எதையோ தேடமுயல்வது தெரிந்தது.அவருக்குப் பின்னால் நரிப்பிள்ளை-தபாக்குய் - நின்றிருந்தார்.

"பிரபுவே அது இந்தப் பக்கம்தான் போனது நான் பார்த்தேன்" என்று நரியார் மீண்டும் மீண்டும் முனகிக் கொண்டிருந்தார்.

அப்பா ஓநாய்க்கு இதெல்லாம் கொஞ்சமும் பிடிக்கவில்லை

"ஷேர்கான் வருகை புரிந்திருப்பது எங்களுக்கு கௌரவம்தான்- ஆனால் எதற்காக என்ன வேண்டும் அவருக்கு" என்று கேட்டார் அப்பா ஓநாய்.

"நான் என்ன தேடுகிறேனா? ஒரு மனிதப் பையன் இங்கு வந்திருக்கிறான். அவனுடைய பெற்றார் ஓடிவிட்டார்கள். பையனை என்னிடம் கொடுத்து விடுங்கள்".



என்று கடுந்தொனியில் கூறினார் ஷேர்கான்.

மரம் வெட்டியின் தீக்கிடங்கில் பாய்ந்து தீக்காயம் ஏற்படுத்திக் கொண்டதால் எரிச்சல் கொண்டிருந்தார் ஷேர்கான். இருந்தாலும் குகைக்குள் நுழைந்து அவரால் எதுவும் செய்துவிட முடியாது என்பது அப்பா ஓநாய்க்குத் தெரியும். அதனால் ஷேர்கானுக்கு சற்று உறைப்பாகவே பதில்சொன்னார்.

"ஓநாய்கள் சுதந்திரமான மக்கள். அவர்கள் தங்கள் சமூகத்தின் தலைவர்களிடமிருந்து வரும் கட்டளைகளுக்குத்தான் பணிவார்கள்- உடம்பில் கோடுபோட்டுக்கொண்டிருக்கும் மாடு திருடர்களிடமிருந்து அல்ல" என்று துடுக்காகச் சொன்னார் அப்பா.

"மனிதக் குழந்தை எங்கள் குழந்தை- அதைக் கொல்வதானால் நாங்கள் தான் தீர்மானிப்போம்" என்று அவர் மேலும் சொன்னார்.

"தீர்மானிப்பதா? என்ன கதையிது? எனக்குரியதை எடுத்துக்கொள்ள உனது நாய்க்குகைக்குள் நுழைய வேண்டியதில்லை. நான் ஷேர்கான் பேசுகிறேன் தெரிகிறதா." என்று கோபத்தை கொப்பளித்தார் ஷேர்கான். ஓநாயின் குகை புலியின் உறுமல் சத்தத்தால் அதிர்ந்தது.

அம்மா ஓநாய் குட்டிகளை உதறித் தள்ளிவிட்டு எழுந்து முன்னுக்குப்பாய்ந்து வந்தா. அவாவின் கண்கள் இரண்டு நீல நிற சந்திரன்கள் போல இருளில் ஜொலித்தன ஷேர்கானின் எரிந்து கொண்டிருக்கும் கண்களை நோக்கியபடி அம்மா ஓநாய் கூறினார்.

(வளரும்)

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-......................................
தரம் :-......................................
பாடசாலை :-......................................
......................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

........................ ........................................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

## பூக்கள்

காலையிலே பிறக்கிறாய்
மாலையிலே இறக்கிறாய்

மூக்கினைத் துளைக்கிறாய்
பச்சை வலைக்குள் மிதக்கிறாய்
சிகைக்கு அழகைத் தருகிறாய்

வண்ண வண்ண நிறத்தைக் கொண்டு
விண்ணை அழகில் மூழ்கச் செய்கிறாய்.

ஈ.தீபிகா, தரம் 4 F,
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை.

## கருணை



பிறருக்காக
கரைந்து கொண்டிருந்த
மெழுகு வர்த்தி
மௌனமாக....
அழுதது....

தனக்காகக்
கருகிய
திரியை
நினைத்து.

இ.சிரோஜினி, தரம் 9,
யா/ திருக் குடும்பக் கன்னியர் மடம்.

## மாணவர் தூரிகை



வி.சகானா, தரம் - 8A,
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



தே.ரோஜானந்தன், தரம் -7B,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.



தி.ஜெனனி, தரம் -9B,
யா/மெதடிஸ்த பெ.உ.பாடசாலை.



வி.திவாகரன், தரம் - 9A,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.



அ.தசாப்தன், தரம் -9A,
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தி.



ம.துஷானி, தரம் -9F,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



ச.பவித்திரா, தரம் -7A,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசை, பாடலாக்கம், நடனம் ஆகிய முத்துறைகளிலும் இறுதிக் காலம் வரை புதுமைகள் பல படைத்தவர் வீரமணி ஐயா

பன்னிரண்டு தமிழ் மாதங்களுள் வழிபாடுகளுக்குச் சிறப்புக்கொண்ட புரட்டாதி மாதமொன்றின் 15 ஆம் நாளில் பிறந்து, அதே புரட்டாதி மாதம் ஒன்றின் 8 ஆம் நாளில் அமரரானவர் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயா அவர்கள்.

கடந்த 2003 ஆம் ஆண்டு தமது 72 ஆவது வயதில் அமரரான வீரமணி ஐயா தமிழ் இசைத்துறை, கவிதைத்துறை மற்றும் நடனத்துறை ஆகியவற்றின் வளர்ச்சிக்கு வழங்கிய பங்களிப்பு மற்றும் அத் துறைகளில் நிகழ்த்திய சாதனைகள் காலத்தால் அழியாத தனித்துவம் மிக்கவை. அவரது நினைவாக இந்த ஆக்கம் இங்கு பிரசுரமாகிறது.

''கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன் நற்கதி அருள்வாயம்மா...'' இந்தப் பாடலை உச்சரிக்காத நா இல்லை என்றே சொல்லலாம். அந்த அளவுக்கு எல்லோர்



மனதிலும் நீங்கா இடம்பெற்ற ஒரு அருமையான பாடல் அது. ஆனந்த பைரவி இராகத்தில் ஆரம்பமாகி அமைந்த ஒரு ராகமாலிகா. அந்தப் பாடலைப் பாடியவர் தென்னிந்திய பிரபல பின்னணிப் பாடகர் ரி.எம்.சௌந்தரராஜன். அதனை எழுதியவர் பிரம்மஸ்ரீ ந.வீரமணிஐயர்.

இம்மாதம் 8ஆம் திகதிதான் அவர் எம்மை பிரிந்த நாள். [08.10.2003] இசையுலகும் நடன உலகும் அதிர்ந்து நின்ற நாள். ஈழதேசம் மிகப்பெரிய ஒரு மஹாவித்து வானை இழந்த நாள். இயல், இசை, நாடகம் என முத்தமிழிலும் மூழ்கி அதிலிருந்து முத்துக் களை மட்டுமே எமக்குத் தந்த இயலிசைவாரிதி மறைந்தநாள். இசையாகட்டும், நடனமாகட்டும், பாடல்கள்

## இதயத்துக்குள் கூடாரமிட்டு ஒலித்துக் கொண்டிருக்கும் "கற்பகவல்லி நின் பொற்பதங்கள்" அவரை என்றும் நினைவுபடுத்தும்

இயற்றுவதாகட்டும் எல்லாத்துறையிலும் தமது பன்முக ஆளுமையை வெளிப்படுத்திய சாகித்ய சாகரம் வீரமணி ஐயாவின் நினைவுப் பதிவு இது.

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ். இணுவையம்பதியில் 1931ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 15ஆம் திகதி இந்தப் பூவுலகில் கால் பதித்தார். ஆரம்பக் கல்வியை இணுவில் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும், உயர் கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் பயின்றார். படிக்கும் காலத்திலேயே தன்னுடைய கலைத்திறமையை வெளிக்காட்டி மிகவும் ஆணித்தரமாக தன்னுடைய காலை கலை உலகில் பதித்தார். 1947 ஆம் ஆண்டு தமது 16 ஆவது வயதில் பாடசாலையில் நடந்த ஒரு பரிசளிப்பு விழாவில் மனோகரா நாடகத்தில் பெண்வேடமிட்டு நடனமாடி பல முகபாவங்களைக் காட்டி நடித்தார். அரங்கத்தில் இருந்தோர் அனைவரும் மெய்சிலிர்த்து பார்த்துக் கொண்டு இருந்தனர்.

அதனைப் பார்த்துக் கொண்டு இருந்த கல்லூரி அதிபர் உடனேயே அலுவலகத்திற்குச் சென்று ''சகல துறைகளிலும் மிளிர்ந்த மாணவன்'' என்பதற்கான ஒரு வெள்ளிப்பதக்கத்தை எடுத்து வந்து அந்த மேடையிலேயே வீரமணி ஐயாவுக்கு சூட்டி மகிழ்ந்தார். வளர்ந்து பட்டப்படிப்புக் காக சென்னை வந்தார். விஞ்ஞானமானி பட்டம் படிக்கவே வந்தார். ஆனால் புலன்கள் எல்லாம் இசையிலும் நடனத்திலும் சென்றன. உலகமே போற்றும் இசை மேதை பாபநாசம் சிவன் மற்றும் எம்.டி. இராமநாதன் ஆகியோரைத் தனது இசைக்கான குருமாராகவும், கலாஷேத்திரத்தில் புகழ்பூத்த நாட்டிய மேதை ஸ்ரீமதி ருக்மணிதேவி அருண்டேல், சாரதா ஆகியோரை நாட்டியத்துக்கான குருமாராகவும் வரித்துக் கொண்டு இசையிலும், நடனத்திலும் தனது திறனைச் செவ்வனே வெளிப்படுத்தினார்.

இவ்வண்ணம் பயின்று வரும் காலத்தில் மயிலாப்பூர் கபாலீஸ்வரர் ஆலய கற்பகம்பாள் மீது அவர் கொண்ட பக்தி காரணமாக உருவானது தான் கற்பகவல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்.. என்ற சாகித்தியம். மிகப்பிரபலயமான ஒரு பாடல். வெளிவந்த ஆண்டு 1956. ரி.எம்.எஸ் அவர்களின் குரல் கேட்பவரை நெகிழச்செய்யும். இந்தப் பாடலுக்கு வயலின் வாசித்தவர் உலகம் போற்றும் குன்னக்குடி வைத்தியநாதன். இவ்வளவு காலமாகியும் அந்தப் பாடல் இன்று வரை இதயத்துள் கூடாரமிட்டு ஒலித்துக் கொண்டு இருக்கிறது. ஒருமுறை வானொலி அறிவிப்பாளர் இளையதம்பி தயானந்தா வீர மணிஐயா அவர்களிடம் ஒரு கேள்வி கேட்டாராம். நீங்கள் இயற்றிய பல பாடல்கள் வெற்றி பெற்றிருக்கின்றன. ரி.எம். எஸ். பாடிய எத்தனையோ பாடல்கள் வெற்றி பெற்றிருக்கின்றன, நீங்கள் இயற்றிய இந்தப்பாடல் எப்படி இந்த அளவுக்குப் பெருவெற்றி பெற்றது? என்று.

வீரமணி ஐயா ஒரு கணம் ஆடிப்போனார். பின்னர் சுதாரித்துக் கொண்டு இவ்வாறு சொன்னாராம். ''நான் அந்தப் பாடலை இயற்றி என்னுடைய குருநாதர் பாபநாசம்

## கலைஞர்களை ஊக்குவிப்பதிலும் பாராட்டுவதிலும் மதிப்பதிலும் ஒப்பாரற்ற பண்பாளன் அவர்

சிவனிடம் காட்டினேன். அவரும் ராகத்திற்கு ஏற்றாற்போல் பாடிப் பார்த்துவிட்டு... ''சிற்பம் நிறைந்த சிங்கார கோயில் கொண்ட...'' என்ற வரியில் ஏதோ ஒன்று தவறவிடப்பட்டது போன்ற உணர்வு வருகிறது. நான் ஏதாவது மாற்றம் செய்யலாமா? என்று கேட்டார். நானும் அதற்கு மனப்பூர்வமாக சம்மதம் தெரிவிக்க பாபநாசம் சிவன் அவர்கள் ''சிற்பம் நிறைந்த உயர் சிங்காரக் கோவில் கொண்ட...'' என்று உயர் என்ற சொல்லைச் சேர்த்தார். அவர் சேர்த்த அந்த 'உயர்' என்ற சொல் பாடலை யாத்த எனக்கு உயர்வைத் தந்தது. பாடலைப் பாடிய ரி.எம்.எஸ் இற்கு உயர்வைத்தந்தது. பாடலுக்கு வயலின் வாசித்த குன்னக்குடி வைத்தியநாதனுக்கு உயர்வைத் தந்தது.''

குருவின் அந்த ஆசீர்வாதமே அவரை இந்தப் புகழின் உச்சிக்கு எடுத்துச் சென்றது என்றால் மிகையல்ல. இதனை இளையதம்பி தயானந்தாவின் வானலையின் வரிகள் என்ற நூல் வெளியீட்டு விழாவில் அவர் உரையாற்றும் போது சொல்லி மகிழ்ந்தார். நேரடியாகவே என் காதுபடக் கேட்டேன். அநேகமாக அதுதான் அவர் கலந்து கொண்ட இறுதி விழாவாக இருந்திருக்க வேண்டும்.

வீரமணி ஐயா பல்துறைக் கலைஞர். இசையாகட்டும், நடனமாகட்டும், பாடலாக்கம் ஆகட்டும் அவர் இறுதிக்காலம் வரை அதில் புதுமைகளைச் செய்து கொண்டு இருந்தார். நடனத்தில் புதிய புதிய முத்திரைகளை உருவாக்குவதிலும், இசையில் புதிய ராகங்கள், சாகித்தியங்கள் இயற்றுவதிலும், இராகங்களுக்குப் பாடல்கள் இயற்றுவதிலும், கோவில்களுக்கு பாடல்கள் என அவர் எப்பொழுதும் தான் சார்ந்த கலைக்குத் தொண்டாற்றிக் கொண்டே இருந்திருக்கிறார். இராகங்களுக்குப் பாடல் இயற்றுவதைத் தமிழில் 'வாக்கேயகாரர்' என்று சொல்லுவார்களாம். யாழ்ப்பாணம் தந்த மிகப்பெரும் வாக்கேயகாரரை நாம் இழந்து இற்றைக்கு 6 வருடங்கள் ஆகிவிட்டன. கர்நாடக இசையிலே 72 மேளகர்த்தா ராகங்களுக்கான பாடல்கள் இயற்றி இசை உலகைத் தன்பக்கம் ஒரு முறை திரும்பிப் பார்க்க வைத்தார். காரணம் இப்படி 72 மேளகர்த்தா இராகங்களுக்கும் பாடல்கள் இயற்றியவர்கள் கோடீஸ்வர ஐயர், ராமசுவாமி தீக்ஷிதர், மகாவைத்தியநாதர், போன்ற சிலரே. இதனால்தான் இவர்பால் அனைவரது கண்களும் திரும்பின.

கர்நாடக சங்கீத உலகில் பாலமுரளி கிருஷ்ணா ஒரு சகாப்தம். அவர் ஒருமுறை- 1980 ஆம் ஆண்டளவில் - யாழ்ப்பாணம் வந்த போது இவரது வாக்கேயகாரத் திறனை அறிந்து வியந்து நாலு சுரத்தில் இராகம் அமைத்துப் பாடமுடியுமா எனக் கேட்டார். அடுத்த கணமே வீரமணி ஐயா 'ஸகமநிஸ' என்ற ஆரோகணத்தையும் 'ஸநிமகஸ' அவரோகணத்தையும் கொண்ட 'ஜெயம்' என்ற இராகத்தை உடனேயே ஆக்கி ஆதி தாளத்தில் 'ஜெயமருள்வாய் ஜெகதீஸ்வரா' ஜெயகௌரி மணாளா - தயாளா - என்ற கீர்த்தனையை இயற்றினார். வாயடைத்து நின்ற பாலமுரளிகிருஷ்ணா பாராட்டுப்பத்திரம்




வழங்கி விட்டுச் சென்றார்.

தான் ஒரு மேம்பட்ட கலைஞன் என்று அவருக்கு வித்துவச்செருக்கு என்றைக்குமே இருந்ததில்லை. சிறுவர்களுடன் சேர்ந்து பரராஜசேகரப்பிள்ளையார் வீதியில் ஆடி மகிழ்வார். அவர்களைக் கைகளால் தாளம் போட வைத்து ஆட்டுவித்து மகிழ்வார். இதைவிடப் பெரிய பண்பு இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் தன்மை. சக கலைஞனை மதிக்கும் தன்மை. நான்தான் - தான்தான் - என்ற மமதை அற்ற மாமனிதர். இதற்குச் சிறந்த உதாரணமாக, இவர் தொடர்பாக யாழ். நல்லூர் ஆஸ்தான நாதஸ்வர வித்துவான் பாலமுருகனுடன் உரையாடிய சமயம் அவர் பகிர்ந்து கொண்ட தகவலைக் கூறலாம்.

ஒருநாள் இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் ஆலயத்தில் கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி மற்றும் உதயநாதன் குழுவினருடன் பாலமுருகனும் வாசித்துக் கொண்டிருந்தார். 'கனகாங்கி' இராகத்தை நாதஸ்வரத்தில் வாசித்துக் கொண்டிருந்தாராம். அந்த இராகத்துக்கான கீர்த்தனை தொடர்பான சகல நெளிவு சுளிவுகளையும் முன்னரே வீரமணி ஐயாவிடம் படித்திருந்தார் பாலமுருகன். அன்று அந்தக் கடினமான இராகத்தை வாசித்து கொண்டு இருக்க, திடீரென ஆலயத்துக்குள் குளித்து உடல் துவட்டாமல் ஈரம் சொட்டச் சொட்ட வீரமணி ஐயா நுழைந்து கையில் கொண்டு வந்த ஒரு பதக்கத்தை பாலமுருகனுக்கு அணிவித்து விநாயகரில் சாத்தி இருந்த அறுகம்புல் எடுத்து கையில் கொடுத்து.. ''நீ நீடுழி வாழணும் நல்லா இருக்கணும்டா கண்ணா, இன்னும் இன்னும் நிறைய வாசித்து புகழ் அடையணும்'' [அவர் சொன்னால் எப்படி இருக்கும் என்று அவரோடு பழகியவர்கள் கற்பனைசெய்துபாருங்கள்] என்று வாழ்த்தி விட்டு அந்த இடத்தை விட்டு நீங்கிவிட்டார்.

அந்த நாதஸ்வர இசை அவரை ஈர்த்து விட்டது. அடடா இப்படி வாசிக்கிறானே என்று தான் நின்ற கோலத்தையும் மறந்து ஈர வேட்டியுடன் வந்து வாழ்த்திய பண்பு எந்தக் கலைஞனுக்கும் வராது. கலைஞனை அவனது நிகழ்ச்சி முடியும் முன்னர் வாழ்த்துவது அல்லது விமர்சிப்பது என்பது அந்தக் கலைஞனை ஊக்கபடுத்து வதோடல்லமால் மேன்மேலும் வளர உதவும். அந்த வாழ்த்திய தருணத்தை கண்டு பால முருகன் திகைத்துப் போனாராம். இன்றும் அதை நினைக்கும் போது நெகிழ்ந்தும் உணர்ச்சி வசப்பட்டும் போய்விடுகிறார்.

வீரமணிஐயா பெற்ற பட்டங்கள் ஏராளம். இங்கே அவற்றைத் தருவதற்குப் போதிய இடம் இல்லை. ஆனால் அவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சிறுமைப்படுத்திவிட்டது என்று என்னுடைய சிற்றறிவு சொல்கிறது. அவரைச் சிறுமைப்படுத்தி தன்னையே தாழ்த்திக் கொண்டு விட்டது. காரணம் உலகம் போற்றுகின்ற ஒரு ஒப்பற்ற கலைஞனுக்கு இந்த யாழ்ப்பாண பல்கலைக்கழகம் 1999 ஆம் ஆண்டு வெறும் கௌரவ முதுகலைமாணி [M.A.] பட்டம் மட்டுமே வழங்கியிருந்தது. என்னைப் பொறுத்த வரை, 'கலாநிதி' பட்டம் பெறுவதற்கு அவர் எந்தவிதத்திலும் குறைந்தவர் எனக் கருதமுடியவில்லை. இதே அடிப்படையில் கௌரவிக்கப்படாத ஒரு கலைஞன் அளவெட்டி நாதஸ்வர வித்துவான் கலாசூரி என்.கே பத்மநாதன். அவர் இறந்த பின்னர் அவருக்கு அந்தக் கலாநிதிபட்டத்தை வழங்கி மேலும் ஒருமுறை தான் இன்னமும் குறுகிய வட்டத்துக்குள்ளேயே நிற்கிறேன் என்று நிரூபித்தது. நான் சிந்திப்பது தவறாக இருக்கலாம். ஆனால் அதற்கான காரணத்தை அறியத் தந்தால் நன்றாக இருக்கும்.

2002 ஆம் ஆண்டளவில் நித்யஸ்ரீ மகாதேவன் யாழ்ப்பாணம் சென்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் மாபெரும் இசைநிகழ்ச்சி ஒன்றை நடத்தினார். அந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்த வீரமணி ஐயா அவர்கள் மெய்மறந்து அந்த நிகழ்ச்சியை ரசித்தார். அந்த நிகழ்ச்சிக்கு அனுசரணை யாளர்களாக இருந்த இலங்கை வங்கியினர் தமது வங்கி பற்றி ஒரு பாடலை எழுதித் தருமாறு கேட்டனர். நீங்கள் எழுதித் தந்தால் நாங்கள் அதனை நித்யஸ்ரீ மூலம் பாடுவிப்போம் என்று அவர்கள் கூற, வீரமணி ஐயாவும் தமக்கே உரித்தான விதத்தில் உடனடியாகப் பாடலை எழுதிக்கொடுத்தார். நித்யஸ்ரீயும் சவாலாக அதனை எடுத்து மேடையிலே உடனேயே பாடி அனைவரது பாராட்டையும் பெற்றுக் கொண்டார். இதுதான் வீரமணி ஐயா. சீர்காழி கோவிந்தராஜனுடன் சுட்டிபுரம் அம்மன் கோவிலில் நிகழ்ச்சிக்காகச் சென்ற போது வீரமணிஐயா காருக்குள்ளேயே பாடல் எழுத அதனைச் சீர்காழி மேடையில் பாடினார்.

ஒரு கலைஞனைக் கௌரவிக்கும் பண்பு வளர்ந்து சென்றால் கலைகள் காக்கப்படும். அதனைப் பலரும் இன்னமும் செய்து கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் சேர்ந்து இப்படியான நிகழ்வுகளுக்கு ஆதரவு நல்க வேண்டும். 1971 காலப்பகுதிகளில் நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக உருவாக்கம் தொடர்பான ஒரு கூட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் நடனம், இசை, சித்திரம் என்பன சேர்க்கப்படவேண்டும் என வலியுறுத்தி அதற்கான முன்முயற்சிகளில் ஈடுபட்டவர்களில் ஒருவர் வீரமணி ஐயா என்று யாழ்ப்பாணப் பல்கலைகழக சமஸ்கிருதத் துறைத் தலைவர் கலாநிதி.வி.சிவசாமி ஒரு தடவை குறிப்பிட்டிருந்தார். இன்று அவர் கனவு நிறைவேறிவிட்டது. ஆனால் இவற்றிற்கெல்லாம் அலட்டிக் கொள்ளாமல் கடைசிவரை தான் சார்ந்த கலைகளைத் தன் தாய்மண்ணிலே பரப்புவதற்கு அவர் தன்னாலான முயற்சிகளை மேற்கொண்டுகொண்டே இருந்தார். இன்றும் அவற்றை அவருடைய துணைவியார் ஸ்ரீமதி சுசீலாதேவி தனித்து நின்று செய்து கொண்டு வருகிறார்.

அழகு தமிழில் புகுந்து விளையாடி, அற்புதமான படைப்புக்களைத் தந்ததோடு மட்டுமல்லாமல் நடனத்துறையிலும் தமக்கென ஒரு தனியிடத்தை அமைத்து அந்தப் பாதையில் நிறைய மாணாக்கர்களை பயணிக்க வைத்து தமிழ் பேசும் நல்லுலகிற்கு அரும்பெரும் சேவையாற்றியுள்ளார்.

அவர் வழி வந்த பலர் இன்று பேரும் புகழோடும் இசையுலகில் இருக்கின்றார்கள் என்பது ஐயாவுக்கு கிடைத்த ஒரு பெரிய புகழே. சாகித்திய சாகரம் இன்று எம்மோடு இல்லை. அவர்களை நினைவு கூர்ந்து அவரது படைப்புக்களை நாம் பேணிப் பாதுகாத்து அதனை இன்னும் பல தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். இப்படியான ஒரு நேரத்தில் அவர்களது பாடல்களை உள்ளூர் கலைஞர்கள் தவிர்ப்பது ஏன் என்று விளங்க வில்லை. அப்படி ஒரு பாடலைப் பாடி மேடையை அலங்கரிப்பதில் அவர்களுக்கு என்ன இடைஞ்சல் என்றும் தெரியவில்லை. நாமே அவற்றை வளர்ப்பதற்கு முன்னிற்கவில்லையென்றால் மற்றவர்களிடம் எப்படி எதிர்பார்க்க முடியும். இந்த விடயத்தை வட-இலங்கை சங்கீத சபையினருக்கு சமர்ப்பணம் செய்கிறேன்.

வீரமணி ஐயா பற்றி குறிப்பிடுவதற்கு நிறைய உள்ளது. மீண்டும் ஒருதடவை அந்தப் பெரும் கலைஞனை மனதிலே போற்றி, மண்ணிலே கலை வளர்க்க எம்மாலான காரியங்களை செய்வோம் என இந்நாளில் உறுதி எடுத்து இயங்குவோமாக.

வாழ்க ஐயா நாமம்..!! வளர்க அவர் புகழ் !!!

[நன்றி - 'கிடுகுவேலி' இணையத்தளம்]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நுணுக்கம் மிகுந்த உலோகக் கலைப்பணி மூலம் அந்தத் துறைக்கு துலங்கும் பெருமை சேர்க்கும் கெங்காதரன் ஆச்சாரி

**கேள்வி:-** உலோகக் கலையுடனான உங்களது ஊடாட்டம் எவ்விதம் நிகழ்ந்தது?

**பதில்:-** ஏறக்குறைய ஏழு தசாப்தங்களாக இக்கலையில் எமது குடும்பத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். சிறு வயதில் எனது தந்தையார் உலோக வேலையில் ஈடுபடும் போது அவரின்



அருகிலே இருந்து இக்கலையினை உன்னிப்பாக அவதானிப்பேன். இதனால் இயல்பாகவே உலோகக் கலை தொடர்பான நுணுக்கங்கள் எனக்குள் ஊறத் தொடங்கின. 16வயது முதல் உலோக வேலையில் முழுமையாக இறங்கி விட்டேன்.

**கே:-** நீங்கள் அதிகமாக எவ்விதமான உலோகப் படைப்புக்களை ஆக்கியுள்ளீர்கள்?

ப:- யாழ்ப்பாணத்திலுள்ள பெரும்பாலான ஆலயங்களில் என்கைபட்ட படைப்புகளே இருக்கின்றன.

கோபுரக்கலசங்கள், கொடித்தம்பங்கள், விக்கிரகங்களுக்கான கவசங்கள், நினைவுப் பொருள்கள், திருவாசி, பீடம், வாகனக்கவசங்கள், வெற்றிக் கேடயங்கள் எனப் பல விதமான உலோகவேலைகளை நான் செய்துள்ளேன். என்னுடைய உலோக வேலையின் தனித்துவத்தை அறிந்த பலரும் நான்தான் தங்களுடைய வேலைகளைச் செய்ய வேண்டுமென்று விரும்பி வருவதாலேயே இவ்வாறு எண்ணற்ற படைப்புகளை உற்பத்தி செய்ய என்னால் முடிகிறது.

**கே:-** உலோக வேலையில் உங்களுடைய தனித்துவமாக எதனை நீங்கள் இனம் காண்கிறீர்கள்?

ப:- நான் செய்யும் வேலைகள் எப்போதுமே மிக மிக நுணுக்கமானதாக அமையும். சிறிய- கண்ணுக்குத் தெரியாத - பிசிறு ஏற்பட்டால் கூட அதனை நிராகரித்து விட்டு மீண்டும் புதிதாகக் கலைப்படைப்புக்களைச் செய்வேன். செய் நேர்த்திதான் என்னுடைய தனித்துவம் என எண்ணுகின்றேன். ஒரு கலைஞனுக்குத்தான் அவனுடைய படைப்பின் பலமும் பலவீனமும் தெரியும். எனவே கலைஞனுக்குத் திருப்தி ஏற்படுத்தும் கலைப்படைப்புக்களே உன்னத நிலையை அடைகின்றன. எனக்குத் திருப்தியைத் தராத உலோக வேலை எதையும் நான் செய்து கொடுப்பதில்லை.

**கே:-** உலோகத் தொழிலில் இத்தனை நுணுக்கமாக படைப்புக்களை உற்பத்திசெய்யும் உங்களை நாடி வந்த விருதுகள் பற்றிக் குறிப்பிட முடியுமா?

ப:- நிச்சயமாக.

உலோகக் கலை மாமணி, உலோகத் தொழில் விற்பன்னர், உலோகத்தொழில் நிபுணர், மரபுக்கலைச்சுடர், கலா பூஷணம், யாழ்.ரத்னா, மகரயாழ் விருது என்பவற்றோடு இப்போது ஆளுநர் விருதும் கிடைத்திருக்கின்றது. இது தவிர என்னுடைய உலோகக் கலைப் பணியை பாராட்டி யு.என்.ஏ என்ற அமைப்பு 'உலோகத் தொழிலதிபர்' என்ற விருதை வழங்கியிருக்கின்றது. மேலும் யாழ்ப்பாணத் திலுள்ள தேவாலயங்களுக்காக நான் செய்து கொடுத்த 'கதிர் பாத்திரத்திற்காக' புனித பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் கையெழுத்துடன் கூடிய ஆசீர்வாதச் சான்றிதழும் கிடைத்துள்ளது. இவையெல்லாம் என்னுடைய கலைச்சேவைக்குக் கிடைத்த அங்கீகாரங்கள் என்று எண்ணுகின்றேன்.



*பூலோக பிரம்மாக்கள் என்று சிறப்பிக்கப்படுபவர்கள் கலைஞர்கள். அதிலும் பிரம்மாவின் வம்சத்தில் வந்தவர் கள் என நம்பப்படும் 'பஞ்ச கம்மாளர்கள்' கலைகளுக்கு மட்டுமல்லாது உலகியல் இயங்குதலுக்கும் ஆதார மாக விளங்குகின்றார்கள். அவ்வகையில் தன்னுடைய நுணுக் கமான கைவண்ணத்தால் உலோகக் கலைப்படைப்புகளை பிசிறின்றி ஆக்கும் கெங்காதரன் ஆச்சாரியாருக்கு அவருடைய ஐம்பது வருடக் கலைப்பணியைப் பாராட்டி 2008ஆம் ஆண்டுக்கான ஆளுநர் விருது கிடைத்துள்ளது. இவ் வேளையில் தன்னுடைய கலை ஈடுபாடு பற்றிய அனுபவங்களை அவர் உதயன் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்.*

**கே:-** உங்களுடைய வாழ்க்கையில் நடந்த மறக்க முடியாத ஏதாவது சுவாரசியமான சம்பவம் பற்றி...?

ப:- யாழ்ப்பாணத்தில் நடைபெறும் விருது வழங்கல் நிகழ்வுகளுக்கு அநேகமாக நான்தான் கேடயங்கள் செய்வது வழக்கம். ஒரு முறை அவ்வாறு விருதுக் கேடயம் ஒன்றைச் செய்யும் பொறுப்பு என்னிடம் வந்தது. அதில் ஒரு விருதுக் கேடயம் எனக்கு வழங்கப்பட இருந்தது. எனக்குரிய விருதுக்கேடயத்தை நானே செய்யவேண்டிய நிலை. இது எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது. ஆயினும் இது உங்களுக்குக் கிடைக்கும் அங்கீகாரம். கேடயம் செய்வது உங்கள் வேலை. விருது தருவது அவர்களது கடமை என்று என்னுடைய மனைவி சொன்ன பின்னரே நான் அதனைச் செய்தேன்.

**கே:-** உங்களுக்குக் கிடைத்த விருதுகளின் வரிசையில் இப்போது இணைந்து கொண்டுள்ள ஆளுநர் விருது பற்றிய மனப்பதிவு என்ன?

ப:- ஒவ்வொரு முறையும் விருதுகள் கிடைக்கும் போது முதல் வேலையாக எனது மனைவியிடம் கொண்டு வந்து காட்டி மகிழ்வேன். ஏனெனில் அவர் தான் என்னுடைய கலைப்படைப்புக்களின் முதல் ரசிகை. அத்துடன் எனக்கு துணையாக இருந்து ஓர் ஆலோசகர் போலச் செயற்பட்டவர். ஆனால் இம்முறை- விருது கிடைப்பதற்கு சில நாள்களுக்கு முன்னர்- அவர் காலமாகிவிட்டார். வழமையாக விருதினை என்னுடைய மனைவியிடம் கொடுக்கும் நான், இம்முறை ஆளுநர் விருதை அவருடைய நினைவாக ஒளிர்ந்து கொண்டிருந்த குத்து விளக்கின் முன்னால் மட்டுமே வைக்க முடிந்தது. ***

- இளையன் -

# முதியோர், மாற்று வலுவுள்ளோரின் அபாரமான திறமையைப் பயன்படுத்தி சமூகம் பெரும்பலன் ஈட்டிட முடியும்

மனித சமூகத்திற்கு விழிப்புணர்வுச் செய்திகளை வழங்கும் நிகழ்வுகள், விழாக்கள் முக்கியமானவை. சமூகத்தின் ஒவ்வொரு மனிதர்களும் மதிப்பிற்குரியவர்கள். மதிப்பளிக்கப்பட வேண்டியவர்கள். இதனை உணர்த்தும் நிகழ்வுகள் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டு வருகின்றன.

அத்தகையதொரு நிகழ்வு இம்மாதம்



11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்றது.

வடமாகாண சமூகநலத்துறைத் திணைக்களத்தின் அனுசரணையில் யாழ்.மாவட்ட முதியோர், மாற்று வலுவுள்ளோர் தின விழா ஒரு முழுநாள் நிகழ்வாக அங்கு நடந்தது.

காலையில் விளையாட்டுப் போட்டிகளும், பிற்பகல் ஒரு மணி முதல் மாலை 5 மணி வரையில் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு, கலைநிகழ்வுகள், மற்றும் கௌரவிப்பு என முழுநாள் விழாவாக இது நடைபெற்றது.

நிகழ்வுகள் அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டவாறு ஆரம்பமாகியமை, நிகழ்வில் பங்கு கொண்டோருக்கு உரிய போக்குவரத்து வசதிகள், உணவு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டமை பாராட்டப்படவேண்டியவைகளாகும்.

நிகழ்ச்சி நிரலுக்கேற்ப காலையில் விளையாட்டுப் போட்டிகள் முதியோர், மாற்றுவலுவுள்ளோர் எனக் தனித்தனிப் பிரிவுகளாக யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

தடியில் கட்டியநூலில் தொங்கவிடப்பட்டிருந்த அப்பிள் பழத்தை முதியவர்கள் கைகளின் உதவியின்றி வாயால் கடித்து உண்டமை வேடிக்கையாக அமைந்ததுடன், பார்வையாளரை மகிழ்ச்சியிலும் ஆழ்த்தியது.

ஊசிநூல் கோர்த்தல் போட்டி பெண்களுக்கு மட்டும் என மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. முதுமையிலும் மூக்குக் கண்ணாடி அணியாமலேயே வயதான மூதாட்டிகள் சிரமப்பட்டு ஊசியில் நூல் கோர்த்தமை பார்வையாளர்களுக்கு புதுமையானதொரு அனுபவமாக அமைந்தது.

மூத்த பிரஜைகள் ஆண், பெண் இருபாலாருக்கும் தனித்தனியாக நடத்தப்பட்ட சங்கீதக் கதிரைப் போட்டி பார்வையாளர்கள் அத்தனை பேரதும் ரசனைக்குப் பெருவிருந்தானதொரு நிகழ்வாக அமைந்தது.

தொடர்ந்து இடம்பெற்ற மாற்று ஆற்றலுள்ளோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் பார் வையாளர் அனைவரையும் மலைப்பில் ஆழ்த்திய நிகழ்வாக அமைந்தது.

''பொற்காலம்'' என்னும் திரைப்படத்தில் வரும் ஒரு பாடலில் ஊனம் என்பது மனதில் தான் உள்ளது என்ற வரிகளை மெய்ப்பிக்கும் வகையில் நிகழ்வுகளில் பங்கேற்ற மாற்று ஆற்றலுள்ளோர் தம்மிடையே உள்ள விசேட ஆற்றல்களை வெளிப்படுத்தியமை பார்வையாளர்களை மெய் சிலிர்க்க வைத்தது.

அங்கவீனம் என்பது திறமைக்கு ஒரு தடையல்ல என்ற செய்தியை அவ் விளையாட்டு நிகழ்வுகள் எமக்கு நிரூபிக்கும் வகையில் அமைந்தன.

விழிப்புலனற்றோர்களுக்கான கிரிக்கெட் போட்டி ஒலிச்சமிக்ஞை காட்டும் பந்தைப் பயன்படுத்தி நடைபெற்றது. வழமைக்கு மாறான விதத்திலான இப்போட்டி பார்வையாளர்களது உ[illegible] ஆளானது. இ[illegible] யோகத்தரான துரைராசா யசிந்தன் சிறப்பு ஆட்டக்காரருக்கான பரிசை ஈட்டிக்கொண்டார்.



பிற்பகல் ஒரு மணிக்கு விழாவின் இரண்டாம் கட்ட நிகழ்வுகள் ஆரம்பமாகின. சமூகநலத்துறை திணைக்களத்தின் மாவட்ட திட்ட இணைப்பாளர் த.கிருபாகரன் நிகழ்ச்சிகளைத் தொகுத்தளித்தார். விருந்தினர்களின் உரையைத்தொடர்ந்துசாதனை புரிந்த மூத்த பிரஜைகள், மாவட்டத்தின் ஒவ்வாரு பிரதேச செயலக பிரிவுக்கு ஒருவர் என்ற ரீதியில் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். தமது பிரதேச மேம்பாட்டுக்காக உழைத்த மூத்த பிரஜைகள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமை பாராட்டப்பட வேண்டியது. தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டியதொன்று.

இந்நிகழ்வில் உடுவில் ஆர்க் நிறுவன மாணவர்களின் 'சாறி' நடனம், மாற்று ஆற்றலுள்ள மாணவர்களின் 'பிறேக்' நடனம், குழு நடனங்கள் என்பன பார்வையாளரைப் பரவசத்தில் ஆழ்த்தின.

நிகழ்வில் இடம்பெற்ற ''முதியோர் இல்லம்'' என்ற நாடகம் ஆதரவற்றுப் போனவர்களின் சோக உணர்வுகளை நகைச்சுவையுடன் வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்திருந்தது.

கிராமிய மணம் கமழும் கோலாட்டம், காத்தவராயன் சிந்து நடைக்கூத்து, குழு நடனம் என்பவற்றுடன் உடுவில் வாழ்வக இல்லமாணவர்கள் நடத்திய பாட்டு நிகழ்வுகளும் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தன.

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம், கைதடி நவீல்ட் பாடசாலை, உடுவில் வாழ்வகம், ஆர்க் நிறுவனங்கள், கோண்டாவில் [illegible] இல்லம், விழிப் புலனற்றோர் சங்கம், [illegible] மூத்த பிரஜைகள் பேரவை, பிரதேச செயலக பிரிவுகளில் இயங்கும் மூத்தோர் பேரவைகள், மூத்தோர் சங்கங்கள் என்பவையும் பாடசாலைகளில் மாற்றுவலுவுள்ள மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பலரும் யாழ்.மாவட்ட சமூக நலத்துறைத்திணைக்கள உத்தியோகத்தர்களுடன் இணைந்துசெயற்பட்டு இவ்விழா சிறப்புற நடந்தேற உதவினர்.

## ''ஊனம் ஒரு குறையல்ல'' என்ற மனத்திடத்தை அவர்கள் மத்தியில் உருவாக்குவோம்

சமூகத்தில் உடல் ரீதியில் வலுக்குன்றிய, அதேசமயம் மாற்று ஆற்றல்கள் கொண்ட பிரிவினருக்குக் கைகொடுத்து உதவும் விதத்தில் சமூகநலத்துறைத் திணைக்களம் முதலாவதாகக் கொண்டாடிய இந்த விழா போன்று இனிவரும் காலங்களிலும் தொடர்ந்து கொண்டாடப்படுதல் அவசியமாகும்.

தாம் சமூகத்தின் மதிப்புள்ள பிரஜைகள் என்ற உணர்வைஇவர்கள் மத்தியில் உருவாக்க உதவும் இத்தகைய நிகழ்வுகள் பிரதேச, கிராம மட்டங்கள் தோறும் பரவி விரவ வேண்டும். இவர்களிடையே உள்ள அபாரமான ஆற்றலை சமூகத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இவர்களை ஊக்குவித்து உதவுவதன் மூலம் தாம் சமூகத்துக்குச் சுமையாக இருக்கிறோம் என்ற தாழ்வு மனப்பான்மையைத்துடைத்தெறிந்து பொருளாதார வளத்தின் முதுகெலும்பாக எம்முடன் இவர்கள் கைகோர்த்துச் செயற்படுவர் என்பது நிச்சயம். ★★★★

மருதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டும் வாழ்த்தும்



யா/ நெல்லியடி மெ.மி.த.க.
பாடசாலையைச் சேர்ந்த தரம் 5
மாணவன்
**தேவகுமாரன் செந்தில்குமரன்**
2009ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
பரீட்சையில் 159 புள்ளிகளைப் பெற்று
பாடசாலை மட்டத்தில்
3ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்.
இவரை வாழ்த்துவதுடன், இவரை
ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களான
பாமினி, சுமதி, கௌரீஸ்வரி
ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அக்கா, தம்பி,
அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா.

எழுபாவத்தை,
அல்வாய் தெற்கு.
(89983)

## வசீகரத் தோற்றத்திற்கு! சந்தனாலேப



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)
வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகை தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.

சந்தனாலேப

**'சிவா நறுமணப் பூங்கா'**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்).
யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.
(வி/555203)

## விற்பனைப் பிரதிநிதிகள்

TRADESMANN - தரேட்ஸ்மன் மின்சார / ஹாட்வயர் / டயர் விற்பனை செய்வதற்கு உற்சாகமான, இளைஞர்களிடமிருந்து விண்ணப்பம் கோருகிறது.

- வயதெல்லை 20 - 30 வயது
- கல்வித்தன்மை க/பொ/ச/பரீட்சை
- நாட்டின் எந்தப் பாகத்திலும் கடமையாற்றக் கூடியவராகவும்
- மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம்
- மூன்று மொழிகளிலும் தேர்ச்சியுள்ளவர்
- அனுபவமற்றவர்கள் பயிலுனர்களாக கருதப்படுவார்கள்

அனுகூலம்

- தொழிற்சபை சம்பளத்திட்டத்திற்கும் மேல்
- கவர்ச்சிகரமான விற்பனை கமிஷன்
- கம்பனி பராமரிப்பு மோட்டார் சைக்கிள்
- முன்னேற்றத்தைப் பொறுத்து தொழிலில் முன்னேற்றம

உங்கள் சுயவிபரக்கோவையை 10 நாட்களுக்குள் இரண்டு உறவினரல்லாதவர்களின் பெயர், தொலைபேசி இலக்கங்களுடன் அனுப்பவும்.

வரையறுக்கப்பட்ட த டிரேட்ஸ்மேன் ஸ்ரீலங்கா (தனியார்) நிறுவனம்
இல.40, பொறுப்பன பெரி வீதி,
இரத்மலானை

TRADESMANN

தரேட்ஸ்மன் நிறுவனமானது 50 வருட அனுபவம் வாய்ந்த பலதரப்பட்ட வியாபாரத்தோற்றமாகும் மேலும் உற்பத்தி மற்றும் வியாபாரத்தில் முன்னணி வியாபார பெயர்களுடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.



ATRIX · JACK · Derric · IRONORI · MAHARAJ · OWL · SEVILI · SWITCHEL · BANDO · ARMOUR · RALCO · MEGASTAR · TRIANGLE · BILDTON · XD · DURUN · LiNDa · VICEROY BRASS · COLORWELL · RHINO KING · MOURI

www.tradesmann.com

## ஐந்து சந்தி மினிமுகாம் அகற்றப்பட்டது

மானிப்பாய் -காரைநகர் வீதியில் ஐந்து சந்தியில் பல வருடங்களாக இயங்கி வந்த மினி முகாம் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளது. முகாம் இயங்கி வந்த கட்டடங்களில் தற்பொழுது வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. (203-115)

### காணி விற்பனைக்கு

ஊரெழு கிழக்கில் 1ஆம் குறுக்கு வீதியில் வீடு கட்டக்கூடிய 5 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். 12 அடி பாதையுண்டு. T.P 0775973240 (89961)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஈச்சமோட்டை வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: 021 321 6790 (89583)

### விற்பனைக்குண்டு

Brand new Yamaha PSR -S 900 Keyboard (Arranger Work station) விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 222515, 0718474312 (89867)

### மணமகள் தேவை

யாழ். R.C கௌரவ குடும்பம், வயது 30, U.K நிரந்தர வதிவிடம் கொண்ட மணமகனுக்கு பெற்றோர் மணமகளை எதிர்பார்க்கிறார்கள். புகைப்படத்துடனும், சாதகம் இருப்பின் சாதகத்துடனும் தொடர்பு கொள்க. C/O உதயன், 3949 (89881)

### BRAN BREAD

(குரக்கன் பாண்)
நூதி பாண்,
மானிப்பாய் வீதி.ஆனைக்கோட்டை.
021 3001000, 0773545203
(சி/561664)

### வேலையாள்கள் தேவை

சகலவிதமான தச்சுவேலை தெரிந்தவர்கள் உடன்தேவை. கூடிய சம்பளமும், வசதிகளும் தரப்படும். பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம். தொடர்பு:
லிப்ரா மரத்தளபாட நிலையம். 61, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி, (மல்ரி பாம் சென்ரர்.) (89879)

### குத்தகைக்கு / வாடகைக்கு

கொழும்பு- 12, டாம் வீதி இல. 361 இல் மூன்று மாடிக் கட்டடத்தில் 2ஆம் மாடி 2500 சதுர அடி பரப்பளவுள்ளதான கட்டடம் வாடகைக்குக் கொடுக்கப்படும். இது அலுவலகம், ஸ்ரோர், காட்சியறை, ஆடைத்தொழிற்சாலை ஆகியவற்றுக்கு உகந்தது. ஐந்துவருட குத்தகைக்கு மாத அடிப்படையில் கொடுக்கப்படும். 2 பாத்றூம், மூன்று பேஸ் (3 Phase) மின்சாரத்துடன் அமைக்கப்பட்ட புதிய கட்டடம். தொடர்பு: 2431935, 2473051, 2433900

### மணமகள் தேவை

யாழ். R.C கௌரவ குடும்ப பெற்றோர், தமது 1972ல் பிறந்து கொழும்பில் பிரபல கல்லூரியில் கல்வி கற்று தற்பொழுது கௌரவமான, நல்ல வருமானமுடைய சுயதொழில் புரியும் மண மகனிற்கு தகுந்த 32 வயதுக்கு குறைவான மணமகளை தேடுகின்றனர். தொடர்பு: 0777 578445 (#561404)

### இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட்ஸ், ஊர்ச்சேவல்கள், முட்டை என்பன வேண்டிய அளவுகளில் எந்த நேரமும் சுத்தம் செய்து மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகவும் விற்பனை செய்யப்படும். விலைக்கழிவுகள் வழங்கப்படும்.
தொடர்பு: மல்ரி பாம் சென்ரர், 61, இராமநாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி. (89878)

### தொடர்மாடி வீடு விற்பனைக்கு

BORALES GAMUWA, KOHUWALA பிரதான வீதியில் PAPILIYANA, ROS TON PARK இல் அரைச்சொகுசு தொடர் மாடி (725சதுரஅடி) வீடொன்று விற்பனைக்குண்டு. வாகனத் தரிப்பிடம் மற்றும் 24 மணி நேர பாதுகாப்பு ஊழியர்கள் சேவையுமுண்டு.
தொடர்பு: 077 6520929, 0715361576 (#561271)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் 2009ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த உடுப்பிட்டி யூனியனடியைச் சேர்ந்த புவனேந்திரராஜா- இராஜபுஸ்பம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வி
செல்வி **சேதுப்பிரியா**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் சகல துறைகளிலும் மிளிரவேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.

15/5, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.
(89852)

அன்புடன் வாழ்த்தும்
திரு. திருமதி ரகுநாதன்,
மகள் அஸ்விதா

## சேவை நயக்கவும் ஓய்வுகாலம் சிறக்கவும் வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணக் கல்லூரி
விவசாய நிறுவனத்தில்
21 ஆண்டுகள்
அர்ப்பணிப்பான
சேவையை ஆற்றி
31.10.2009 இல்
ஓய்வுபெற்றுச் செல்லும்

திருவாளர் **தளையசிங்கம் குகதாசன்**
அவர்களது ஓய்வுகாலம் இறைவனருளால் நிறைவாயும் பல்லாண்டு நீடூழியும் அமைய வாழ்த்துகின்றோம்.

பணியாளர்கள்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம்.
(89965)

## JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE
## யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

### விவசாய சான்றிதழ் பயிற்சி நெறி

விவசாய மூலதத்துவம், பயிர் வேளாண்மை, விலங்கு வேளாண்மை, பூங்கனியியல் ஆகிய துறைகளை உள்ளடக்கிய நான்கு மாதகால இலவச பயிற்சி நெறிக்கு க.பொ.த. சாதாரணதரம் கல்விகற்ற 16-26 வயதுக்கிடைப்பட்ட இருபாலாரிடமும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பயிற்சி நெறிக்காலத்தில் உதவுதொகை வழங்குவதுடன் பயிற்சிமுடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.


இப் பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 28.10.2009 காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடை பெறும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கல்வித்தகைமை பத்திரங்கள், கிராமசேவையாளரின் நற்சான்றிதழுடன் வேறு இரு நற்சான்றிதழ்கள் என்பவற்றுடன் நேரில் சமுகமளிக்கவும். மேலதிக விவரங்களுக்கு:

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம். (89964)

## HERO CYCLES

- உலகில் அதிகூடிய விற்பனையாகும் துவிச்சக்கரவண்டிகள்
- பல தசாப்தகாலம் யாழ் மக்களின் நம்பிக்கையை கொண்டது
- 8 வருட உத்தரவாதம்

யாழில் எமது முகவர்களிடம் துவிச்சக்கர வண்டிகள் உள்ளன



Dealers Available in Jaffna
**FAIZAL HARDWARE STORES**
No. 74, Dam Street, Colombo 12.
Tel: 011-2433727, 2325571 Fax: 011-2446088 E-mail: faisto@sltnet.lk

## ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்.

தபால் மூல ஆங்கிலப் பாடநெறிகள் SPOKEN ENGLISH

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.

கிளாஸ் போகும் காலம். நேரம் மிகுதி
குருகிய காலம் / வயது எல்லை இல்லை
வீண் கட்டணங்கள் செலுத்த வேண்டாம்

பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.

பாடநெறியில் இணையும் உங்களுக்கு
அழகிய பேக் ஒன்றும் **Tigo Sim** (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் இலவசமாக வழங்கப்படும்.

எமது Diploma சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்.

மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.

**UNION EDUCATIONAL INSTITUTE**
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண உள்ளூராட்சி சபைகளின் வினைத்திறனையும் பிராந்திய வளர்ச்சியையும் எடுத்தியம்பும் மாநாடு

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் யாழ்.நகரில் மாபெரும் உள்ளூராட்சி மாநாடும் -கண்காட்சியும் இன்றும்-நாளையும் வெகுகோலாகலமாக நடைபெறவுள்ளன.

'உள்ளூராட்சி மாநாடு - 2009' என்ற தலைப்பில் இம்மாநாடு இடம் பெறவுள்ளது.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி சபைகளான பிரதேச சபைகள், நகரசபைகள், மாநகரசபைகள் என அனைத்து சபைகளும் மிக ஆர்வத்துடன் வடமாகாணத்தின் ஏனைய திணைக்களங்களுடன் இந்த மாநாட்டில் கலந்துகொள்கின்றன.

அபிவிருத்தி, கலாசாரம், கல்வி மற்றும் சிறந்த உள்ளூர் வெளிப்பாடுகளுக்கான களத்தினை அமைக்கும் மாநாடாக இது அமையும். இதற்கான சகல ஏற்பாடுகளும் முழுமை பெற்றுள்ளதாக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ் உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த 35 ஆண்டுகளுக்குப் பின்னர் வடக்கு மாகாணத்தில் அதுவும் 30 வருடகால போர் ஓய்வுக்குப் பின்னர் பிரமாண்டமான இந்நிகழ்வு இடம் பெறுவதையிட்டு அனைத்து சமூகவியலாளர்களும் கல்விசார் வட்டாரத்தினரும் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் உள்ளூராட்சிக்கான சிறந்த ஆளுகையை விருத்தி செய்து எதிர்காலத்தில் மக்களுக்கான முழுச்சேவையை முழுமனதுடன் வெளிக்கொணரும் நோக்குடன் அடித்தளம் ஒன்றினை இடுவதற்காக இந்நிகழ்வுகளை வடக்குமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் வகுத்துள்ளார்.

இந்நிகழ்வுக்கு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள்



அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண செயலணிக்குழுத் தலைவர் பஸில் ராஜபக்ஷ, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் றிஷாத் பதியுதீன், வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, பிரதிப்பிரதம செயலாளர் தி.இராசநாயகம், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ், உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன், அரச அதிபர் க.கணேஷ் உட்படப் பல உயர் அதிகாரிகள், அமைச்சின் செயலாளர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆளுகையை வெளிக்கொணருவதற்கான கண்காட்சி -கண்கொள்ளாக்காட்சியாக அமைகிறது.

அனைத்து உள்ளூராட்சி மக்களுக்கு வழங்க வேண்டியவை எனக் கருத்தப்பட வேண்டிய அனைத்து நிகழ்வுகளையும் காட்சிப்படுத்த வேண்டும் எனும் நோக்கில் இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ் தெரிவித்தார்.

இம்மாநாட்டின் கருத்தரங்கில் மிகச்சிறந்த கல்வியியலாளர்கள், கல்விமான்கள் பங்குபற்றவுள்ளனர்.

இம்மாநாடு மற்றும் கண்காட்சியில் அனைத்து மக்களும் முழுமையாகப் பங்குபற்றி அதன்மூலம் கிடைக்கும் அறிவைப் பயன்படுத்தி ''சுய அபிவிருத்தியை'' (Self Development) மேற்கொள்ள வேண்டும் என கேட்டுள்ளார் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ்.

இம்மாநாடு மற்றும் கண்காட்சியில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வ்வுனியா மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வுகளில் விசேடமாக வடக்கு மாகாண உள்ளூராட்சிச் சபைகளுடன் கூட்டுறவுத் திணைக்களம், கிராம அபிவிருத்தி, கைத்தொழில், சமூகநலத்துறை, விவசாயம், சுதேசவைத்தியம், சித்தமருத்துவம், முதலீட்டுச் சபை, நகரஅபிவிருத்தி அதிகாரசபை, நீர்வளச்சபை என்பவற்றுடன் வடக்கு மாகாணத்தில் சிறந்த வெளிப்பாட்டுடன் இயங்கும் தனியார் நிறுவனங்களும் தமது காட்சிப்படுத்தல்களையும் விற்பனைக் கூடங்களையும் அமைக்க உடன்பட்டுள்ளன.

அத்துடன் இறுதிநாளான 19.10.2009 திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

இதில் 2007-2008 காலப்பகுதியில் முகாமைத்துவப் போட்டிகளில் சிறந்த வினைத்திறனைக் காட்டிய உள்ளூராட்சிச்சபைகளுக்கான விருதுகள், சான்றிதழ்கள் வழங்கப்படும்.

## யாழ்.நகரில் இன்றும் நாளையும்

மன்றங்களும் தங்களால் வெளிக்கொணரக்கூடிய அனைத்துக் கலை, கலாசார, பொருளாதார உற்பத்தி, கண்டுபிடிப்பு, திண்மக்கழிவு முகாமைத்துவம், நோய் பரவும் அபாயம், புதிய முன்னேற்றங்கள், மக்கள் சேவை, பயன்பாடு மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான கைத்தொழில் துறை என்று பல்வேறு துறைகள், விடயங்களை உள்ளடக்கிய காட்சியாக அமையவுள்ளது.

ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபைகளும் தமது உச்ச அளவிலான முழுவளங்களையும் வினைத்திறனையும் பயன்படுத்தி ஆகக்கூடியளவில்

சிறந்த உள்ளூராட்சி மன்ற அபிவிருத்திக்கான செயலாளர் விருதுகள், சான்றிதழ்கள் சிறந்த கண்காட்சிக்கான 3 விருதுகள்-சான்றிதழ்கள், கடந்தகாலங்களில் உள்ளூராட்சி அபிவிருத்திக்கு முன்நின்று உழைத்தவர்கள் கௌரவிக்கப்படுவர்.

பாடசாலை மட்டத்திலும் உள்ளூராட்சி மன்ற முகாமைத்துவப் போட்டியிலும் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் - பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. *

- இரா சுதா -

## கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயில்
பிரதம குரு சிவஸ்ரீ ப.சண்முகராஜக்குருக்கள்
அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் சிவஸ்ரீ**
**வை.மு.பரமசாமிக் குருக்கள்**

(முன்னாள் பிரதம குரு கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் தேவஸ்தானம்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கண்ணகைத் தாயை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கோப்பாய் கண்ணகை அம்மன் சனசமூக நிலையமும் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும்.**

(C/561474)

## மரண அறிவித்தல்

### திருமதி அப்பாக்குட்டி இராசம்மா (இராசமணி)



குப்பிளானைப் பிறப்பிடமாகவும், கல்வியங்காடு, விளையாட்டரங்கு வீதியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய திரும்தி அப்பாக்குட்டி இராசம்மா (இரா சமணி) கடந்த 14.10.2009 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாக்குட்டியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - இலட்சுமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இனையப்பு - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், நடராசா (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற நேசம்மா (மலேசியா), நாகம்மா (கனடா), விக்கினேஸ்வரராஜா (கனடா), சண்முகலிங்கம் (அவுஸ்திரேலியா), குலசிங்கம் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கமலன், விமலன், யோகன், கோகிலா, ஜெயராணி (ஓமான்), பபி, உஷா ஆகியோரின் அன்புத் தாயும், சற்குணநாதன், சிவசங்கரன் (ஓமான்), ரங்கநாதன், பகீரதன், வசந்தகுமாரி (நோனா), அம்பிகாதேவி, றுக்ஷி ஆகியோரின் பாசமிகு மாமியும், கபிலன், அனீஜன், கௌரி, கிஷானி, பிரீத்தி, ரிஷி, நவீன், சரண்யா, பிரவீனன், பவாசிகா, ராகுலன் (ஓமான்), ராகவி (ஓமான்), நேகா, அக்ஷியா, யுகேன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2009) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

அப்பாக்குட்டியார் வளவு,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
கமலன்-416 816 3860, விமலன்-905 294 4510,
யோகன்-416 707 8880.

தகவல்:
சி.இராஜகுலேந்திரன்
(குலம்-சகோதரன்)

(90014)


**உதயன் ஊடக அனுசரணையோடு**

2009 - தரம்5 புலமைப்பரிசில் பரீட்சை வெற்றித்தேர்வு வெற்றியாளர்களுக்கான

**மாபெரும் கௌரவிப்பு விழா NSB**



மக்கள் வங்கியின் மகத்தான பதக்கம்
தேசிய சேமிப்பு வங்கியின் ஞாபகார்த்த பரிசுடன் கூடிய வைப்புப் புத்தகம்
உதயனின் உண்மைச் சான்றிதழ்.

இன்னும் பல பரிசுகளோடு

மக்கள் வங்கியின் மகத்தான பதக்கம்.
தேசியசேமிப்பு வங்கியின் பரிசுடன்கூடிய சேமிப்பு வைப்பு.
உதயன் பத்திரிகையின் உண்மைச் சான்றிதழ்.
ஈ.எஸ்.பேரம்பலம் அன் சன்ஸ் வழங்கும் சாதனைப் பரிசு.
சயன்ஸ் கோல் கல்வி நிறுவனம் வழங்கும் சான்றுப் பரிசு.
காவேரி சில்க்ஸ் நிறுவனத்தாரின் கனிவுப் பரிசு.
மலர் ரெக்ஸ்ரைல்ஸ் நிறுவனம் வழங்கும் உன்னத பரிசு.
ராஜா கிறீம் ஹவுஸ் வழங்கும் குளிர் உணவுப் பரிசு.
சயன்ஸ் அக்கடமி வழங்கும் 1000 மாலைகள்.

காலம்: 25.10.2009(ஞாயிறு) காலை: 09.00மணி
இடம்: யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ தம்பசெட்டி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி கற்று தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் ஏற்கனவே சிறப்புச் சித்திபெற்ற செல்வன் சபாபதிப்பிள்ளை துவாரகன் வழியில் அவர்தம் அன்புத் தம்பியாம் செல்வன் சபாபதிப்பிள்ளை கோபிதன் 2009 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 170 புள்ளிகளைப் பெற்றுப் பாடசாலையின் முதன்மை மாணவனாய் வெற்றியீட்டினார்.

சகோதரர்கள் இருவரும் தொடர்ந்து செவ்வனே கற்றுச் சிறப்புச் சித்திகள் பெற்று நலமாகவும் வளமாகவும் வாழவேண்டி இறைவனை இறைஞ்சுகின்றோம். இவர்களை ஆற்றலுடன் ஆற்றுப் படுத்திய அதிபர் திரு.K.இராமஜெயம், அர்ப்பணிப்புடன் கல்வி புகட்டிய வகுப்பாசிரியர் திரு P.பொன்னம்பலம் ஏனைய ஆசிரியர்கள், ஆசிரியைகள் அனைவரையும் நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

அருணோதயம், நாவலடி,
புலோலி மத்தி, பருத்தித்துறை.

பெரியப்பா மு.தர்மலிங்கம்,
பெரியம்மா த.கோமதி. (89985)



# STUDY IN EUROPE
# MBBS/MD

**Lugansk State Medical University**
Ukraine (உக்கிரேன்) - East Europe

ஸ்ரீ லங்கா Medical Councilயினால் அங்கீகரிக்கப்பட்டது

With O/Ls 7 Years
With A/Ls 6 Years

இவ்வருடத்திற்கான First Batch மாணவர்கள் யாவரும் Ukraine VISA ஐ பெற்றுவிட்டனர்.

எமது நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்ட St.John's College Jaffna, St. Patricks College Jaffna, Holy Family Convent Jaffna, St. Michaels College Batticaloa, St.Mary's Convent Trinco, Vavuniya Vidyalam, Royal College Colombo, Hindu College Colombo, Hindu Ladies College Colombo, Ramanathan Ladies College Colombo Isipathana College Colombo ஆகிய கல்லூரிகளின் பழைய மாணவர்கள் தற்பொழுது Medical Degree (MBBS) கற்கின்றனர்.

**Next Batch Starting : 15th October**

**www.lugmedi.com**

Colombo Head Office
Tel : (தமிழ்) 0777-767 818
Scholars Information Center ( 2nd Floor)
No.50 Galle Raod,
Colombo 06

யாழ்ப்பாணத்தில் விபரங்களை பெற:
Mr.S.Mariaratnam 077-4528818
148, Temple Road, (Opp.UNICEF)
Jaffna. Tel : 021 - 222 3818



BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி

# இலங்கை வங்கி யாழ்ப்பாணம்
## பிரதான வீதிக் கிளை
## திறப்பு விழா

இடம்: பரி.மார்ட்டீன்ஸ் வர்த்தக நிலையம்,
பிரதான வீதி, யாழ்ப்பாணம்
திகதி: நாளை (19.10.2009) திங்கட்கிழமை
காலம்: முற்பகல் 10.45

பிரதம விருந்தினர்:
திரு. அஜித் நிவாட் கப்ரால்
ஆளுநர்- இலங்கை மத்திய வங்கி

சிறப்பு விருந்தினர்:
கலாநிதி காமினி விக்கிரமசிங்க
தலைவர்- இலங்கைவங்கி

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

உதவிப் பொதுமுகாமையாளரும்
ஊழியர்களும்,
இலங்கை வங்கி, வடமாகாணம்.

T.P.: # 021 222 4564.



## மணமகள் தேவை

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த, தற்பொழுது மலேசியாவில் வசிக்கும் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர் தமது மகனுக்கு கௌரவகுடும்பத்தைச் சேர்ந்த, நடுத்தரமான, நிறமான, மெலிந்த மணமகளைத் தேடுகின்றனர். அநாதைகளும் விண்ணப்பிக்கலாம். மணமகன் 29.11.1975ஆம் ஆண்டு பிறந்தவர். பிறந்தநேரம் 2.57 மணி (மலேசியா நேரம்). 5அடி 2 அங்குல உயரம். லண்டன் பல்கலைக்கழக கணனி விஞ்ஞான பட்டதாரி. சித்திரை முதலாம் பாதம், கன்னிராசி, University College நிர்வாக உத்தியோகத்தர். காலில் சிறுதளர்ச்சி காணப்பட்டாலும் நடக்கக் கூடியவர். தனது கார் ஓட்டுவார். பொருளாதார வளம் உடையவர்.

விரும்பியவர்கள் உங்களது படத்துடன் கல்வித்தகைமை, குடும்ப விவரத்துடன் உங்களது விண்ணப்பத்தை

**P.O.BOX 25, SEREMBAN,
NEGRI SEMBILAN
WEST MALAYSIA.**

என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (சி/561466)


# அகதிமுகாமில் வடிகால் அமைக்க ஐ.நா. அபிவிருத்தித்திட்டம் உதவி

கொழும்பு, ஒக். 18

வவுனியா மெனிக்பாமில் மழை காலத்தில் அசௌகரியங்கள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் உரிய வடிகால் திட்டங்களை நடைமுறைப்படுத்த ஐ.நா. அபிவிருத்தித் திட்டப் பிரிவிடமிருந்து நிதி உதவியைப் பெற்றுக்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இதற்கான பிரேரணையை அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க சமர்ப்பித்தார். இத்திட்டத்திற்கு 5 கோடியே 29 இலட்சம் ரூபாவை வழங்க ஐ.நா. அபிவிருத்தித் திட்டப் பிரிவு இணக்கம் தெரிவித்துள்ளது. இந்த நிதியைப் பயன்படுத்தி மெனிக்பாம் 1,3, மற்று 4 ஆகிய பிரிவுகளில் மழை நீர் வடிந்தோடக்கூடிய கால்வாய்கள் மற்றும் மதகுகள் அமைக்கப்படவுள்ளன. (சி)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 18

'இளைஞர்களுக்கான நாளை' விளையாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையிலான ஆறு பேர் பங்குபற்றும் ஐந்து பந்துப் பரிமாற்றத்தைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டப் போட்டி இன்று காலை 8 மணியளவில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இப்போட்டிகளில் 58 கழகங்கள் பங்கு பற்றுகின்றன.(1-23)

* * *

நாமல் ராஜபக்ஷ வெற்றிக் கிண்ணத்திற்கான யாழ். மாவட்ட வலைப் பந்தாட்டச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணியளவில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

இப்போட்டிகளில் 10 கழகங்கள் பங்கு பற்றுகின்றன. போட்டிகளில் பங்குபற்றும் கழகங்கள் உரிய நேரத்திற்கு மைதானத்திற்கு சமுகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (1-23)


## அரிய சந்தர்ப்பம்

உங்களது முதலீட்டை ஆறு மாதங்களில் பெறலாம்
டிஜிட்டல் தொழில்நுட்ப யுகத்தின் நவீன வசதிகளுடன்..

- இலவச இணைப்பு
- ஒரு வருட உத்தரவாதம்
- தொடர்ச்சியான பராமரிப்பு
- நேரில் பார்வையிடலாம்.
- சந்தைப்படுத்தல். தொழில்நுட்ப நுணுக்கங்கள் வழங்கப்படும்.
- 24 மணிநேர தொழில்நுட்பச் சேவை
- 10KVA UPS

கையிருப்பில் இருப்பவற்றுக்கே விசேட விலை

ஜப்பானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட

ஒரு முழுமையான Digital Photo Colour Lab




Hotline : 0773 - 815314

Perfect Digital Imaging Services (Pvt) Ltd.
# 265, Ward Place, Colombo - 07. Tel : 0112 - 665827 - 29


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவக்கொழுந்தம்மா பொன்னுசாமி



யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்தம்மா பொன்னுசாமி நேற்றுமுன்தினம் (16.10.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அக்கினி பகவான் கந்தையா- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னுசாமியின் அன்பு மனைவியும் திருமதி செல்வராஜேஸ்வரி பொன்னுசாமி (முன்னாள் உப அதிபர், யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி), காலஞ்சென்ற தயானந்தராசா மற்றும் வைத்திய கலாநிதி மாணிக்கராசா (UK), கலாவதி (UK) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற ஆறுமுகம் பொன்னுச்சாமி மற்றும் அரிய தேவி(UK), பரமேஸ்வரி (UK), தம்பையா (UK) ஆகி யோரின் அன்பு மாமியும் அமலன், அகிலன், கல்யாணி, நீருஜா, மைத்திரேஜி, யசோதரன், மயூரன், ராஜ்குமார், சசிக்குமார், மைதிலி, ஆதவன், மேகலை, ரமேஸ்குமார், அகிலா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் துளசிகா, துசாரிக்கா, கார்த்திகா, எலா, செனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.10.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

171/B, மானிப்பாய் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (89987)

தகவல்:
திருமதி செல்வராஜேஸ்வரி பொன்னுசாமி (மகள்).

## மருதப்பு கார்த்திகேசு (பப்பா)

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தரும் முன்னாள் சிரேஷ்ட பாதுகாவலரும், கோல்டின் ஈகிள் பாதுகாப்பு)



நல்லூரைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மருதப்பு கார்த்திகேசு 14.10.2009 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான மருதப்பு- சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரரும் கொக்குவில் மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கதிரவேலு- செல்லாச்சி தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான சோமசேகரம், ஏகாம்பரமேஸ்வரி, நாகம்மா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கணேசமாலினி, பவானி மற்றும் கஜேந்திரன், குமுதினி, சௌதாமினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நகுலேஸ்வரன், ரங்கராஜா, ஆனந்தச்செல்வி ஆகியோரின் மாமனும் நளினி, சாந்தினி, ரேவதி, காந்தி, தயாபரன், புவனேஸ்வரி ஆகியோரின் தாய் மாமனும் சுமதி, வாசன், லோகா, உத்தமன் ஆகியோரின் பெரியப்பாவும் சரணிஜா, ரிஷிகேசன், றணஜன், அனோஜிஜா, டினுஜன், நவீனன், எழில்வேந்தினி, நவீன்ராஜ், தமிழினி, இலக்கியா, இந்துஜா, சுரேஷ்குமார் ஆகியோரின் அன்புத் தாத்தாவும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் தவரத்தினம், செல்வரத்தினம், பாக்கியரத்தினம், காலஞ்சென்ற தவராசா மற்றும் சீதாதேவி, கந்தசாமி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் இரத்தினசிங்கம், சிவபாதசுந்தரம், கணேசமூர்த்தி ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நந்தாவில் வீதி,
கொக்குவில். (90013)

தகவல்:
அ.நகுலேஸ்வரன் (நகுலன் - மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# படைத்தலைமையுடன் முறுகலா? தந்திரோபாயக் கட்டுக்கதை அது!

வன்னியில் நலன்புரி மையங்களில் முடக்கப்பட்டுள்ள சுமார் மூன்று லட்சம் தமிழ் அகதிகளையும் தொடர்ந்தும் தடுத்து வைத்திருக்கும் தனது எதேச்சாதிகாரத்தை நீடிப்பதற்காக ஏதோவெல்லாம் செய்கின்றது கொழும்பு அதிகார மையம்.

அத்தகைய நோக்கில் இப்போது கிளப்பிவிடப்பட்டுள்ள பீதியே - வதந்தியே - அரசுத் தரப்புக்கு எதிராக படைத்தரப்பு முறுகி, அந்த மோதல் முற்றி, பெரும் முரண்பாடாக வெடித்து, விபரீத விளைவுகளை ஏற்படுத்திவிடப் போகின்றது எனக் கொழும்பில் இருந்து பரப்பப்படும் கதைகளாகும்.

இத்தகைய 'கயிறு'களை அவிழ்த்து விடுவதன் மூலம் ஒரு கல்லில் பல மாங்காய்களை விழுத்த எத்தனிக்கின்றது கொழும்பு.

வன்னியில் அகதிகளை இப்படி லட்சக்கணக்கில் - பல மாதங்களாக - அடிப்படை வசதிகள் இல்லாத கொட்டகைக்குள் - தடுத்துவைத்திருக்கின்ற கொடூரத்துக்கு எதிராக சர்வதேச அபிப்பிராயமும் கண்டனமும் பீறிட்டு வருகின்றன. இதனால் உலக சமூகத்திடம் இருந்து கிளம்பும் அழுத்தங்களையும், நெருக்கடிகளையும் சமாளித்துத் திசைதிருப்புவதற்காகவே இலங்கை இராணுவம் பற்றிய பூச்சாண்டி காட்டப்படுகின்றது.

இப்படிக் கொழும்பு காட்டும் பூச்சாண்டி விளையாட்டு புதுடில்லி அதிகார வர்க்கத்திடம் நன்கு எடுபடுகின்றது. இங்கு இராணுவச் சதிக்கு ஆபத்து உள்ளது என்ற கொழும்பின் பருப்பு புதுடில்லியிடம் நன்கு அவிவதுதான் வேதனையான விடயமாகும்.

ஏற்கனவே, தடுப்பு நிலையில் வைக்கப்பட்டிருக்கும் வன்னி அகதிகளைப் பார்வையிடுவதற்காக கொழும்புக்கு வந்த - தமிழகத்தைச் சேர்ந்த - இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் முக்கிய பிரதிநிதி ஒருவர், தாம் மேற்படி இராணுவச் சதிக்கு வாய்ப்பு என்ற கயிறை நன்கு விழுங்கிக் கொண்டுள்ளார் என்பதை வெளிப்படையாகவே போட்டு உடைத்துச் சென்றிருக்கின்றார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் மேற்படி இந்திய எம்.பிக்களின் குழுவுக்கும் இடையே கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பின்போதே மேற்படி இந்திய எம்.பி தாம் இத்தகைய ஒரு நிலைப்பாட்டில் இருக்கின்றார் என்பதை பிரதிபலித்திருக்கின்றார்.

''வன்னி அகதிகள் மீள் குடியமர்த்தப்படுவது புலிகள் இயக்கம் மீண்டும் தலைதூக்க வழி செய்யும் என இலங்கை இராணுவத்தினர் கருதுகின்றனர். அதனால் மீள் குடியேற்றத்தை அவர்கள் எதிர்க்கின்றனர். அதைமீறி இலங்கை ஜனாதிபதி இந்த மக்களின் மீள்குடியேற்றத்துக்கு நடவடிக்கை எடுப்பாராயின், இராணுவத்தினர் ஜனாதிபதிக்கு எதிராகத் திரும்பவும் தயங்க மாட்டார்கள். அத்தகைய நிலையில் இராணுவத்தினருக்கு நேரடியாக சீனாவின் ஆதரவு கிட்டவும் வாய்ப்புண்டு. அப்படி நேர்ந்தால் அது இந்தியாவுக்கு ஆபத்தாகி - விபரீதங்களை - ஏற்படுத்தலாம். ஆகவேதான், இந்த அகதிகளை அவசரப்பட்டு மீள்குடியேற்றுங்கள் என்று இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுப்பதை தவிர்த்துக் கொள்ளுங்கள். அதைத்தள்ளிப் போடுங்கள் என்று கோருகிறோம்'' - இப்படி இலங்கைக்கு விஜயம் செய்த - தமிழகத்தின் - மூத்த நாடாளுமன்ற உறுப்பினரும் காங்கிரஸ் கட்சி பிரமுகருமான மூத்த அரசியல்வாதி ஒருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனான சந்திப்பின்போது இதனைக் குறிப்பிட்டிருக்கிறார்.

இத்துடன் கதை முடிந்துவிடவில்லை. இலங்கைக்கு வந்த இந்திய எம்.பிக்கள் குழு தமிழகம் திரும்பியதும், தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியிடம் தமது இலங்கை விஜயம் குறித்து ஓர் அறிக்கை சமர்ப்பித்தது. வன்னி அகதி முகாம்களில் உள்ளவர்களில் 58 ஆயிரம் பேரை அடுத்த இரு வாரங்களுக்கு முன் தாம் விடுவிப்பார் என இலங்கை ஜனாதிபதி தம்மிடம் உறுதியளித்தார் என்றும் கூட அந்த அறிக்கையில் தமிழக எம்.பிக்கள் தெரிவித்திருந்தனர். அப்படி 58 ஆயிரம் பேரை அவர்கள் அவசரமாக விடுவிப்பதற்கு இலங்கை ஜனாதிபதி இணங்கியுள்ளார் என்ற செய்திக்குத் தமிழகத்திலும் இந்தியாவிலும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆனால் இவ் விடயத்தில் கொழும்பு 'கப்சிப்' பெரிதாக எந்தப் பிரதிபலிப்பும் இல்லை. இந்த அகதிகளை விடுவிக்கும் எண்ணம் கொழும்புக்கு உண்மையாக இருந்தால் அல்லவா அது இத்தகைய அறிவிப்புக்கள் இந்தியாவில் வெளியானபோது அது குறித்து அலட்டிக் கொள்வதற்கு..... ஆயினும், உரிய காலம்- இரண்டு வாரங்கள் - முடியும்போது எங்கே குறைந்தபட்சம் 58 ஆயி ரம் அகதிகளையாவது 'விடுவித்தாயிற்றா என்ற சிக்கல் இந்தி யாவிலிருந்து பூதாகரமாக கிளம்பும் என்பது கொழும்புக்குத் தெரியும்.

அதைச் சமாளிப்பதற்காகவே இப்போது கொழும்பு அதிகார மட்டத்தில் இருந்து 'இங்கு இராணுவச் சதிப் புரட்சிக்கு வாய்ப்புண்டு' என்ற சாரப்பட கட்டுக்கதைக் அவிழ்த்து விடப்படுகின்றன எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

'இராணுவம் - படைத்தரப்பு - அரசுத் தலைமையுடன் முறுகிநிற்கும் இந்தச் சமயத்தில், இராணுவத்துக்கு அறவே பிடிக்காத - அகதிகளை மீள்குடியேற்றம் செய்யும் நோக்குடன் அவர்களை விடுப்பது என்ற - கடினமான பணியை நிறைவேற்றும் படி இலங்கை அரசுத் தரப்பை வற்புறுத்தாதீர்கள் அப்படிச் செய்வது கொழும்பு அரசுக்கு எதிராகப் படைத்தரப்பு திரும்புவதற்கே வழிசெய்யும்'. - என்ற சாரப்பட்ட செய்தியே புதுடில்லிக்கும், அகதிகள் மீள்குடியேற்றத்தை வற்புறுத்தும் ஏனைய உலகத் தரப்புகளுக்கும் வழங்கப்படுவதாகத் தெரிகின்றது. இவ் வாரத்திலும் இத்தகைய பரப்புத் தகவல் ஒன்று திடீரென கொழும்பில் இருந்து புதுடில்லிக்கு தெரியப்படுத்தப்பட்டதாக அறியவந்தது.

காட்டில் இருந்து 'புலி வருகிறது', 'புலி வருகிறது' என அடிக்கடி பொய் சொன்னால், ஒருநாள் உண்மையாக அப்படிப் புலிவரும்போது அதுபற்றிய அறிவிப்பை வழமை போல மக்கள் நம்பமாட்டார்கள். காப்பாற்ற யாருமே வரமாட்டார்கள். அதுபோலவே அரசுத்தலைமைக்கெதிராகப் படைத்தலைமை திரும்புகின்றது என்ற கட்டுக்கதையை இப்படி அரசியல் இலக்குளை எட்டுவதற்காக அடிக்கடி கொழும்பு கட்டவிழ்த்து விடுமானால் ஒருநாள் உண்மையாக நிலைமை மாறுமாகின் அரசுத் தலைமையைக் காப்பாற்ற யாரும் உதவிக்கு - சரியான சமயத்தில் - வரமாட்டார்கள் என்பதுதான் நிலைமையாகிவிடும்.

சம்பந்தப்பட்டோருக்கு இது புரிந்தால் சரி....

# உலக நாடுகளுக்கு ஒப்பான வைத்திய சேவை கிடைக்க சர்வதேச மருத்துவக் குழு 27 மில்லியன் ரூபா உதவி

## 5 பிரதேச வைத்தியசாலைகளில் அவசர சேவை சிகிச்சைப்பிரிவுகள்

நல்லூர் ஒக்.18

ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, தெல்லிப்பளை, சங்கானை, கோப்பாய்ப் பகுதிகளிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திக கலாநிதி ஆ.கேதீஸ்வரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டில் மேலும் சில வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைப்பிரிவுகள் ஆரம்பிக்கவும் ஆலோசிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சர்வதேச தரத்திலான சிகிச்சைகளை வழங்கக்கூடிய நவீன மருத்துவ உபகரணங்கள் இலங்கையில் யாழ்.மாவட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. அதனால் உலக நாடுகளுக்கு ஒப்ப சிறப்பான வைத்திய சேவையை இங்குள்ளவர்கள் பெறக்கூடியதாகவிருக்கும்-என்று சர்வதேச மருத்துவக்குழுவின் தேசிய பணிப்பாளர் டொனிவூட் யாட் குறிப்பிட்டார்.

அமெரிக்கெயர் நிறுவனத்தின் உதவியுடன் சர்வதேச மருத்துவக் குழு இதுபோன்ற திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கென சர்வதேச மருத்துவக்குழு 27 மில்லியன் ரூபாவை நிதியுதவியாக வழங்கியுள்ளதாகவும் டொனிவூட்யாட் தெரிவித்தார்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற் கண்ட தகவல்கள் வெளியிடப்பட்டன.

(அ-111-14)

# கல்வி நிர்வாக சேவை தரம் III ற்கு வடக்கு மாகாணத்திலிருந்து 13 பேர் நியமனம்

## கடிதங்கள் நாளை கல்வி அமைச்சில் வழங்கப்படும்

அச்சுவேலி, ஒக்.18

இலங்கை அதிபர் சேவை தரம் 1 இல் இருந்து சேவை மூப்பு, திறமை அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு வடக்கு மாகாணத்தில் இருந்து 13பேர் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் 19 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்வி அமைச்சின் 4 ஆம் மாடியில் உள்ள கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

தவிர்க்க முடியாத காரணத்தினால் உரிய வேளையில் நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதவர்கள் 20 ஆம் திகதி முற்பகல் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு பதவி உயர்வு பெற்றுள்ளோர் பெயர் விவரம் வருமாறு.

வி.கணேசராசா-யாழ்.இந்துக்கல்லூரி

திருமதி ஆர். குட்டித்தம்பி-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

திருமதி எஸ். ஆனந்தி-மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி

எஸ் .குபேரநாதன் - கோட்டக்கல்வி அதிகாரி வலிகாமம் கல்வி வலயம்

வே .மாணிக்கம் - யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்

திருமதி எஸ். விஜயலட்சுமி, கரவெட்டி

எஸ். முத்துலிங்கம், கந்தர்மடம்

எஸ். கயிலாயபிள்ளை - சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கே.சின்னராசா, கிளிநொச்சி கல்விவலயம், திருமதி மாணிக்கராசா-வவுனியா கல்வி வலயம், திருமதி ஆன்மேரி - மன்னார் கல்வி வலயம், எம்.எஸ்.றவல்-மன்னார் கல்வி வலயம், எஸ்.உலகநாதன் - வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்.

யாழ். மாவட்டத்தில் இருந்து 8 பேரும் மன்னார் மாவட்டத்தில் இருந்து 2 பேரும் வவுனியா மாவட்டத்தில் இருந்து 2 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து ஒருவருமாக 13 பேர் பதவி உயர்வு பெற்றுள்ளனர். (அ-11)

# வீதிகளில் குழுவாக நிற்கும் இளைஞர்களை அள்ளிச் செல்கின்றார்கள் மானிப்பாய் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஒக்.18

வீதிகளில் மற்றும் சந்திகளில் குழுவாக நின்று வீண் பொழுது போக்கும் இளைஞர்களை பொலிஸார் அழைத் துச் சென்று பொலிஸ் நிலையத்தில் வைத்து அறிவுரைகளை கூறி இனிமேல் சந்திகளில் தேவையில்லாமல் நிற்க வேண்டாமென்று எச்சரிக்கை செய்துவருகின்றனர்.

இத்தகைய நடவடிக்கைகளில் கடந்த ஒரு வாரகாலமாக மானிப்பாய் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மானிப்பாய் பொலிஸாரின் இந்தத் தீவிர நடவடிக்கை தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-•

மாலை வேளையில் 'ஜீப்'வண்டிகளில் வீதிச்சோதனைகளில் ஈடுபடும் பொலிஸார் வீதிகளில் குழுகுழுவாக நிற்கின்ற இளைஞர்களை தமது வாகனங்களில் பொலிஸ் நிலையத்துக்கு ஏற்றிச் சென்று இனிமேல் தேவையில்லாமல் வீதிகளில் நின்று போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்பதையும் பெண்களுடன் சேஷ்டை விடுவதையும் தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவுரைகூறி விடுவிக்கின்றனர்.

தனியார் கல்வி நிறுவன மாணவர்கள் தமது வகுப்புகள் முடிந்ததும் உடனே வீடுகளுக்குச் செல்லாமல் வீதிகளில் உள்ள சந்திகளில் நின்று போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்து வருகின்றனர்.

இத்தகைய இளைஞர்களும் பொலிஸாரின் அறிவுறுத்தலுக்குட்பட்டுவருகின்றனர்.

(அ-9)

# வன்னியில் இருந்து திரும்பிய மாணவர்களுக்கு இந்து மாமன்றம் நிதியுதவி வழங்கியுள்ளது

யாழ்ப்பாணம், ஒக்.18

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு அகில இலங்கை இந்துமாமன்றம் நிதியுதவியினை வழங்கியுள்ளது.

இந்த நிதி கையளிப்பு நிகழ்வு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை, மன்றத்தின் உபதலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ்.விஜயகுமார் அவ்வேளை பிரசன்னமாகியிருந்தார்.

வாழ்க்கை நிலைப்படுத்தல் கொடுப்பனவாக 96 பல்கலைக்கழக மாணவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டது. மாணவர்களுக்குரிய நிதி உதவிகளை ஆறு.திருமுருகன் மற்றும் இந்து மாமன்ற யாழ்.இணைப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும் வழங்கினர்.

வவுனியா நலன்புரி நிலையத்திலிருந்து முதற்கட்டமாக விடுவிக்கப்பட்டு யாழ்.பல்கலைக்கழகம் திரும்பிய 56 பட்டதாரி மாணவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அகில இலங்கை இந்து மாமன்றம் முன்னரும் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (1-9)

# உள்ளூராட்சி மாநாடும் கண்காட்சியும் இன்று முதல் இரண்டு தினங்கள் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஒக்.18

'நல்லனுபவங்களைப் பகிர்தலும் பங்குடைமையை வளர்த்தலும்' எனும் தொனிப்பொருளில் இந்த ஆண்டிற்கான வடக்கு மாகாண உள்ளூராட்சி மாநாடும் கண்காட்சியும் இன்றும் நாளையும் நடைபெறுகின்றன.

இன்று காலை 8.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வில் விருந்தினர்களாக மாகாணசபைகள், உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம், யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொழில்நுட்ப அமர்வுகளுடன் ஆரம்பமாகும் இந்த மாநாட்டில் வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள், பிரதேச, நகர, மாநகர சபைகள் கலந்துகொள்கின்றன.

மு.ப. 10 மணிக்கு கண்காட்சி ஆரம்பமாகும். இக்கண்காட்சியில் ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபைகளும் தமது பிரதேச வளங்களை மையப்படுத்தி காட்சிப்படுத்துகின்றன. இறுதியாக நாளை திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் விருதுவழங்கும் நிகழ்வு நடைபெறும்.

இந்த நிகழ்வுகள் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் ஆசிய நிலையத்தின் அனுசரணையுடன் வடமாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தால் நடத்தப்படுகின்றன என வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி தெரிவித்துள்ளார். (10-302-131)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 02 | 19.10.2009 திங்கட்கிழமை |
| திதி: | பிரதமை மு.ப. 10.56 வரை |
| நட்சத்திரம்: | சுவாதி மு.இ.10.38 வரை |
| சுபநேரம்: | 12.02 - 01.32 வரை |
| இராகுகாலம்: | 07.32 - 09.02 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 4 புதிய வைத்திய அதிகாரி அலுவலகங்கள் அடுத்த ஜனவரியில் திறக்கப்படும்

யாழ்ப்பாணம்,ஒக்.18

யாழ்ப்பாணத்தில் அடுத்தவருடம் ஜனவரி மாதம் தொடக்கம் மேலும் நான்கு புதிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் திறக்கப்படும் என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சண்டிலிப்பாய், உடுவில், கரவெட்டி, நல்லூர் ஆகிய இடங்களிலேயே இந்த அலுவலகங்கள் இயங்க உள்ளன. அந்த அலுவலகங்களில் கடமையாற்றுவதற்கான ஆளணியினர் இடமாற்றப்பட உள்ளனர்.புதிய அலுவலகங்களுக்கு தளபாட மற்றும் வசதிகள் செய்து கொடுக்கப்படும். இவ்வலுவலகங்கள் இயங்குவதற்கான தற்காலிக வீடுகள் தற்போது ஒழுங்கு செய்யப்பட்டுள்ள போதிலும் வெகு விரைவில் அவை சொந்தக் காணிகளில் சொந்தக்கட்டடங்கள் அமைத்து இயக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-51)


கேட்ட உடன் கைகளில் பணம்



கொமர்ஷல் வங்கியின் தங்க நகை அடகு சேவை

பவுனுக்கு ரூபா.22,000/- வரை

வட்டி வருடத்திற்கு 18% மட்டுமே

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதிக் கிளையில் ஒக்டோபர் 20ம் திகதியிலிருந்து.....

COMMERCIAL BANK


## அகதிகளை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களில் 8 ஆயிரம் பேரை அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்தியுள்ளோம் என்றும் மேஜர் ஜெனரல் கமால் குணரத்தின மேலும் கூறினார்.

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த 282,000 பொதுமக்களில் இதுவரை 55 ஆயிரம் பேர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களில் 30 ஆயிரம் பேர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். ஒவ்வொரு தடவையும் 2 ஆயிரம் பேர் வீதம் 40 ஆயிரம் இடம் பெயர்ந்தவர்களை யாழ். மாவட்டத்தில் மீள் குடியமர்த்த 'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷவின் வழிகாட்டலில் வவுனியா, யாழ்ப்பாணம். அரச அதிபர்கள் நடவடிக்கை எடுத்துள் ளனர். - என்றும் மேஜர் ஜெனரல் கமால் குணரத்தின மேலும் தெரிவித்தார்.

அதேபோல் மன்னார் மாவட்டத்தில் 1,200 பேர் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர். கிழக்கு மாகாண குடியமர்வு பூர்த்தியாகியுள்ளது. - என்றும் அவர் கூறினார். (அ-1)

## குடும்ப....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் குறித்துக் கூறப்படுவதாவது :-

வவுனியா முகாமில் இருந்து கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் திருகோணமலைக்கு அழைத்துச்செல்லப்பட்டவர்கள் இடைத்தங்கல் முகமான செண்பகம் மகாவித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று அங்கு வந்த சீருடை தரித்த இனந்தெரியாதவர்கள் முகாமில் உள்ளவர்களை விசாரித்த பின்னர் அங்கிருந்து 15 பேரைக் கடத்திச் சென்றனர்.

கடத்திச் செல்லப்பட்டவர்கள் திருமணமானவர்கள்; 25 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட குடும்பத் தலைவர்கள் ஆவர்.

கடத்திச் செல்லப்பட்ட இளைஞர்கள் குறித்து நேற்று மாலை வரை தகவல் எதுவும் வெளியாகவில்லை. (அ-1)

## சர்வதேச.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு 27 சர்வதேச மனித உரிமை சாசனங்களைத் தப்பாது கடைப்பிடிக்க வேண்டும் என்று இலங்கையிடம் நீண்ட காலமாக ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ச்சியாக எச்சரித்துவந்தது.

ஜி.எஸ்.பி + வரிச்சலுகையானது, குறுகியகால அரசியற் பிரச்சினையை கவனத்தில் எடுத்து வழங்கப்படுவதில்லை. அது நீண்டகால ஸ்திரத்தன்மையை நோக்கி கருத்திற்கொள்ளப்படுவதாகும் - என்று ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழு அதிகாரியொருவர் கூறினார்.

''இது ஒரு வர்த்தகத் தடையல்ல ஜி.எஸ்.பி. + வரிச்சலுகையைப் பெறுவதற்கான விதிமுறைகள் பல உண்டு. அந்த விதிமுறைகளை மீறினால் அதன் விளைவுகளைச் சந்திக்க வேண்டிய துரதிர்ஷ்டம் உண்டு''. என்றும் அந்த ஐரோப்பிய ஒன்றிய அதிகாரி கூறினார்.

பொலிஸாரின் வன் செயல்கள், உடல் ரீதியான சித்திரவதை, தொழில் சட்டங்கள் மீறப்பட்டவை, வயது குறைந்தவர்களை வேலைக்கு அமர்த்துதல் ஆகிய குற்றங்களை இலங்கை புரிந்துள்ளதாக அறிக்கை தெரிவித்துள்ளது. (அ)

## இலங்கை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் கைவிடப்பட்டது.

நேற்று கப்பலுக்குச் சென்ற இந்தோனேஷிய அதிகாரிகளின் வேண்டுகோளை ஏற்று போராட்டம் கைவிடப்பட்டது.

கப்பல் பயணிகளுக்கு இந்தோனேஷிய அரசு எதிரானது அல்ல என்றும் சர்வதேச சமூகம் ஊடாக விடுக்கப்படும் விண்ணப்பத்துக்கு ஏற்ப மக்களின் பிரச்சினைக்கு தீர்வு கிட்டும் என்றும் அந்த அதிகாரிகள் உண்ணா விரதம் மேற்கொண்ட மக்களிடம் தெரிவித்ததை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

(முன்னர் வந்த செய்தி 2 ஆம் பக்கத்தில்)

## நல்லூர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களை அழைத்துவர நல்லூர் பிரதேச செயலக அதிகாரிகள் நேற்று வவுனியா சென்றுள்ளனர்

அதேவேளை வவுனியா அகதி முகாம்களில் இருந்து கடந்த 15 ஆம் திகதி 808 குடும்பங்களைச் சேர்ந்த 2,503 பேரும் 16 ஆம் திகதி 607 குடும்பங்களைச் சேர்ந்த 2,072 பேரும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

வவுனியாவில் இருந்து நேற்று எவரும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்படவில்லை என செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வவுனியா மருதங்குளத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகைகளைக் கொள்ளையிட்ட ஒருவரை அந்தப் பிரதேச மக்கள் வளைத்து முற்றுகையிட்டனர்.

மக்களின் முற்றுகையை முறியடிக்க கொள்ளையன் துப்பாக்கிப் பிரயோகம் செய்தான். அதில் அதே இடத்தைச் சேர்ந்த இராமமூர்த்தி புலேந்திரன் (வயது -36) என்பவர் கொல்லப்பட்டார். கொள்ளையனின் துப்பாக்கிப் பிரயோகத்தில் காலில் காயமடைந்த திருநாவுக்கரசு கிருபாகரன் (வயது-33) என்பவர் வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

பின்னர் சத்திரசிகிச்சை மூலம் அவரது கால் அகற்றப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் மருதங்குளம் பகுதியில் பெரும் பதற்றமான நிலையை உருவாக்கியுள்ளது. (அ-1)


PRINTER: HP D 1560 - 4300/-; Epson T 10 - 4400/-; Canon IP 1980 - 4900/-; HP 1005 LaserJet - 16500/-
TV CARD: Asus TV Card P 7131 - 4200/-; Combo LCD Box - 4300/-; Combo CRT Box - 2400/-; Internal TV Card - 2500/-
ACCESSORIES: Head Phone with Mic - 400/-; Bluetooth - 400/-; Modem 56K - 550/-; UPS Battery - 1250/-; Laptop Bag - 1100/-; Keyboard (Tamil/English/Sinhala) - 600/-; ATX Casing with Power Supply - 2700/-
NETWORK: D-Link Broad Band Router DR-100 - 4900/-; D-Link Broad Band Router Wireless - 5800/-; TP-Link ADSL + Router - 3900/-; TP-Link ADSL 4 Port Router - 5800/-; Network Card - 750/-; Linksys PAP2T-EU - 7400/-
SUB WOOFER: CMK 2.1 - 1950/-; Creative 2.1 - 2600/-; Microlab M 280 2.1 - 3250/-; Creative 5.1 - 6900/-
MOTHER BOARD: Foxconn - 5200/-; Asrock - 5400/-; Intel DG 31 PR - 7700/-; Intel DG 41 RO - 8400/-
ORANGE MP3 PLAYER 2 GB 2400/-
SONY FLASH MP3 PLAYER 2 GB VOICE RECORDING PENDRIVE 3500/-
SONY MP5 PLAYER MP3, MP4, FM, VOICE RECORDING, CAMERA, VIDEO, GAMES 5500/-
1200/- WEB CAMERA
HARD DISK: 80 GB SATA - 4500/-; 160 GB SATA - 5250/-; 250 GB SATA - 5600/-; 500 GB SATA - 6900/-
PORTABLE HARD DISK: 250 GB 2.5 - 9500/-; 320 GB 2.5 - 10700/-; 500 GB 2.5 - 14000/-
POWER SUPPLY: 400 W - 1200/-; 500 W - 1400/-
RAM: DDR I 512 MB 400 - 2500/-; DDR I 1 GB 400 - 4600/-; DDR II 1 GB Kingston 800 - 2200/-
VGA CARD: AGP 64 MB - 2250/-; PC Express 8400 512 MB - 5250/-
UPS: UPS 650 W - 3700/-; UPS 1200 Kv - 6500/-
SCANNER: Mustek 1248 - 5400/-; Canon Lide 10 - 6000/-; HP G 2410 - 7500/-
PROCESSOR: Intel 1.8 Ghz Celeron - 5250/-; Intel 2.6 Ghz Duo Core - 8600/-; Intel 2.8 Ghz Core2Duo - 14600/-; Intel 2.93 Ghz Core2Duo - 14950/-
PEN DRIVE: 2 GB Flash - 1000/-; 4 GB Flash - 1500/-
* Warranty Value 1-3 years * Stock Available
MUSIC WORLD & COMPUTERS
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி.
தொலைபேசி/ஃபக்ஸ்: 021 222 6554
Email: musicworld@dialognet.lk



e.com
O/L பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்காக விசேட ICT மீட்டல் வகுப்புக்களும் மாதிரிப் பரீட்சைகளும்
Diploma in Microsoft Office 2007
Diploma in Desk Top Publishing
Diploma in Computer Networking
Diploma in Web Designing
Diploma in Computer Hardware
Diploma in Video Editing
Diploma in .Net Programming
Certificate in Internet & E-Mail
Special Offer!
Register before 30.10.09
Call : 0217429005 No.95A Temple Road, Nallur, Jaffna



யாழ் மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
FedEx Express
தீபாவளி திருநாளை முன்னிட்டு! மாபெரும் விசேட விலைக்கழிவு!
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
உள்நாடு, வெளிநாடுகளுக்கு, கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உணவுப்பொருட்கள், உடுபுடவைகள், மற்றும் VCD பிரதிகள், CD க்கள் என்பனவும் ஏற்றுக்கொள்ளப்படும்
குறைந்த கட்டணத்திலான உள்நாட்டு வெளிநாட்டுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
லண்டன்,ஜேர்மனி 1 Kg 1300/= 4 நாட்களில் அவர்களது இல்லங்களில்
TCN EXPRESS 2B, Nelsan Place, Colombo -06
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம் நெற் பிரதான வீதி, நெல்லியடி. இப்பொழுது வடமராட்சியிலும்
259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம்,வீதி, திருநெல்வேலி. (ந.ப.நோ.சங்கம் முன்பாக)
பிரதான வீதி, நெல்லியடி.(ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள், இடம் பெறும்



ENTRY SERIES: 1.6 GHZ, Intel Atom, 1GB(800Mhz) Kingston, 320GB Sumsung Hdd, Power Logic Casing, Sony DVD Writer, Key,Mouse, 15 LCD, UPS.EAST Auto Shutdown — 39,800/=
DUAL SERIES: 2.6 GHZ Dual Pro .D, Asus M.B, 1GB (800Mhz) Kingston, 320 GB Sumsung, Power Logic Casing, Asus DVD Writer, 17.HP, Key,Mouse, UPS.EAST Auto Shutdown — 49,800/=
CORE 2 DUO SERIES: 2.9.C.2 Duo, Asus M.B, 2GB Kington, Asus/DVD, 320GB Hdd, 19 HP LCD, Key,Mouse, UPS.EAST Auto Shutdown — 59,800/=
HP BRANDED SERIES: HP Pavilion, 2.5 Dual, Intel G35, 1GB MEM, HP DVD Writer Light Scripe, 320 GB Hdd, 19 HP LCD, HP Key,Mouse — 69,800/=
LAPTOP: Mini HP 2133 - 39500; Mini HP 110 - 49500; Cq 40 - 69,000; Cq 60 - 85,000; Cq 45 - 92,000; Dv 2 - 82,000; 1 Year Warranty
PARTS: M/B : Intel Atom/Asrock/Foxcon/Asus/Long tron; HDD : 320 Sumsung/ 500 Sumsung; PRO : 2.6 Dual/ 2.93 C.2duo; DVD WRITER : Sum/Sony Asus; MONITER : hp'17'/Hp'19'Dell'16'/'15' OEM; RAM : 1GB (800Mhz) Kington 1GB(800)Transend; WOOFER : EACAN510
கணனி நிறுவனங்களுக்கு மேலும் விலைக்கழிவு
NALIN Information Technologies Pvt Ltd
TP : 0212221166 , 0777667974 email : nalinpvt@nalininfotech.com 44/3A மணத்தறை லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# யாழ்.மாவட்டத்தில் இன்றும் நாளையும்(ஒக்ரோபர் 18ஆம் 19 ஆம் திகதிகளில்) நடைபெறும் உள்ளூராட்சி மாநாட்டுக்கான வாழ்த்துச் செய்திகள்



வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் உள்ளூராட்சி மாநாட்டிற்கான செய்தியொன்றை அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இலங்கையானது புதிய சமாதான காலத்தினுள் பிரவேசிக்கும் இக்காலகட்டத்தில் முக்கியமாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களுக்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து சிறந்ததொரு வாழ்க்கைத் தரத்தை வழங்குவது எமது கடமையாகும். இப் பகுதிகளில் புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணம் என்ற செயற்பாட்டில் உள்ளூராட்சி நிர்வாகத்தின் பங்கு மிகவும் முக்கியமானதொன்றாகும் .எனவே வடமாகாண ஆளுநர் அலுவலகத்தினால் இக்கால கட்டத்தினுள் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த உள்ளூராட்சி மாநாடானது பாராட்டுக்குரியதாகும். இதன் மூலம் மக்கள் பிரதி நிதிகள், நிர்வாகத்தினர் மற்றும் இதனோடிணைந்த புத்திஜீவிகள் தமது அறிவுகளை மற்றவர்களுடன் பகிர்ந்து வடமாகாண மக்களின் வளமான வாழ்விற்கு சேவை செய்யக்கூடிய சந்தர்ப்பத்தினை வழங்குகின்றது.

எமது அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் உள்ளூராட்சி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உள்ளூராட்சி செயற்பாட்டினை சிறந்த முறையில் நடைமுறைப் படுத்துவதற்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மூலம் வழிகாட்டலினை வழங்கியிருக்கிறது.2007 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்ட உள்ளூராட்சி சம்பந்தமான தேசியக் கொள்கை தொடர்பான பல நோக்கு தந்திரோபாயங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இம்மக்களுடைய வாழ்வாதாரம் மீளமைக்கப்பட்ட சமூக வாழ்க்கை மற்றும் நீடித்த தன்மையுடைய சமாதானத்துக்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து சேவையாற்றுவோம். இந்த உள்ளூராட்சி மாநாடானது சிறப்புற எனது வாழ்த்துக்கள்.

மாண்புமிகு கௌரவ ஜனாதிபதி
மஹிந்த ராஜபக்ஷ



வடமாகாணத்தில் உள்ளூராட்சி மற்றும் ஜனநாயக விழுமியங்களை வலுப்பெறச் செய்யும் நிகழ்வாக அமையும் உள்ளூராட்சி மாநாட்டுக்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மாநாடானது உள்ளூர் ஆளுகை தொடர்பான செயன்முறைகளின் முக்கியத்துவத்தை மக்களிடையே கொண்டு செல்வதில் மிகவும் பயன் வாய்ந்ததொன்றாக அமைவதுடன் முக்கிய துறை சார்ந்த முகவர்களான விவசாயம், கைத்தொழில், கூட்டுறவு, சுகாதாரம், கல்வி என்பன உள்ளூராட்சி ஆளுகை என்ற குடையின் கீழ் ஒன்றுபட்டு செயல்படுவதற்கு வாயிலாக அமையும் என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி,ஆளுநர்,வடமாகாணம்.



வடமாகாண உள்ளூராட்சி மாநாடு யாழ்.மாவட்டத்தில் நடைபெறுவதையிட்டு பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். இம்மாநாடு முப்பது வருடங்களுக்குப் பிறகு முதல் தடவையாக நடைபெறுவது குறிப்பிடத் தக்கதாகும்.

வடமாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் எமது மக்கள் உயரிய சேவையைப் பெற்றுக்கொள்வதற்கும் அம்மக்களுக்குரிய சேவைகளை உரியமுறையில் உள்ளூராட்சி நிறுவனப் பணியாளர்கள் வழங்குவதற்கும் இவ்வாறான மாநாடுகள் பெரிதும் உதவியாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. ஏற்கனவே யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கும் எமது மக்கள் அமைதிச் சூழ்நிலைக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் தற்போதைய காலகட்டத்தில் அம்மக்களுக்குரிய சேவைகளை உயர்ந்த பட்சம் வழங்குவதற்கு எமது உள்ளூராட்சி நிறுவனங்கள் துரித செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டி இருக்கிறது.

தற்போது அரசியல் தலைமைத்துவங்கள் இன்றி செயற்பட்டு வருகின்ற வடக்கின் பல உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான தேர்தல்கள் விரைவில் நடத்தப்படவுள்ள நிலையில் அதுவரையில் எமது மக்களுக்கான பணிகளை சிறப்பாக மேற்கொள்ள இம்மாநாடு பெரிதும் உதவியாக இருக்கட்டும் என வாழ்த்துகிறேன்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா
சமூகசேவைகள் மற்றும்
சமூக நலத்துறை அமைச்சு.



யாழ். மாவட்டத்தில் 18 ஆம், 19ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மாநாட்டிற்கான எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். இம்மாநாட்டின் மூலம் மூன்று தசாப்த காலத்தின் பின்னர் நல்லொழுங்கு விதிகளை எமது நாட்டில் உள்ளூ சகல துறையினருடனும் பகிர்வதற்குரிய வாய்ப்பு கிடைத்திருக்கின்றது. இம்மாநாட்டின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கத்தினை அடைவதற்கு எனது மன மார்ந்த வாழ்த்துக்கள்

கௌரவ அமைச்சர் ஜானக பண்டார
தென்னக்கோன்
உள்ளூராட்சி மாகாண சபைகள்
அமைச்சு.



உள்ளூர் மட்ட சனநாயக வழிமுறைகளின் சிறப்பம்சங்கள் பிராந்தியத்திலுள்ள சகல அமைப்புக்களிடையேயும் பகிரப்பட வேண்டியது அவசியமானது. இதன் மூலம் பிராந்திய வேறுபாடுகள் களையப்பட்டு சிறந்த நல்லொழுங்குகள் எல்லோராலும் புரிந்து கொள்ளப்பட வாய்ப்பு உருவாகும்.

இந்த வாய்ப்பு சரியான முறையில் பயன்படுதத் தப்படின் மக்களிடையேயான நல்லுறவு வலுப்பெறும். இத்தகைய முயற்சிகளுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான அரிய முயற்சியாக வடமாகாண உள்ளூராட்சி மாநாடு 2009 அமைவதற்கான முயற்சிகளைக் காண்கின்றேன்.

இம் முயற்சி தனது குறிக்கோளை செவ்வனவே அடைய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

ஏ. சிவசுவாமி
பிரதம செயலாளர்,
வடக்கு மாகாணம்.



வடமாகாணத்தின் உள்ளூர் மட்டத்திலான சமூக, பொருளாதார, கலாசார, அபிவிருத்தி மற்றும் ஆளுகை செயலாற்றுகை என்பவற்றை மீளவும் விரைவாக வலுப்படுத்துவதற்குரிய சிறந்ததொரு சூழலை தோற்றுவிக்கும் நிகழ்வாக உள்ளூராட்சி மாநாடானது விளங்கும் என்பதில் ஐயமில்லை. பல்வேறு துறையின ரும் இணைந்து நடத்த இருக்கும் இம் மாநாடு வெற்றி கரமாக அமைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ர.விஜயலட்சுமி
செயலாளர்,
உள்ளூராட்சி கூட்டுறவு அபிவிருத்தி ,
கைத்தொழில்,
கிராம அபிவிருத்தி,
சமூக நலத்துறை அமைச்சு,
வடமாகாணம்.

(சி-561479)

# இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்துள்ளது; இளைஞர்கள் அபிவிருத்திப் பணியில்இணைய வேண்டும்

## யாழ்.வந்த சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஒக்.18

இலங்கையில் யுத் தம் முடிவடைந்து புதிய அத்தியாயம் ஒன்று தொடங்குகிறது. யாழ்ப்பாண இளைய சமுதாயத்தினர் அபிவிருத்திப்பணிகளில் இணைய வேண்டும்.

சிங்கப்பூர்வெளிநாட்டமைச்சர்ஜோர்ஜ் யோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.நூலகத்துக்கு நேற்று வருகை தந்த அவர் அங்கு உரையாற்றுகையில் இப்படிக் கூறினார்.

சிங்கப்பூர் வெளிநாட்டமைச்சர் ஜோர்ஜ் யோ நேற்றையதினம் யாழ். நூலகத்துக்கு விஜயம் செய்து நூலகத்தைப் பார்வையிட்டதுடன், நூலக அபிவிருத்தி தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

சிங்கப்பூர் வெளிநாட்டமைச்சரை சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, மாநகர ஆணையாளர் செ.சரவணபவ, யாழ். பொதுநூலக நூலகர் தனபாலசிங்கம் ஆகியோர் வரவேற்றனர்.

யாழ்.நூலகத்தைக் கணனி மயப்படுத்துவதற்குச் சிங்கப்பூர் அரசாங்கம் உதவ வேண்டுமென யாழ்.மாநகர ஆணையாளர் செ.சரவணபவ கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா ஒன்று அமைப்பதற்குச் சிங்கப்பூர் அரசு உதவவேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுக் கொண்டார்.

சிங்கப்பூர் வெளிநாட்டமைச்சர் தனதுரையில், இது ஒரு வர லாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஜயம் எனக்குறிப்பிட்டார்.

அத்துடன் யாழ்ப்பாண மக்களுக்குத் தனது தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார். சிங்கப்பூர் வெளிநாட்டமைச்சர் மேலும் தனதுரையில் கூறியவை வருமாறு:-

யாழ். மக்களின் அறிவுச்சிகரமாக விளங்கிய இந்த எரிக்கப்பட்ட நூலகத்துக்கு விஜயம் செய்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இப்போது யுத்தம் முடிவடைந்துவிட்டது. இப்போது ஒரு புதிய அத் தியாயம் தொடங்குகிறது. யாழ்ப்பாண இளைய சமுதாயமும் தமது அறிவுத்திறனை விருத்தி செய்து கொண்டு உலக மயமாதலுடன் இணைந்து அபிவிருத்தி செய்ய வேண்டும். எனது வருகையின் அடையாள மாக 500 நூல்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விடம் கையளிக் கிறேன் - என்றார். யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஷ், வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளை ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (1-111-120)

# முதியோர் மாற்று ஆற்றலுடையோர் தின விழா இன்று

சண்டிலிப்பாய் பிரதேச செயல கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச முதி யோர் மாற்று ஆற்றலுடையோர் தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அர சாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து கொள்வார். முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. கலை நிகழ்வுளும் முதியோரைக் கௌரவித்தல் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (201-100)

# நுழைவாயில் கட்டடம் திறப்பு விழா நாளை

யாழ்ப்பாணம், ஒக்.18

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அமரர் சியாமளா இரவிச்சந்திரன் நினைவாக நிர்மாணிக்கப்பட்ட நுழைவாயில் கட்டடம் நாளை திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.



யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த சிங்கப்பூர் வெளிவிவகார அமைசசர் ஜோர்ச் யோ, யாழ்.நூலகத்துக்கு சென்றார். பிரதம நூலகர் எஸ்.தனபாலசிங்கம் நூலகத்தை காட்டுவதையும் அங்கு நடந்த நிகழ்வில் அமைச்சர் உரையாற்றுவதையும், ஒரு தொகுதி நூல்களை அமைச்சர் டக்ளஸ் தேவாந்தாவிடம் அவர் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

மேடையில் சிங்கப்பூர் அமைச்சருக்கு அருகில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் காணப்படுகின்றனர். (படங்கள்:லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாந்திபேதி நோயாளிகளை தொட்டுத்தூக்கி சேவை புரிந்தார் நாவலர் பெருமான்

ஒக்ரோபர் வாந்திபேதி மாதம்

பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் மக்கள் அடிக்கடி வாந்திபேதி தாக்கத்திற்கு ஆளானார்கள். என்ன காரணமோ தெரியவில்லை ஒக்ரோபர் மாத்திலேயே மக்களை வாந்திபேதி தாக்கியுள்ளது. வாந்திபேதி இந்தியாவிலிருந்து வந்தவர்கள் மூலமே பரவியதாகக் கூறப்படுகிறது.

1866 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வடமாகாணத்தில் வாந்திபேதியின் தாக்கத்தினால் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். சரியாகப் பத்து வருடங்களின் பின்னர் 1876 ஒக்ரோபரில் மீண்டும் வாந்திபேதி தாக்கியது. 1876-77 காலப்பகுதியில் வாந்திபேதியால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 20 ஆயிரம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. யாழ்.மாவட்டத்தில் வாந்திபேதி காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை சுமார் 7000.

வாந்திபேதி காலத்தில் மானிப்பாய் வைத்தியசாலையை ஸ்தாபித்த மருத்துவர் கிறீனும், நாவலரும் வாந்திபேதி நோயாளிகளுக்கு அளப்பரிய சேவையாற்றியுள்ளனர். வாந்திபேதி காலத்தில் நாவலரின் சேவைபற்றி ஈழநாடு பத்திரிகையில் பிரசுர மாகியிருந்த கட்டுரையொன்றில் தரப்பட்டிருந்த குறிப்பை அப்படியே தருகிறேன்.

**இன்றும் நினைவில் கொள்ள.... அன்றைய ஞாபகம் இங்கே......!**

வாந்திபேதி சிகிச்சை நிலையம் குருநகரில் அமைந்திருந்தது. சிகிச்சை நிலைய வாசலில் எண்ணெய் வடியும் தேகத்துடன் ஒரு கரிய நாட்டுக்கட்டை சேர்ட்டும் அணியாமல் நின்றது. மருத்துவர் எட்டிப் பார்த்தார், வந்தவர் ஏதோ நிவாரணம் பெறுவதற்காக வந்திருப்பதாக நினைத்துக் கொண்டு என்ன வேண்டும் என்றார்.

நான் வாந்திபேதியால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குச் சேவை செய்ய விரும்புகிறேன், தூய ஆங்கிலத்தில் பதிலளித்தார் வந்தவர். தன்னை சுதாகரித்துக் கொண்ட மருத்துவர் வந்தவர் சாதாரண ஆளல்ல என்பதை உணர்ந்து கொண்டார். நீங்கள் உங்களது சேவைக்கு எவ்வளவு கட்டணம் எதிர்பார்க்கிறீர்கள் என்றார். நான் பணம் எதையும் எதிர்பார்க்கவில்லை இலவசமாகவே சேவை செய்ய விரும்புகிறேன் என்றார் வந்தவர். நீங்கள் நோயாளிகளை தொட்டுத் தூக்க வேண்டு,.''பரவாயில்லை'' நீங்கள் வாந்திபேதியால் பாதிக்கப்படலாம், 'பரவாயில்லை' உங்களுக்கு மரணம் சம்பவிக்கலாம், ''வாந்திபேதி நோயாளிகளுக்குச் சேவை செய்ததன் காரணமாக எனக்கு மரணம் ஏற்படுமாயின் நான் மகிழ்ச்சியடைவேன்'' சரி உங்கள் இஷ்டம்

நாவலர் வாந்திபேதி நோயாளிகளுக்குச் சேவை செய்ய அனுமதிக்கப்பட்டார். எழுபதுகளின் ஆரம்பத்திலும் (1973 ஆக இருக்கலாம்) ஒருதடவை வாந்திபேதி தாக்கியது. அப்போது சிறிமாவின் ஆட்சிக்காலம். அரச மருத்துவமனைகளில் சிகிச்சை பெறச் செல்பவர்கள் இருபத்தைந்து சத முத்திரை கொண்டு செல்ல வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. மருந்துச் சீட்டில் முத்திரை ஒட்டிய பின்னரே மருத்துவர் பார்வையிடுவார்.

நானும் வாந்திபேதி தடுப்பூசி போடுவதற்காக காங்கேசனன்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குச் சென்றேன். தற்போது சென்றால் நேர்ஸிங் ஹோமில் கடமையாற்றும் மருத்துவர் தெய்வேந்திரா காங்கேசந்துறை சுகாதார வைத்திய அதிகாரியாக இருந்தார். வாந்திபேதி தடுப்பூசி போடுவதற்கு முத்திரை தேவையில்லை எனக்கூறி முத்திரையை திருப்பித்தந்து விட்டார்.

**தாண்டவன்**

# வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 22 ★ 02 ★ 1943 |  | 19 ★ 09 ★ 2009 |

## அமரர் முருகன் பரமானந்தம்

கடந்த 19.09.2009 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவி புரிந்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், இரங்கல் உரையாற்றியவர்களுக்கும் இறுதிச்சடங்கிலும் இறுதி ஊர்வலத்திலும் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, நாளை (19.10.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*ஜயபரதேவி இல்லம்,* (90025) தகவல்: மனைவி,
*நவாலி வடக்கு, மானிப்பாய்.* பிள்ளைகள், மருமக்கள்.

# தென்மராட்சியில் முக்கிய 5 வீதிகளை அகலமாக்குவதற்கு திட்டம் முன்னெடுப்பு

## மக்களிடம் ஒத்துழைப்புக் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஒக்.18

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து வீதிகள் அகலமாக்குவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எழுது மட்டுவாள் - நாவற்குழி, ஏ-9 வீதி, நாவற்குழி - கேரதீவு வீதி, சரசாலை - புலோலி வீதி, கச்சாய் - புலோலி வீதி, வேம்பிராய் - வரணி வீதி ஆகியவையே அகலமாக்கப்படவுள்ளன.

இவ் வீதிகளைப் பயன்படுத்தும் மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் ஆகியவற்றுடனான கலந்துரையாடல் அண்மையில் பிரதேச செயலகமண்டபத்தில் நடைபெற்றது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஏற்பாட்டில் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

வீதி அகலமாக்கல் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் இதனுள் அடங்கும் வேலிகள், கட்டடங்கள் ஆகியவற்றை அகற்றி ஒத்துழைக்குமாறு கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

தற்போதுள்ள வீதியின் மத்தியிலிருந்து 6.5 மீற்றர் அகலத்திற்கு வீதி அமைக்கப்படவுள்ளதாகவும், அந்த அளவிலிருந்து ஒரு மீற்றர் தூரம் வரை விஸ்தரிக்குமாறும் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1-207)

## கலைமாணிப் பரீட்சை பெறுபேறு வெளிவந்தது

யாழ்ப்பாணம், ஒக்.18

யாழ்.பல்கலைக் கழகத்தில் 2008 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கலைமாணி பகுதி I - 2005&2006 பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் வெளியாகியுள்ளன.

நாளை தொடக்கம் மாணவர்கள் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொண்டு பரீட்சைப் பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளலாம் என வெளிவாரிப் பரீட்சை இணைப்பாளர் க.சிவராஜா தெரிவித்தார். (1)

# யுத்த வெற்றி குறித்து பிழையான கருத்தை மக்கள் மத்தியில் பரப்புவதற்கு சிலர் முயற்சி

## கோத்தபாய ராஜபக்ஷ குற்றம் சாட்டுகின்றார்

கொழும்பு, ஒக். 18

பயங்கரவாதத்தை முறையடிக்க எதுவித பங்களிப்பையும் வழங்காத சிலர் தற்போது வீரர்களாக மாற முயற்சிக்கின்றனர் - என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்கவால் எழுதப்பட்ட 'சார்ஜ் ஒவ் த லயன்' என்ற நூல் வெளியீட்டு விழா கொழும்பு சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

இராணுவத்தினரால் பெற்றுக் கொடுக்கப்பட்ட வெற்றியை பொய்யாக்குவதற்கு சில தரப்பினர் முயற்சிக்கின்றனர்.

அன்று நாட்டை இரண்டாகப் பிளவுபடுத்த முயற்சித்தவர்களின் சதித் திட்டம் முறியடிக்கப்பட்ட போதிலும் அதனை மற்றுமொரு தரப்பினர் ஈடுசெய்ய முயற்சிக் கின்றனர்,

இராணுவத்தினரின் வெற்றி தொடர்பில் மக்கள் மத்தியில் பிழையான கருத்துக்களை சிலர் முன்னெடுத்து செல்கின்றனர்.

அதனால் தமது உயிர் உடைமைகளை தியாகம் செய்து தீவிரவாதிகளிடமிருந்து நாட்டை மீட்டெடுத்த அனைவரும் ஒன்றிணைய வேண்டும் - என்றார். (அ-சி)

# வாழ்த்துகின்றோம்



யா/ மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவி
*சிவானந்தம் வசந்தகுமாரி*
தம்பதியினரின் செல்வப் புதல்வி

**தேனுஷா**

2009 ஆம் ஆண்டு நடைபெற்ற 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில்பரீட்சையில் 174 புள்ளிகளைப்பெற்று பாடசாலை மட்டத்தில் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளமையை வாழ்த்தி மேலும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டுவாழ ஞானவைரவர் அருளை வேண்டி வாழ்த்துகிறோம்.

*மீசாலை வடக்கு,* வாழ்த்துவோர்:
*கொடிகாமம்.* (90001) சி.குணநாயகம் (தாத்தா) தம்பதியினர்

# வீடு விற்பனைக்கு

கல்வயல், பெருங்குளம், மட்டுவில் வீதியில் 5 பரப்பு 6 குளி காணியில் அமைந்த சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

**தொடர்புகட்கு : 0776305274, 0724923194**

# Book Keeping, Audit சேவை

யாழ்.நகரில் Book Keeping, Audit மற்றும் Vat உட்பட சகல வரி சேவைகளும் செய்து கொடுக்கப்படும்.

**தொடர்புகட்கு : 0773746884, 0714603362**

# தவறிவிட்டது

மாசியப்பிட்டி அளவெட்டி எனும் முகவரியைச் சேர்ந்த கதிர்காமலிங்கம் மாலினி என்பவருடைய தே.அ. அட்டை (565982508V) நீதிமன்ற வீதி, மல்லாகத்தில் [illegible] ஜனாபாம், மல்லாகம் சந்தை, மல்லாகம் எனும் முகவரியில் [illegible] ஒப்படைக்கவும் உரிய சன்மானம் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா அருணகிரிநாதன்



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா அருணகிரிநாதன் கடந்த 14.10.2009 புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா-மகேஸ்வரியின் மருமகனும் அமராவதியின் அன்புக் கணவரும் மதனராஜ் (டோகா), கோபிராஜ், ராஜி (2011 யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி), கபிலராஜ் (2011 யா/அருணோ தயக்கல்லூரி, அளவெட்டி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2009) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கேணிக்கரை,*
*அளவெட்டி கிழக்கு,* தகவல் :
*அளவெட்டி.* (90019) குடும்பத்தினர்.

## வைரவன் நாகலிங்கம்



(முன்னாள் பட்டினசபை உறுப்பினர், சங்கானை)

சங்கானை, நிற்சாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரவன் நாகலிங்கம் நேற்று (17.10.2009) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், ஜீவன் (ஆசிரியர், உரும்பிராய் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்), கிருபாகரன் (சங்கானை), ஸ்ரீராம் (மட்டுவில், இ.போ.ச. முகாரி, கோண்டாவில்) ஆகியோரின் தந்தையும் நிர்மலா (உரும்பிராய்), ஸ்ரீமதி (ஏழாலை), வளர்மதி (மட்டுவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நிற்சாமம்,* தகவல்:
*சங்கானை.* (90023) குடும்பத்தினர்.

## தம்பிப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை



பருத்தித்துறை, வராத்துப்பளையைச் சேர்ந்த திருமதி தம்பிப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை கடந்த (17.10.2009) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மாணிக்கம் - முத்தம்மா தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்ற தம்பிராஜா மற்றும் நாகரத்தினம், சந்திரகாந்தி அம்மா ஆகியோரின் சகோதரியும் சிறீஸ்கந்தராஜா (லண்டன் - சட்டத்தரணி), சிறீஸ் செல்வராஜா (விரிவுரையாளர்-கொழும்பு), சிறீஸ்சந்திரராஜா (ஆசிரியர் - கனடா), இராஜேஸ்வரி (கொழும்பு), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் சந்தணம் மைக்கல் (கொழும்பு), காளியன் பொன்னையா (பருத்தித்துறை), பவானி (லண்டன்), சிறியாணி (கொழும்பு), மரியறஞ்சிதம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் திவ்வியா (லண்டன்) ஐஸ்வர்யறஜீத் (லண்டன்), மனோச் நிதர்சன் (லண்டன்), ரவிசான் (கொழும்பு), டிலோசான் (ஈராக்), டிலோசினி (கொழும்பு), புவியரசன் (கனடா), அபிதா (பருத்தித்துறை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் றமியன் (லண்டன்), நேத்தன் (லண்டன்), உதுல (கொழும்பு) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17.10.2009) பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வராத்துப்பளை,* தகவல்: பிள்ளைகள்,
*பருத்தித்துறை.* (சி/561478) பொன்னையா (மருமகன்).